பக்கங்கள்: பதி...

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 மாசி 13 புதன்கிழமை (25-02-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:91

196 நாடாளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றுவதற்கு

# தேர்தல் களத்தில் 24 அரசியல் கட்சிகளும்

# மொத்தம் 200 சுயேச்சைக் குழுக்களும்!

## யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய 21 மாவட்டங்களிலும் ஐ.தே. முன்னணியும், சுதந்திரக் கூட்டணியும் போட்டி

கொழும்பு,பெப்ரவரி25

**மொத்தமுள்ள 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் தேசியப் பட்டியல் உறுப்பினர்கள் 29 பேர் தவிர எஞ்சிய 196 பேரையும் நாட்டின் 22 மாவட்டங்களிலிருந்தும் தெரிவுசெய்வதற்கான தேர்தலில் போட்டியிடுவதற்கு 24 அரசியல் கட்சிகளும் 200 சுயேச்சைக் குழுக்களும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன. 6ஆயிரத்துக்கும் அதிகமான வேட்பாளர்கள் களத்தில் குதித்துள்ளனர். கடந்த 17 ஆம் திகதி ஆரம்பமான வேட்புமனுத் தாக்கல் நேற்று நண்பகல் 12.30 மணிக்கு முடிவடைந்தது.**

பிரதான அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசிய முன்னணியும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியும் யாழ். மாவட்டம் தவிர்ந்த ஏனைய 21 மாவட்டங்களிலும் தமது வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன.

கொழும்பு மாவட்டத்தில் 17 கட்சிகளும் 11 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. இங்கு 644 பேர் மோதுகின்றனர். ஐக்கிய தேசிய முன்னணி 4 தமிழர்களையும், 3 முஸ்லிம்களையும் -

சுதந்திரக் கூட்டணி ஒரு தமிழரையும் இரண்டு முஸ்லிம்களையும்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்தில் எட்டுக் கட்சிகள் மோதல்; வரதர் அணி – ஈ.பி.டி.பி. இணைந்து போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.25

எதிர்வரும் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் எட்டு அரசியல் கட்சிகளும், இரண்டு சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. ஈ.பி.டி.பி. தனது வேட்பு மனுவை நேற்றுமுற்பகல் 11 மணிக்குத் தாக்கல் செய்தது.

அக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான வி.கே.குகேந்திரன், எஸ்.சிவதாசன் மற்றும் க.மணி பல்லவராஜன் ஆகியோர் வேட்பு மனுவைத் தாக்கல் செய்தனர்.

இத்தேர்தலில், மாவை சேனாதிராஜா தலைமையில் தமிழ்க் கூட்டமைப்பும் - டக்ளஸ் தேவானந்தா தலைமையில் ஈ.பி.டி.பி. - ஈ.பி.ஆர்.எல்.எவ. (வரதர் அணி) கூட்டமைப்பும் -

வீ.ஆனந்தசங்கரி தலைமையில் சுயேச்சைக்குழு ஒன்றும் -

அ.குமாரசுவாமி தலைமையில் புதிய இடதுசாரி முன்னணியும் -

இ.குலசேகர தலைமையில் சுயராஜ்யக்கட்சியும் -

சு.நகுலராஜ் தலைமையில் ஐக்கிய சோஷலிசக்கட்சியும் -

சுல்தான் சுபியான் தலைமையில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் -

திருமாரசன்ன சலிந்த மெண்டிஸ தலைமையில் ருகுனு மக்கள் கட்சி

(16 ஆம் பக்கம் பார்க்க)



# தமிழ்த் தேசியத்தை வலுப்பெறச் செய்யும் நோக்குடன் களத்தில் நிற்கும் கூட்டமைப்புக்கே புலிகள் ஆதரவு

## யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி அறிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.25

தமிழ்த்தேசியத்தை வலுப்பெறச் செய்யும் ஒரே நோக்குடன் தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்க ஒரே அணியில் - ஒரே தலைமையில் - ஒரே கொள்கையில் - தமிழ்க் கூட்டமைப்பு இந்தத் தேர்தலில் நிற்கின்றது. இதனால் கூட்டமைப்புக்கு விடுதலைப் புலிகள் ஆதரவு வழங்குகின்றனர்.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுத் தேர்தலில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு தொடர்பாகச் செய்தியாளர்களுடன் அவர் நேற்று நடத்திய கலந்துரையாடலின் போது இதனை அறிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தல் தொடர்பாக விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டை முன்பே விளக்கமாகத் தெரிவித்துவிட்டனர். இலங்கை அரசமைப்புச் சட்டங்கள் தமிழ்மக்களுக்கு ஏற்புடையவையல்ல அவை மூலம் தமிழர்களுக்கு விமோசனம் கிடைக்க மாட்டாது என்பதே எமது மாறாத கருத்து தேர்தல் தொடர்பாகவும் நாம் இதேகருத்தைத் தான் கொண்டிருக்கிறோம். ஆயினும் யதார்த்தமான இன்றைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டுள்ளோம்.

**செல்வாவின் தீர்க்க தரிசனம்**

76 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டையில் நடத்திய மாநாட்டில் கலந்து கொண்ட அறிஞர்கள், அரசியல் தலைவர்கள் தன்னாட்சி உள்ள தமிழீழமே தமிழர் பிரச்சினைக்குத் தீர்வென முடிவு செய்தனர்.

அதன்பின் தந்தை செல்வா நாடாளுமன்றத்தில், "சிங்களவர் தமிழ மக்களை அடக்கி ஆள விரும்புகிறார்கள் அதற்கு எதிராக நாம் அஹிம்சை

(2ஆம் பக்கம் பார்க்க)

தேர்தல் நடவடிக்கைகளின்போது

## புரிந்துணர்வு உடன்படிக்கை சிதையாது அரசியல் கட்சிகள் பாதுகாக்கவேண்டும்

### பிரிட்டிஷ் அமைச்சர் வலியுறுத்து

லண்டன்,பெப்.25

தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அரசியல் கட்சிகள் புரிந்துணர்வு உடன்படிக்கை சிதைந்துவிடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் மைக் ஒப்ரேன் வலியுறுத்தியுள்ளார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி இரண்டு வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில் இங்குள்ள நிலைமைகள் தொடர்பாக ஆராய்வதற்கென லண்டனில் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸனும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டார்.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கு அடிப்படையாக விளங்கிவருவது புரிந்துணர்வு உடன்படிக்கைதான். எனவே, அதில் பாதிப்புக்கள் ஏதும் ஏற்பட்டால் அது முழு -

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கடலில் வீசப்பட்டவர் மீட்கப்படவில்லை!

கரவெட்டி,பெப்.25

வடமராட்சிக் கடலில் வைத்து நேற்றுமுன்தினம் இந்திய மீனவர்களால் வெட்டிக்கடலில் வீசப்பட்டார் என்று கூறப்படும் இரத்தினம் சிவானந்தன் (வயது 38) என்பவர் நேற்று மாலை வரை மீட்கப்படவில்லை.

வடமராட்சி மீனவர்கள் 13 படகுகளில் நேற்றுமுழுவதும் இவரைத் தேடும் பணியில் ஈடுபட்டனர். ஆனால், நேற்றுமாலை வரை அவரைக் கண்டு பிடிக்க முடியாமல் அவர்கள் கரை திரும்பினர். (ஒ-4-70)

## கொழும்பில் 'மகளிர் மட்டும்!'

கொழும்பு மாவட்டத்தில் தேசிய மக்கள் கட்சியின் சார்பில் தனியாகப் பெண்கள் அணியொன்று தேர்தல் களத்தில் குதித்துள்ளது.

ஷர்மிளா உதயாங்கனி தலுவத்தை என்ற யுவதியின் தலைமையில் 23 பெண்கள் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். நேற்றுக்காலை இவர்கள் கொழும்பு செயலகத்தில் தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர்.

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் பெண்கள் மாத்திரமே இடம்பெறும் வேட்புமனுவொன்று ஒரு கட்சியின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

## புலிகளின் பகுதிகளில் வாக்களிப்பு: ஐரோப்பிய ஒன்றியம் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.25

வடக்கு - கிழக்கில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் வாக்களிப்பு நிலையங்களை அமைப்பது தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் உள்ள மக்கள் வாக்களிக்க வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதில் பல சிக்கல்கள் தோன்றியுள்ளன.

ஸ்ரீலங்கா பொலீஸாரின் பாதுகாப்புடனேயே வாக்களிப்பு நிலையங்கள் செயற்படவேண்டும் என்பது தேர்தல் சட்டமாகும். ஆனால், இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் ஸ்ரீலங்கா பொலீஸார் சென்று பணிபுரியும் வாய்ப்பு குறைவாக உள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்நிலையில், அந்தந்தப் பிரதேசத்தில் வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதற்கான வாய்ப்புக் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளுடன் ஆராய்ந்துள்ளது.

இதுவிடயமாகத் தமது நிலைப்பாட்டை விடுதலைப் புலிகள் ஐரோப்பிய ஒன்றியத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

இதுதொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் அதிகாரிகள் தேர்தல் ஆணையாளருடனும் ஆராய்ந்தனர் என்று கூறப்படுகிறது. (ஒ-3)

## பிக்குகள் கண்டனம்

கொழும்பு,பெப்.25

ஜாதிக ஹெல உறுமய கட்சி பௌத்தக் கொடியை அரசியல் தேவைகளுக்காகப் பயன்படுத்துவதைப் பௌத்த பிக்குமார் அமைப்பு ஒன்று கடுமையாகக் கண்டித்துள்ளது.

அரசியல் லாபத்துக்காக ஜாதிக ஹெல உறுமய கட்சி பௌத்த கொடியைப் பயன்படுத்தி மக்களைத் திசை திருப்புவதாகவும் அந்த அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது (ஒ-4)



இலவச ஆயுள் காப்புறுதிக் காப்பு!

தேசிய சேமிப்பு வங்கியின் ஏதாவது ஒரு சேமிப்புக் கணக்கில் 180 நாட்களுக்கு கூடுதலாக குறைந்தபட்சம் 20,000 ரூபாவை அல்லது அதற்குக் கூடுதலாக வைத்திருத்தல்.

- இயற்கை மரணம் - வைப்பில் உள்ள தொகைக்கு சமமான தொகை வழங்கப்படும். என்றாலும் ஆகக் கூடிய தொகையாக ரூபா.50,000 மாத்திரமே வழங்கப்படும்.
- விபத்து மரணம் - வைப்பில் உள்ள தொகைக்கு சமமான தொகை வழங்கப்படும். என்றாலும் ஆகக் கூடிய தொகையாக ரூபா.500,000 மாத்திரமே வழங்கப்படும். (இச்சலுகைக்கு தகுதியான வயதெல்லை 18-70 வருடங்கள்)

NSB தேசிய சேமிப்பு வங்கி



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்றுப் பிற்பகல் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர். இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட கூட்டமைப்பு வேட்பாளர்களையும் கலந்துரையாடலில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். *(படம்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# மக்கள் ஆதரவு கிட்டுமென நம்பியே யாழ்.மாவட்டத்தில் மு.கா.போட்டி!

## முதன்மை வேட்பாளர் சுபியான் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.25

யாழ்மாவட்ட மக்கள் ஆதரவு தருவார்கள் என்ற நம்பிக்கையுடனேயே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இங்கு போட்டியிடுகிறது.-

இப்படித் தெரிவித்தார், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளரும் முஸ்லிம் மக்கள் பணிமனைத் தலைவருமான எஸ்.சுபியான்.

நேற்று மாலை தனது அலுவலகத்தில் செய்தியாளர்களுடனான சந்திப்பொன்றை சுபியான் நிகழ்த்தினார். அப்போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

யாழ்மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடுவதாக முன்பு எண்ணவில்லை. நாம், தமிழ்க் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடுவது குறித்தே சிந்தித்தோம். இணைந்து போட்டியிடுவதன் மூலம் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என்று நம்பினோம். ஆனால், அது முடியாமல் போய்விட்டது. இதனால், நாம் ஆழ்ந்த கவலை அடைந்தோம். முஸ்லிம்களினதும் தமிழர்களினதும் பிரச்சினைகள் ஒன்றுடன் ஒன்று பிணைந்துள்ளன இவற்றில் எந்த ஓர் இனத்தினதும் பிரச்சினைக்குத் தனித்து தீர்வு காண முடியாது. இந்த அடிப்படையில் எமது பிரச்சினைகள் குறித்துத் தமிழ் அரசியல் வாதிகள் குரல் எழுப்புவதாகத் தெரியவில்லை. இதனால், முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் யாழ்.மாவட்டத்தில் வேப்பு மனுக்களைத் தாக்கல் செய்வது குறித்த தீர்மானத்தை கடந்த 2 நாள்களுக்கு முன்னரே மேற்கொண்டோம். இதுதொடர்பாக விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியுடன் பேசினோம். இதுதொடர்பில் எதிர்காலத்தில் சில விடயங்கள் சீர் செய்யப்படும் என அவர் எம்மிடம் தெரிவித்தார்.

நாட்டின சகல மக்களுடைய பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும். அவர்களின் உரிமைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு சமாதானம் நிலவ வேண்டும். இதுவே எமது கட்சியின் குறிக்கோள் எமக்கு தமிழ் மக்கள் பூரண ஆதரவைத் தருவார்கள் என்று நம்புகின்றோம் - இப்படி அவர் கூறினார். (ஒ-6-9)

## நூல்வெளியீடு

யாழ்ப்பாணம்,பெப்.25

யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்மன்றத்தின் 'தமிழோசை' நூல் வெளியீட்டு விழா, இன்று புதன்கிழமை பிறபகல் 3 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. (ஒ-9)

## மாணவர்களுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.25

வடமாநில இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் கடந்த வருடம் சமய தீட்சை பெற்றுக்கொண்ட மாணவர்கள் மற்றும் வறியமாணவர்களுக்கு மேற்படி மன்றத்தினால் பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் கலந்துகொண்டு மாணவர்களுக்கான உபகரணங்களை வழங்கவுள்ளார்.

சமயப்பெரியார்களின் சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளன. (ஒ-4)

# பொதுத்தேர்தல் களத்தில் ஐந்து முதலமைச்சர்கள்

மாகாண சபைகளின் ஏழு முதலமைச்சர்களில் ஐவர் இம்முறை பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்றார். எச்.ஜி. சிறிசேனா மாத்தறை மாவட்டத்திலும், மேல் மாகாண முதலமைச்சர் றெஜினோல்ட் குரே கொழும்பு மாவட்டத்திலும் போட்டியிடுகின்றனர்.

சப்பிரகமுவ முதலமைச்சர் மொஹான் எல்லாவெல இரத்தினபுரி மாவட்டத்திலும், ஊவா முதலமைச்சர் ஏ.எம்.புத்ததாச பதுளை மாவட்டத்திலும், வடமேல் மாகாண முன்னாள் முதலமைச்சர் அத்துல விஜேசிங்க குருநாகல் மாவட்டத்திலும் போட்டியிடுகின்றனர்.

வடமத்திய மாகாண முதலமைசசர் பேர்ட்டி பிரேமலால் திஸாநாயக்கவும், மத்திய மாகாண முதலமைச்சர் வசந்த அலுவிகாரையும் மட்டுமே இம்முறை போட்டியிடவில்லை.

## நாரந்தனையில் திறப்புவிழாவும் கண்காட்சியும்

நாரந்தனை புனித இராயப்பர் சின்னப்பர் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக் கட்டடத் திறப்பு விழாவும் தையல் கண்காட்சியும் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு திருமதி. ம.அமலா தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் ஜே.எக்ஸ்.செல்வநாயகமும், பிரதம விருந்தினராக விடுதலைப் புலிகளின் தீவக அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.அருந்தவமும் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-10)

# குடாநாட்டு மெய்வல்லுநர்களுக்கு வெளிநாட்டு நிபுணர்கள் பயிற்சி

யாழ்ப்பாணம்,பெப்.25

குடாநாட்டில் மெய்வல்லுநர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக வெளிநாட்டு நிபுணர்கள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

குறுந்தூர ஓட்டம் தொடர்பான பயிற்சிகளை அளிக்க உக்ரைன் நாட்டைச் சேர்ந்த பயிற்றுநர் டீ.மா. மொனியாசிவ், இடைத்தூர ஓட்டம் தொடர்பான பயிற்சிகளை அளிக்க உக்ரைன் நாட்டைச் சேர்ந்த பயிற்றுநர் மிசோலா பக்லநோவ், மைதான நிகழ்வுகள் தொடர்பான பயிற்சிகளை அளிக்க பிரிட்டனைச் சேர்ந்த பயிற்றுநர் அலக்ஸ் வினோக்கா ஆகியோரே யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

யாழ்பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் மெய்வல்லுநர்களுக்கு அவர்கள் நேற்றுப் பயிற்சி அளித்தனர்.

இவர்கள் விடுதலைப் புலிகளின் யாழ்மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பருதியைச் சந்தித்து யாழ்மாவட்ட விளையாட்டுத்துறை மேம்பாடு தொடர்பாகவும் ஆராய்ந்தனர்.

கடந்த சில தினங்களாக கிளிநொச்சியில் தங்கியிருந்த இவர்கள், அங்கு நடைபெறும் தமிழீழத் தேசியப் பெருவிளையாட்டு விழாவையும் பார்த்தனர். (ஒ-3)

# மக்கள் வங்கியின் நீடித்த கிளை இணுவிலில் மார்ச் 1முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.25

மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளை, தனது நீடித்த வங்கிக் கிளை ஒன்றை இணுவிலில் ஆரம்பிக்கவுள்ளது. இக் கிளையின் செயற்பாடுகள் எதிர்வரும் முதலாம் திகதி திங்கட் கிழமை முதல் இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக உள்ள கட்டடத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மக்கள் வங்கியின் யாழ்.கன்னாதிட்டிக் கிளை முகாமையாளர் ஏ.குகதாஸன் தெரிவித்தார். இந்த நீடித்த கிளையில் முதற்கட்டமாக நடமாடும் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். இணுவிலில் மேற்படி நீடித்த கிளை அமைவதன் காரணமாக இணுவில், கோண்டாவில், தாவடி, கொக்குவில், சுதுமலை, உடுவில் மற்றும் மருதனார்மடம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் தமது வங்கி அலுவல்களை இலகுவாகப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும்.

மக்கள் வங்கிக் கிளை ஒன்றின் கீழ் செயற்படுத்தப்படுவதே நீடித்த கிளை எனக் குறிப்பிடப்படுகிறது. (ஒ-9)

# வன்னியில் ஆறு இடங்களுக்கு 10 கட்சிகள், 9 குழுக்கள் போட்டி

வவுனியா,பெப்.25

வன்னி மாவட்டத்தில் ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு 10 அரசியல் கட்சிகளும், 9 சுயேச்சைக்குழுக்களும் போட்டியிடுகின்றன. இவற்றில் மொத்தம் 171 வேட்பாளர்கள் உள்ளனர்.

கடந்த தேர்தலில் 21 முனைப் போட்டி நிலவியது. இத்தேர்தலில் 19 முனைப்போட்டி நிலவுகிறது.

இம்மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக ஈ.பி.டி.பி. நேற்று வவுனியா செயலகத்தில் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தது. வேட்பாளர்கள் வருமாறு: அந்தோனிப்பிள்ளை ஜெயராஜ், சிவன் சிவகுமார், இளையதம்பி ஹரிச்சந்திரன், சஷிரியன் பொனனந்துர்லெமிபட், செபமாலை திசவீரசிங்கம், சிவகுரு சஞ்சீவ்; அந்தோனிப்பிள்ளை கிரிஸ்டி, சுபசிங்க முதியன்சலாகே குமாரசிங்க, குமாரசாமி ஸ்ரனி.

# நிமலராஜன் கொலை வழக்கில் சந்தேகநபருக்குப் பிடியாணை

யாழ்ப்பாணம்,பெப்.25

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை வழக்கின் நான்காவது சந்தேக நபருக்கு யாழ் நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணை நேற்று யாழ் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக கப்பட்ட பொழுதே நீதிவான் இ.த. விக்னராஜா இந்த உத்தரவினை விடுத்துள்ளார்.

அத்துடன், வழக்கு விசாரணையை அடுத்த மாதம் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிவான், வழக்குத் தொடர்பான முன்னேற்ற அறிக்கையை அன்றையதினம் மன்றில் சமர்ப்பிக்குமாறு குற்றப்புலனாய்வுப் பொலீஸ் பொறுப்பதிகாரி ரஞ்சித் டி.சில்வாவுக்குப் பணிப்புரை விடுத்தார். (ஒ-10-7)

# தமிழ் தேசியத்தை வலுப்பெற....

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

வழியில் போராடி வருகின்றோம். அடுத்த சந்ததி ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கும்" என்று கூறினார். 1977 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் தமிழ் மக்கள் தமிழீழத்துக்கு ஆணை வழங்கினார்கள்.

இதன் அடிப்படையில் தலைவர் பிரபாகரன் தமிழ்மக்களின் சுதந்திரத்துக்காக முன்னெடுத்த ஆயுதப் போராட்டம் 30 வருடங்களை அண்மித்துக் கொண்டிருக்கின்றது. இக்காலத்தில் தமிழ்மக்கள் அழிக்கமுடியாத சக்தியாகப் படைபலத்தை நிறுவிப் போராட்டத்துக்கு வலுச் சேர்த்தனர். இந்தப் படைப்பலத்தைத் தமிழ்மக்கள் தமது பலமாகத் தொடர்ந்து தக்க வைக்கவேண்டும்.

### தமிழ்மக்களுக்கு ஏமாற்றம்

இந்தப் பலத்துடன் இழப்புகள் இன்றி விடுதலையை நோக்கி அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்தோம். யுத்தநிறுத்தம், பேச்சு என்று செயற்பாடுகளை நகர்த்தினோம். மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகள் குறித்து முடிவுகள் செய்தோம் ஆனால், 3 சதவீதப் பிரச்சினைகள் கூட இன்னமும் தீர்க்கப்படவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் நிரந்தர ஏற்பாடாகத் தன்னாட்சி அதிகாரம் கொண்ட தீர்வுத் திட்டத்தை முன் வைத்தோம்.

சிங்கள மக்களுக்குப் பாதிப்பு இல்லாமலும் முஸ்லிம் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக் கூடிய வகையிலும் தமிழ்மக்களுக்கு தீர்வைத் தரக கூடியதாகவும் உள்ள இடைக்கால வரைவாக அத்திட்டத்தை முன்வைததோம் சிங்களத் தலைமைகள் இத் திட்டத்தை ஏற்றால் இந்தத் தீவில் மகிழ்ச்சி நிலவும். இந்நிலையில், சிங்களத்தலைமைகள் அபாயகரமான ஏற்பாட்டைச் செய்துள்ளன. சர்வதேச விருப்புக்கு மாறாக - தமிழ்மக்களுக்கு ஏமாற்றத்தைத் தரக்கூடிய வகையில் - ஆட்சி கலைக்கப்பட்டுள்ளது.

### தமிழர் தரப்பின் நிதானம்

ஆனால், விடுதலைப் புலிகளோ, தமிழ்மக்களோ நிதானமாகச் சரியான போக்கைக் கடைப்பிடித்துச் சமாதான முயற்சியில் தெளிவான நிலைப்பாட்டில் நிற்கின்றனர். இதைச் சர்வதேச சமூகம் வரவேற்கின்றது.

சமாதானத்துக்கு விடுதலைப் புலிகள் விரோதமானவர்கள் என்று சிங்களத் தலைமைகள் செய்த பிரசாரம் பொய்த்துவிட்டது. சமாதானத்துக்கு விரோதமானவர்கள் யார் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

எமது நியாயப்பாடு தெளிவாக்கபட்டுள்ளது. எமது அந்தஸ்தும் உயர்ந்துள்ளது. இது எமது அரசியல் போராட்டத்தில் முக்கிய திருப்பு முனையாக அமைந்துள்ளது.

தவிர்க்கமுடியாத நிலையில் வந்துள்ள இத்தேர்தலைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டிய நிலையில் உள்ளோம். இதன்மூலம் உள்ளார்ந்தமாக எதையும் சாதிக்க முடியாவிட்டாலும் சர்வதேச மயமாகியுள்ள எமது விவகாரத்தில் இத் தேர்தல் தமிழ்த்தரப்புக்கு முக்கியத்துவம் பெறுகின்றது.

### கூட்டமைப்புக்கு ஆதரவு

தமிழ்த் தேசியம் வலுப்பெறத் தமிழ் மக்களின் - அபிலாஷைகள் நிறைவேற - தீர்க்கமான முன்னெடுப்பாக இத்தேர்தல் அமைகின்றது. இந்த அடிப படையில் தாயகப் பிரதேசத்தில் தமிழ தரப்பு ஒரே தலைமையின் கீழ் - ஒரே கொள்கையுடன் - தமிழ்க்கூட்டமைப் பாகத் தேர்தலில் நிற்கின்றது.

தமிழ்மக்களின் அபிலாஷைகளை அபிவிருத்தி மேம்பாட்டை வெளியிடும் வகையில் தேர்தல் கொள்கை அறிக்கை முன் வைக்கப் படுகின்றது. இது வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

அந்த அடிப்படையில் குடாநாட்டு மக்களின் ஒன்றுபட்ட தீர்மானம் தமிழ்த தேசியத்தின் தீர்மானமாக வெளி வரும். எனவே, சகலரும் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். இந்த வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவு அளிக்கின்றோம்.

தமிழ்மக்களின் விருப்பத்தை மீண்டும் ஒருமுறை நிலைநிறுத்த வாய்ப்புக் கிடைத்துள்ளது. வரலாற்று ரீதியான இனவாத சக்திகளையும் சந்தர்ப்பவாத அழுதொழு நோயாளர்களையும் தூக்கி எறிந்து, தமிழினத்தின் தனித்துவத்தை நிலைநாட்டி அரசியல் சுதந்திர விடுதலை வென்றெடுக்கப்படவேண்டும் என்றார் அவர். (ஐ-ஒ-3)

# பெருவிளையாட்டு விழாவில் இன்று இடம்பெறும் ஆட்டங்கள்

கிளிநொச்சி,பெப்.25

தமிழீழ விளையாட்டுத் துறையால் நடத்தப்படும் மூன்றாவது தமிழீழ பெருவிளையாட்டுப் போட்டிகளில் இன்று புதன்கிழமை காலை 8.30 மணி முதல் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு:-

காலை 9மணிக்கு பெண்களுக்கான கரப்பந்தாட்ட இறுதியாட்டத்தில திருமலை மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதுகின்றது.

### கிரிக்கெட்

காலை 8.30 மணி யாழ்.மாவட்ட அணி எதிர் வவுனியா மாவட்ட அணி.

### கபடி

காலை 9மணி - (பெண்), கிளிநொச்சி மாவட்ட அணி எதிர் மட்டக்களப்பு மாவட்ட அணி.

காலை 9மணி - (ஆண்), அம்பாறை மாவட்ட அணி எதிர் வவுனியா மாவட்ட அணி.

முற்பகல் 10மணி - (பெண்), முல்லைத்தீவு மாவட்ட அணி எதிர் வவுனியா மாவட்ட அணி.

முற்பகல் 10மணி - (ஆண்),யாழ். மாவட்ட அணி எதிர் அம்பாறை மாவட்ட அணி.

பிற்பகல் 3.30மணி - (ஆண்), யாழ். மாவட்ட அணி எதிர் திருமலை மாவட்ட அணி.

பிற்பகல் 4மணி - (பெண்), திருமலை மாவட்ட அணி எதிர் யாழ். மாவட்ட அணி.

மாலை 4.30மணி (ஆண்) - முல்லை மாவட்ட அணி எதிர் கிளிநொச்சி மாவட்ட அணி.

மாலை 5 மணி - (பெண்), முல்லை மாவட்ட அணி எதிர் - வவுனியா மாவட்ட அணி.

### வலைப்பந்தாட்டம்

மாலை 6.30 மணி - மன்னார் மாவட்ட அணி எதிர் மட்டக்களப்பு மாவட்ட அணி.

இரவு 7.30 மணி - யாழ். மாவட்ட அணி எதிர் திருமலை மாவட்ட அணி.

### கரப்பந்தாட்டம்

இரவு 8.30 மணி - (ஆண்), திருமலை மாவட்ட அணி எதிர் கிளிநொச்சி மாவட்ட அணி.

இரவு 9.30 மணி (ஆண்), யாழ். மாவட்ட அணி எதிர் வவுனியா மாவட்ட அணி.

(ஒ-9-5)



பிலிப்பைன்ஸில் அபுசாயுப் தீவிரவாதிகளுக்கு எதிராக அரச படையினர் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர். இந்த உள்நாட்டுப் போரில் ஈடுபடும் அரச படையினருக்கு அமெரிக்க இராணுவம் பயிற்சிகளை வழங்கிவருகிறது. அபுசாயுப் தீவிரவாதிகளுக்கும் அல்கெய்டா அமைப்புக்கும் இடையில் தொடர்புகள் இருப்பதாகக் கூறும் அமெரிக்கா, தனது பயங்கரவாதத்துக்கு எதிரான போரின் ஓர் அங்கமாக பிலிப்பைன்ஸ் இராணுத்தினருக்கு உதவிவருகிறது. மேற்கு மாகாணம் ஒன்றில் உள்ள பயிற்சி நிலையம் ஒன்றில் பிலிப்பைன்ஸ் விசேட அதிரடிப்படையினருக்கு அமெரிக்க அதிகாரிகள் பயிற்சிகளை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

### இந்தியாவின் விண்கல ஏவுதளம் அமைந்துள்ள

# ஸ்ரீ ஹரிகோட்டாவில் வெடிவிபத்து: விஞ்ஞானிகள் உட்பட 6 பேர் சாவு!

## சக்திமிக்க திட எரிபொருளைச் சோதித்தபோது நிகழ்ந்த அனர்த்தம்

சென்னை,பெப்.25

சென்னையை அடுத்துள்ள ஸ்ரீ ஹரிகோட்டாவில் ரொக்கெட் எரிபொருள் வெடித்துச் சிதறித் தீப்பிடித்துக் கொண்டதில் விஞ்ஞானிகள் உட்பட 6 பேர் உடல் கருகிப் பலியானார்கள். சென்னையிலிருந்து 100 கிலோமீற்றர் தூரத்தில் ஆந்திரக் கடலோரம் அமைந்திருக்கின்றது ஸ்ரீ ஹரிகோட்டா.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் ஏவுதளம் அங்கு செயற்பட்டுவருகின்றது.

இங்கிருந்து ரொக்கெட் மூலம் செயற்கைக் கோள்கள் ஏவப்படுகின்றன. ஏவுதளத்தின் அருகே ரொக்கெட் பறப்பதற்குத் தேவையான திட எரிபொருள் தயாரிக்கும் மையம் உள்ளது.

உலகின் மிகப்பெரிய திட எரிபொருள்கள் தயாரிப்பு மையங்களில் ஒன்றான இது பல நூறு ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. சதீஷ்தவான் விண்வெளி மையம் என்று இதற்குப் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ ஹரிகோட்டாவில் இருந்து ஏவப்படவிருக்கும் ஜி.எஸ்.எல்.வி.3 ரொக்கெட் தொடர்பான பணிகளில் விஞ்ஞானிகளும், பணியாளர்களும் ஈடுபட்டிருந்தனர்.

சக்திவாய்ந்த திட எரிபொருளைப் பரிசோதனைக் கருவியில் (டெஸ்டிங் மோட்டார்) நிரப்பி, அதில் சக்தி செலுத்தி, அதனை செயற்படுத்த விஞ்ஞானிகள் முயன்றபோது அது வெடித்துச் சிதறித் தீப்பற்றிக் கொண்டது.

நேற்றுமுன்தினம் மாலை 5 மணிக்கு இந்த பயங்கரத் தீவிபத்து நடந்தது. இதில் அந்த எரிபொருள் தயாரிப்பு மையம் அடியோடுஎரிந்து சாம்பலானது.

அங்கு பணியில் இருந்த விஞ்ஞானிகள் உட்பட 6 பேர் விபத்தில் சிக்கி உடல்கருகி இறந்தனர்; 3பேர் தீக்காயம் அடைந்தனர்.

பலியானவர்கள் யார் என்று அடையாளம் தெரியவந்துள்ளது. அவர்களில் இருவர் விஞ்ஞானிகள், மூவர் தொழில்நுட்பத்துறையினர், ஒருவர் தறகாலிகப் பணியாளர். சேதமடைநத எரிபொருள் மையத்தின் இடிபாடுகளை அகற்றும்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்தப் பணிமுடிவடைந்த பிறகுதான் விபத்தில் மேலும் யாராவது சிக்கியுள்ளனரா என்பது பற்றித் தெரியவரும் என அறிவிக்கப்பட்டது.

இந்தவிபத்தில் காயமடைந்த மூத்த விஞ்ஞானிகள் நாராயண்மூர்த்தி (வயது51), கிருஷ்ணப் பிரசாத் (வயது47) மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் சச்சின் ஆகிய மூன்று பேரும் சிகிச்சைக்காகச் சென்னை அப்பலோ வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் கொண்டவரப்பட்டு இரவு 7.30 மணியளவில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

இந்த விபத்துக்குத் தீவிரவாதிகளின் நாசவேலை காரணமல்ல என்று அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

விண்வெளி ஆய்வுமைய வரலாற்றில் முதன் முறையாக நடந்துள்ள இந்த விபத்துப் பற்றி விசாரணை நடத்த உயர் மட்டக் குழு ஒன்றை இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் நியமித்துள்ளது.

ஸ்ரீ ஹரிகோட்டாவில் நடந்த விபத்துப் பற்றித் தகவல் அறிந்ததும் அதனை நேரில் பார்வையிடுவதற்காக விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் தலைவர் மாதவன்நாயர் நேற்றுமுன்தினம் பெங்களூரில் இருந்து விமானத்தில் சென்னை வந்தார். உடனடியாக ஸ்ரீ ஹரிகோட்டாவுக்கு அவர் விரைந்தார்.

இந்த வெடிப்பு நடந்த பகுதிக்குச் செய்தியாளர்கள். நிருபர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை. விணவெளிமைய செயற்பாடுகளின் இரகசியத்தன்மையைப் பேணுவதற்காகவே இந்த அனுமதி மறுப்பு எனத் தெரிவிக்கப்பட்டது.

# ஆப்கான் எல்லைப் பிரதேசத்தில் பாகிஸ்தான் படை நடவடிக்கை!

இஸ்லாமாபாத்,பெப்.25

ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் எல்லையில் அல்கெய்டா மற்றும் தலிபான் சந்தேகநபர்களுக்கு எதிரான நடவடிக்கை ஒன்றை பாகிஸ்தானியப் படையினர் மேற்கொண்டுள்ளனர்.

கனரக ஆயுதங்கள், துருப்புக்காவி வாகனங்கள் சகிதம் படையினர் இந்த நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

தீவிரவாதிகளுக்கு எதிராக நாங்கள் நடவடிக்கையைத் தொடங்கி உள்ளோம் என்றார் பாகிஸ்தானிய தகவல்துறை அமைச்சர் ஷேக் ரஷீட் அஹமட்.

இந்த எல்லைப் பிரதேசக் குகை ஒன்றில் பில்லேடன் தனது 50 சகாக்கள் சகிதம் பதுங்கியிருக்கிறார் என்றும் அவருடன் தலிபான் அமைப்பின் தலைவர் முல்லா ஒமரும் உள்ளார் என்றும் தகவல்கள் வெளியான நிலையில், பாகிஸ்தான் இந்த இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

ஆனால், நடவடிக்கையின் இலக்கு பின்லேடனையும் ஒமரையும் பிடிப்பதா என்று அமைச்சர் ரஷீட் தெளிவுபடுத்தவில்லை.

எல்லைப் பகுதியில் பின்லேடன் இருக்கிறார் என்று நம்பப்படுவதனால், அந்தப் பிரதேசத்தை நோக்கி ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்கப் படையினரும் நகர்ந்து வருகின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எல்லைப் பிரதேசங்களில் வாழும் பழங்குடியினர் அல்கெய்டாவினருக்கும் தலிபான்களுக்கும் ஆதரவாளர்களாக இருக்கிறார்கள். கடந்த சில வாரங்களாக வெளிநாட்டுத் தீவிரவாதிகளையும் தலிபான், அல்கெய்டா தீவிரவாதிகளையும் தம்மிடம் ஒப்படைக்கும்படி பாகிஸ்தான் அரச அதிகாரிகள் இந்தத் தலைவர்களுக்கு நிர்ப்பந்தங்களை வழங்கி வருகிறார்கள்.

சில இடங்களில் தீவிரவாதிகள் சிலர் பாகிஸ்தானிய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். ஆனால், அநேகமான தீவிரவாதிகளை அவர்கள் மீது கொண்ட அனுதாபம் காரணமாகத் தப்பிச் செல்ல பழங்குடியினர் அனுமதிக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

பாகிஸ்தானிய இராணுவம் தற்போது ஆரம்பித்துள்ள நடவடிக்கையின் உடனடி இலக்கு பின்லேடன் இல்லை என்று உளவுப் பிரிவின் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அவரைக் கைப்பற்றுவதற்கான தெளிவான துப்பு எதுவும் கிடைக்கவில்லை என்றும் அவர்கள் கூறுகின்றனர். (ம)



பாகிஸ்தானில் தீவிரவாதிகளுக்கு எதிராக எல்லைப் பகுதியில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர்.

## ஜெயலலிதாவின் பிறந்தநாளுக்காக வெள்ளித்தேர் இழுத்த அமைச்சர்கள்

சென்னை,பெப்.25

தமிழக முதல்வரும் அ.தி.மு.க. பொதுச்செயலாளருமான ஜெயலலிதாவின் 56ஆவது பிறந்த நாள் நேற்று கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

முதல்வரின் பிறந்தநாளை ஒட்டி அமைச்சர் சி.பொன்னையன், சென்னை மாநகரசபைத் துணை மேயர் கராத்தே ஆர்.தியாகராஜன், முன்னாள் அமைச்சர் மதுசூதனன், எம்.எல்.ஏ. சேகர் பாபு ஆகியோர் மண்ணடி காளிகாம்பாள் கோயிலில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வெள்ளித்தேர் இழுத்தனர்.

சமூக நலத்துறை அமைச்சர் பா. வளர்மதி சைதாப்பேட்டை இளங்காளியம்மன் கோயிலில் தீச்சட்டி ஏந்தி வழிபாடு செய்தார்.

சட்டம் மற்றும் மின்துறை அமைச்சர் டி.ஜெயக்குமார் தலைமையில் அசோக் நகரில் அ.தி.மு.கவினர் இரத்த தானம் செய்தனர். சைதை துரைசாமி, ஆதிராஜாராம் உள்ளிட்டோர் அதில் கலந்துகொண்டனர்.

இவ்விழாவை ஒட்டி சர்வமதப் பிரார்த்தனை, அன்னதானம் வழங்கல், நலத்திட்ட உதவி வழங்குதல் போன்ற விழாக்களை நடத்த அ.தி.மு.கவினர் திட்டமிட்டுள்ளனர்.

மாநிலத்தின் பல்வேறு பகுதியிலும் கட்சிக்கொடியேற்று விழா மற்றும் பொதுக்கூட்டங்கள் நேற்று நடத்தப்பட்டன.

இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் பெப்.24 இல் பிறக்கும் பெண் குழந்தைகளுக்கு கால் பவுண் தங்க மோதிரம் வழங்கப்படும் என அந்த மாவட்டத்தினர் அறிவித்துள்ளனர். (ம)

# புஷ்ஷின் செல்வாக்குச் சரிவு: அதைச் சரிக்கட்ட முயற்சி!!

## நேரத்தோடு பிரசாரத்தை ஆரம்பித்தார்

வாஷிங்ரன்,பெப்.25

அமெரிக்காவில் தமது செல்வாக்குச் சரிந்து வருவதால் கவலையடைந்திருக்கும் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ, செல்வாக்கு வீழ்ச்சியைச் சரிக்கட்டுவதற்காகத் தனது தேர்தல் பிரசாரத்தை நேரத்துடனேயே ஆரம்பித்துவிட்டார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவிருக்கின்றது.

தற்போதைய ஜனாதிபதி புஷ் அத்தேர்தலில் மீண்டும் குடியரசுக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடுகின்றார்.

அவரை எதிர்த்து அத்தேர்தலில் போட்டியிடப்போகும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் யார் என்பது இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. வேட்பாளரை தெரிவுசெய்வதற்கான உட்கட்சித் தேர்தல்களை ஜனநாயகக் கட்சி நடத்தி வருகின்றது. அத்தேர்தலில் ஜோன் ஹெறிக்கும் செனட்டர் ஜோன் எட்வேட்ஸுக்கும் இடையில் போட்டி நிலவுகின்றது. முன்னணியில் நிற்கும் ஜோன் ஹெறிக்கே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன.

# மொரோக்கோவில் நிலநடுக்கம் நாற்பது பேர் உயிரிழந்தனர்!

தெற்கு ஆபிரிக்க நாடான மொரோக்கோவின் மேற்குப் பிரதேசத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கிக் குறைந்தது 40 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்தனர்.

சுற்றுலா மையமும் கரையோரப் பகுதியுமான அல் ஹேசிமா பிரதேசமே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. அய்டி காமரா என்ற நகரம் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று அதிகாரிகள் கூறுகின்றார்கள்.

புவியியல் குறித்து ஆராயும் அமெரிக்க நிறுவனம் ஒன்று நில நடுக்கத்தின் அளவு 6.5 புள்ளி ரிச்டர் அளவு என்று தெரிவித்துள்ளது.

மீட்புப் பணிகளில் இராணுவம் மற்றும் கடற்படை என்பன ஈடுபடுத்தப்பட்டுள்ளன. ஹெலிகளும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இடிபாடுகளுக்குள் சிக்கிக் கொண்டுள்ளவர்களை மீட்பதற்குத் தொண்டர்களும் அனுப்பப்பட்டுள்ளனர். 1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீண்டும் இந்தப் பிரதேசத்தை நிலநடுக்கம் தாக்கியுள்ளது.

9 மாதங்களுக்கு முன்னர் மொரோக்கோவின் அயல் நாடான அல்ஜீரியாவில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் 2 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. 1960ஆம் ஆண்டு மொரோக்கோவில் இடம்பெற்ற பூகம்பத்தில் 12ஆயிரம் பேர் உயிரிழந்தனர். (ம)

## சர்வதேச நீதிமன்று விசாரிக்க முடிவு

லீரா,பெப்.25

வடகிழக்கு உகண்டாவில் லீரா நகருக்கு அப்பால் உள்ள பார்லோன்யா அகதிமுகாமில் கடந்த சனியன்று தீவிரவாதிகளால் இருநூறுக்கும் அதிகமானோர் சுட்டும், வெட்டியும், எரித்தும் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து சர்வதேச கிரிமினல் குற்ற நீதிமன்றம் விசாரணை நடத்தும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இடம்பெயர்ந்த நாலாயிரத்துக்கும் அதிகமான அகதிகள் தங்கியிருந்த இந்த முகாமில் இப்போது எந்தக் குடிசையும் இல்லை. அனைத்தும் எரிக்கப்பட்டுவிட்டன.

அங்கு தஞ்சம் புகுந்தவர்களும் சனிக்கிழமைத் தாக்குதலுக்குப் பின்னர் ஓடித்தப்பிவிட்டனர்.

இக்கொடூரத்தில் உயிரிழந்த தமது உறவினர்களின் சடலங்களையும் எஞ்சிய உடற்பாகங்களையும் தேடிக்கண்டுபிடித்து அடக்கம் செய்வதற்காக ஒருசிலர் மட்டும் அந்த முகாம் பகுதியில் காணப்படுகின்றனர்.

தீவிரவாதிகள் மீண்டும் எந்நேரமும் வந்து தாக்கலாம் என்ற அச்சத்துடனேயே அவர்களும் தமது வேலைகளை அங்கு அவசரமாகச் செய்துவருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

## சீனச்சுரங்கத்துக்குள் 37 பேர் சிக்கினர்!

பெய்ஜிங்.பெப்.25

சீனாவில் நிலக்கரிச் சுரங்கத்தில் ஏறபட்ட வெடிவிபத்து ஒன்றையடுத்து சுரங்கத்துக்குள் 37 பேர் சிக்கியிருக்கின்றனர். அவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் வடகிழக்கே உள்ள ஜிசி நகரிலுள்ள நிலக்கரிச் சுரங்கத்தில் திங்கட்கிழமை இந்த விபத்து ஏற்பட்டது. சுரங்கத்துக்குள் விஷப்புகை பரவியுள்ளதால் மீட்புப் பணியாளர்களால் உடனடியாகச் சுரங்கத்துக்குள் செல்ல முடியவில்லை என்று சீன அரச அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ஈராக்பொலீஸில் இருபெண்கள் இணைவு!

பக்தாத்தில்,பெப்.25

ஈராக்கில் முதல்முறையாக பொலீஸ் அதிகாரிகளாக இரு பெண்கள் பொறுப்பேற்கவுள்ளனர். ஒருவர் பெயர் அமல் முகமது (வயது27), சுனி முஸ்லிம் பிரிவைச் சேர்ந்தவர். திருமணம் ஆகாதவர். பட்டதாரி. பாக்தாத்தில் வசிக்கிறார்.

மற்றொருவர் அஹ்லம் முகம்மது (வயது27), ஷியா பிரிவைச் சேர்ந்தவர் திருமணமாகி இரு குழந்தைகளுக்குத் தாய். கிழக்கு பக்தாத் அருகே வசிக்கின்றார்.

# தொடரும் வீதி விபத்துக்களைத் தடுக்க விரைந்து நடவடிக்கை எடுக்கப்படுமா?

**செய்திக்கட்டுரை**

**பிரபா**

யாழ். குடாநாட்டுமக்கள் போர் அழிவுகளினாலும், பொருளாதாரச் சுமையினாலும் அதிகமாகப் பாதிக்கப்பட்ட அதேவேளை, தற்போதைய சமாதானச் சூழ்நிலையிலும் ஏதோ வொருவகையில் அவர்கள் பாதிப் படைந்து கொண்டிருப்பதுதான் கவலைக்குரியது. இன்று முக்கியமாக நாளாந்தம் விபத்துக்கள் அதிகரிப்பதன் மூலம் மக்கள் பாதிப்படைவதைக் காணலாம். ஏன் விபத்துக்கள அதிகரிக்கின்றன? என்ற வினா எழுவது தவிர்க்கமுடியாததொன்றாகும். இதைத் தவிர்ப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது தான் இன்றுள்ள முக்கிய கேள்வி.

உலகளாவிய ரீதியில் போருக்கு அடுத்ததாக நாளாந்த வீதிவிபத்துக்கள் மூலமே மக்கள் பாதிப்படைவதைக் காணமுடிகிறது. இலங்கையில் மட்டும் கடந்தாண்டு சுமார் 35 ஆயிரம் வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதுடன், இதனால் 2 ஆயிரத்து 92 பேர் பலியாகியுள்ளனர் என பொலீஸ்திணைக்களத்தின் மோட்டார் வாகன நிர்வாகப் பிரிவு மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவினரின் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

இலங்கையின் ஏனைய மாவட்டங்களில் நடைபெறும் வீதி விபத்துக்களைவிட மக்களின் விகிதாசாரப்படி யாழ். மாவட்டத்தில் வீதிவிபத்துக்கள் தற்பொழுது அதிகரித்துச் செலவதைக் காணமுடிகின்றது. பெப்ரவரி மாதத்தில் மட்டும் (இரண்டு கிழமைக்குள்) 2 பேர் உயிரிழந்துள்ளதுடன், 5 பேர் படுகாயம் அடைந்ததுடன், 30 இற்கும் அதிகமானோர் சிறு காயங்களுக்கு உள்ளானதாகவும் மருத்துவ வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்த வீதி விபத்துக்கள் உடனடியாக அதிகரித்துச் செல்வதற்கான காரணங்களில் ஏ-9 பாதை திறப்பையும் ஒன்று எனக் கூறலாம். இதற்கு முன்னைய காலங்களில் வாகனங்கள் மிகக்குறைந்தளவில் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தென்னிலங்கையில் இருந்து பல்வேறு காரணங்களுக்காக இங்கு வாகனங்கள் வருவதால், யாழ். குடாநாட்டு மக்களின் சனத்தொகையினைவிட வாகனங்கள் அதிகரித்து வருவதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

விபத்து நடைபெறுவதற்குப் பல்வேறுபட்ட தரப்பினர் சம்பந்தப்படுவதை எவரும் மறுப்பதற்கில்லை. யாழ. குடாநாட்டின் வீதிகள், பல ஆண்டுகளாகச் சீரற்றமுறையில் காணப்படுகின்றன. இதனால், வாகனங்கள் ஒன்றையொன்று முந்திச்செல்லும்போது விபத்துக்கள் ஏற்படுகின்றன. உரிய திணைக்களங்கள் தகுந்த நடவடிக்கை எடுக்காமையினால் விபத்துக்கள் அதிகரிக்கின்றன.

வேகக்கட்டுப்பாட்டு எல்லைகள், வீதிச்சமிக்ஞைகள், குறியீடுகள் போன்றவை பிரதான வீதிகளில் இடபடாமையினால் விபத்துக்கள் தவிர்க்க முடியாமல் நடைபெறுகின்றன. இவை குறித்துத் தகுந்தவர்கள் உரிய நடவடிக்கை எடுத்திருந்தால் ஓரளவு விபத்துக்களைத் தவிர்த்துக்கொள்ள முடிந்திருக்கும்.

விபத்துக்கள் இடம்பெறுவதற்கு அடுத்த முக்கிய காரணமாக விளங்குபவர்கள் சாரதிகள். போக்குவரத்து விதிகள் பற்றிய பூரண அறிவின்மை, வீதிச்சட்டங்களை பின்பற்றாமை, குடிபோதையில் வாகனங்களைச்செலுத்துதல் போன்ற காரணங்களால் அதிகளவு வீதிவிபத்துக்கள ஏற்படுகின்றன.

சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றால் மட்டும் விபத்து நடைபெறமாட்டாது எனக் கொள்ளமுடியாது. ஒவ்வொரு சாரதியும் வீதிப்போக்குவரத்துப் பற்றிய தெளிவும் பிற உயிரை மதிக்கும் பண்பும் சாரதிக்குரிய ஒழுக்கத்துடன் வாகனத்தைச் செலுத்தும் பொழுதுதான் விபத்தைக் கட்டுப்படுத்தமுடியும்.

யாழ்ப்பாணத்தில் மூடப்பட்டுள்ள வீதிகளை மக்கள் பாவனைக்குத் திறந்து விடுவதால் வீதி விபத்துக்களையும் வாகன நெரிசலையும் தவிர்த்துக்கொள்ளமுடியும். பாதுகாப்புத்துறையினர் சம்பந்தப்பட்ட விபத்துக்கள் இடம்பெறும்போது, அவை குறித்து பகிரங்க விசாரணை நடத்தப்படவேண்டும். இதன்மூலம் தொடர்ந்து இத்தகைய விபத்துக்கள் இடம்பெறுவதைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

வீதி விபத்துக்குப் பொதுமக்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் சம்பந்தப்படுவதால் அவர்கள் மத்தியில் வீதிப்போக்குவரத்து அறிவினை ஏற்படுத்தல்வேண்டும். குறிப்பாக இளைஞர்களுக்கு வீதிப்போக்குவரத்துப் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தி வீதி விபத்துக்களைக் கட்டுப்படுததுதல் ஒவ்வொருவரினதும் கடமையாகும். ✣

## சிறுமி ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.25

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணையச் சென்ற சிறுமி ஒருவர் அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சிவலிங்கம் சிவகாமி என்ற சிறுமியே ஒப்படைக்கப்பட்டவராவார்.

'யுனிசெவ்' மற்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள் முன்னிலையில் நேற்றுக் காலை 10.30 மணியளவில் மகளிர் அரசியல் துறையினரால் ஒப்படைக்கப்பட்டார். (ம-10)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
09 ௴ 11 ௴ 1938

மறைவு
08 ௴ 03 ௴ 2003

அமரர்

**வேலுப்பிள்ளை சின்னத்துரை**

(முன்னாள் கிராமசேவை நிர்வாக உத்தியோகத்தர்,
சமாதான நீதிவான்,
சத்தியப்பிரமாண மொழிபெயர்ப்பாளர்)

திதி: 25.02.2004

*பண்பின் சிகரமே! நேர்மையின் காவலனே !*
*நீங்கள் எங்களை விட்டோடி ஓராண்டு சென்றிடினும்*
*மாறுமோ உந்தன் நினைவு*
*செல்விருந்தோம்பி வருவிருந்து காத்திருந்து வள்ளுவனும் வாசுகியும்*
*போல் இலட்சிய வாழ்வு வாழ்ந்து அன்றில் பெடையெனவே*
*நின்னடி பிசகாது நின் நிழலையே இடையறாது பற்றி வாழ்ந்த நின்*
*இல்லாள் என்னும் நல்லாளைத் தன்னந் தனியளாய்த் தவிக்கவிட்டுப் பிரிய*
*மனம் வந்ததேனோ முதுமையால் துவண்டிடும் நாங்கள் அவளின் துயர்*
*துடைக்க முடியாமல் துன்புறுகின்றோம்.*

என்றென்றும் நின்நினைவுடன் வாழும்:
சகோதரன்: வே.தம்பையா,
சகோதரிகள் :க.பாக்கியம், இ.பொன்னம்மா,
மைத்துனி: மகாலிங்கம் மனோன்மணி.

*வாதரவத்தை,*
*புத்தூர்.*

(28868)(32-12-13-24)

## மரண அறிவித்தல்

திருமதி

**விமலாம்பிகை இராமநாதன்**

(ஆசிரியை, யா/மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயம்)

இறைபதமடைந்த அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.02.2004) வியாழக்கிழமை காலை 9.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளன என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
இராமநாதன்
*(கணவர்).*

*மீசாலை மேற்கு,*
*மீசாலை.*

(28865) (26-13-12-24)

## பயிற்சி வகுப்புக்கள்

கேக்ஐசிங், Facial வகை, மணப்பெண் அலங்காரங்கள், கூந்தல் அலங்காரங்கள், பூவேலை.

ஆரம்பம் : **28.02.2004**

பழைய மாணவர், சான்றிதழ் வழங்கும் வைபவம் தொடர்பாக 26.02.2004ஆம் திகதிக்கு முன் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
T.P. No.: 222 5583
0776282837

**Miss M.Jeya**
56/5, சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு,
மாத்தனை கோயிலுக்கு அருகில்.

(28861)(3513-12-24)

## பில் கிளார்க் தேவை

பிரபல வர்த்தக ஸ்தாபனம் ஒன்றுக்கு
பில் கிளார்க் ஒருவர் தேவை.
40 வயதுக்கு மேற்பட்டவர் விரும்பத்தக்கது.

தொடர்பு :
*விளம்பர இல. 2178*
C/o *உதயன்.*
*யாழ்ப்பாணம்.*

(சி/33434)(39-13-12-24)

## பயிலுநர்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் புகைப்பட நிறுவனம் ஒன்றிற்கு வேலை பழகுவதற்கு 18 தொடக்கம் 24வயதிற்கு உட்பட்ட க.பொ.த. (சாதாரணம்) படித்தவர்கள் தேவைப்படுகின்றனர். ஆர்வம் உள்ளவர்கள் 05.03.2004இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

முகவரி:
விள. இல. -2179,
உதயன்,
யாழ்ப்பாணம்.

(28866) (13-12-24)

ஜி.ரி.இசற் - வட புனரமைப்புத்திட்டம்

## பகிரங்க ஏல விற்பனை

gtz

ஜி.ரி.இசற் – வட புனரமைப்புத்திட்டம் தங்களுடைய திட்டத்தில் பாவிக்கப்பட்ட நல்ல நிலையிலுள்ள இரண்டு வாகனங்களைப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யவுள்ளது.

1. Nissan Double cab pickup (1991) தொடர் இல: 250-6780
2. Nissan Double cab pickup (1990) தொடர் இல: 250-6901

இந்த வாகனங்களின் ஏல விற்பனை மூலமாகப் பெறப்படும் பணம், யாழ். அரச அதிபர் மற்றும் ஜி.ரி.இசற் – வட புனரமைப்புத்திட்டம் இணைந்து செயற்படும் நிதிக்கு நேரடியாக செலுத்தப்பட்டு அதனூடாக நடைமுறைப்படுத்தும் சமூக அபிவிருத்தித்திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படவுள்ளது.

*ஏல விற்பனை நடைபெறும் திகதி: 15–03–2004 திங்கட்கிழமை நேரம்: மு.ப.10.00 மணி*

*இடம் : ஜி.ரி. இசற் – வட புனரமைப்புத்திட்ட அலுவலகம், 472, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.*

இந்த ஏல விற்பனை சம்பந்தமான மேலதிக விவரங்களை 472, பிரதான வீதியிலுள்ள எமது அலுவலகத்தில் காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்வதுடன், வாகனங்களையும் பார்வையிடலாம்.

ஆலோசகர்,
ஜி.ரி.இசற் - வட புனரமைப்புத்திட்டம்.
23. 02. 2004

(C/33436)(35-13-12-24)

Mercury @ MICRO PC SYSTEMS

டிஜிடல் உல்லாசம்

Woofers - Digital Camera Recorders

உங்கள் வீட்டில் சினிமா அரங்கமாக மாற்றுங்கள் தியட்டர் செல்ல வேண்டிய அவசியமில்லை'

ஹோம் தியட்டர் சிஸ்டம்




Binocam டிஜிடல் கமரா பைனகுலர்



- தெளிவு
- தூர இடங்களை படம் பிடிக்கும் வசதி கொண்டது.

MICRO PC மைக்ரோ பிசி சிஸ்டம்ஸ்

யாழ்ப்பாணம் 175/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் தொலை 021-2225893
கிளிநொச்சி கணனிமையம் (TCC) கந்தசாமி கோயிலடி.

கிளைகள் : வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு.

சிவமயம்

## தசம தின இலட்சார்ச்சனை

மயிலணி வடக்கு, ஸ்ரீமனோன்மணி அம்பாள் சமேத அண்ணாமகேஸ்வரர் திருக்கோயில்

மேற்படி ஆலயத்தில் இன்று (25.02.2004) புதன்கிழமைமுதல் (06.03.2004) சனிக்கிழமை வரை பத்து நாள்களும் தினசரி மாலை 6.00 மணிக்கு இலட்சார்ச்சனை நடைபெறும்.
06.03.2004 சனிக்கிழமை காலை குளிர்த்தி அபிஷேகம், 108 சங்காபிஷேகம் என்பன நடைபெறும்.

பிரதம குரு: சபரீசதாசன் பிரம்மஸ்ரீ தாணு.வாமதேவக் குருக்கள்
ஆலயகுரு: பிரம்மஸ்ரீ வா.விஷ்ணுவர்த்தன சர்மா

மயிலணி வடக்கு,
சுன்னாகம்.

(28863)(35-13-12-24)

உபயகாரர்களும்
ஆலயபரிபாலன சபையினரும்.

உதயன்

## கூத்துகளுக்குக் காரணம்

தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் முடிந்துவிட்டது. இனி பிரசார நடவடிக்கைகள் முழுமூச்சாக முன்னெடுக்கப்படும்.

ஆனால், அதற்கு முன்னரே பக்கச் சார்பான பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்துவிட்டன அரச ஊடகங்கள் என்ற குற்றச்சாட்டு பரவலாக எழுந்துவிட்டது. தென்னிலங்கை அரசியலில் தேர்தலை ஒட்டிய சர்ச்சைகளில் இன்று முக்கியத்துவம் பெறும் விடயங்களுள் அரச ஊடகங்களின் பக்கச் சார்புச் செயற்பாடு பற்றிய விவாதம் முக்கியமானது.

ரூபவாஹினி, ஐ.ரி.என்., இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ஏரிக்கரைப் பத்திரிகைகளான 'அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டின்' இதழ்கள் என்பன அரச ஊடகங்களுக்குள் அடக்கம்.

நாடாளுமன்றத்தில் தெளிவான அறுதிப் பெரும்பான்மையுடன் விளங்கிய ஐக்கிய தேசிய முன்னணி அரசை வீட்டுக்கு அனுப்பும் விதத்தில் நாடாளுமன்றத்தை நான்கு வருடங்கள் முன்கூட்டியே கலைத்தார் ஜனாதிபதி. அதற்கு சில மணி நேரத்துக்கு முன்னர் அவர் செய்த கைங்கரியம் மேற்படி அரச ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் ஊடகத்துறை அமைச்சை ஐ.தே.முன்னணித் தரப்பிலிருந்து பறித்து, தமது நம்பிக்கைக்குரிய லக்ஷ்மன் கதிர்காமரிடம் ஒப்படைத்ததுதான்.

அந்த நடவடிக்கையோடு ஜனாதிபதியின் தரப்புக்கு - எதிர்க்கட்சித் தரப்புக்கு - பிரசார ஊதுகுழல் பணியை அரச ஊடகங்கள் தொடங்கிவிட்டன என்பது குற்றச்சாட்டு.

மக்களின் வரிப்பணத்தில் இயங்கும் அரச ஊடகங்களைத் தமது கட்சி நலனுக்கு - அதுவும் எதிர்க்கட்சியில் உள்ள அரசியல் நிறுவனங்களின் பிரசாரத்துக்கு - அதுவும் தேர்தல் காலத்தில் - பயன்படுத்துவது பெரும் ஜனநாயக விரோதக் குற்றமாகும்.

17ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் இவ்விவகாரம் தொடர்பாகத் தேர்தல் ஆணையாளர் கடும் நடவடிக்கை எடுக்கமுடியும் என்று அரசியல் கட்சிகள் மட்டுமல்லாமல், பல பொது நல அமைப்புக்கள் மற்றும் சட்ட நிறுவனங்கள் கூடச் சுட்டிக்காட்டுகின்றன. ஆனால் 17ஆவது அரசமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்ட புதிய அம்சங்கள் பலவற்றுக்கு செயலுருக் கொடுக்க முடியாத இக்கட்டான நிலை தோன்றுகின்றது. இதனால் இந்த விடயத்திலும் என்ன நடவடிக்கை எடுப்பது என்று தெரியாமல் தடுமாறுகிறார் தேர்தல் ஆணையாளர் என்ற ஊகத்தை உருவாக்குவது போல செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

17ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டு செயற்படுத்தப்படமுடியாமல் இருக்கும் அம்சங்களுள் முக்கியமான மற்றொன்று சுயாதன தேர்தல் ஆணைக்குழு.

இந்த ஆணைக்குழுவுக்குரிய பிரதிநிதியின் பெயரை ஜனாதிபதி இன்னும் அரசமைப்புக் கவுன்ஸிலுக்குப் பிரேரிக்கவில்லை. அதைச் செய்யாமல் அவர் காலத்தை இழுத்தடித்து வருகிறார். அதனால் அந்த ஆணைக் குழுவை அமைப்பது, 17ஆவது அரசமைப்புத் திருத்தம் நடைமுறைக்கு வந்து இரண்டு ஆண்டுகளாகியும் சாத்தியப்படவில்லை.

சுயாதீனத் தேர்தல் ஆணைக்குழுவின் கீழ்தான் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்று முன்னர் கூக்குரலிட்ட, ஜே.வி.பி.கூட, இப்போது ஜனாதிபதியின் பக்கம் அணி சேர்ந்தவுடன் "கம்"மென்று வாயை மூடிக்கொண்டிருக்கின்றது; ஆணைக்குழுவை அமைக்கும்படி வற்புறுத்தவோ, வாய் திறக்கவோ இல்லை!

தற்போதைய தேர்தல் ஆணையாளர், இருதய நோயாளியான தமக்கு வயதாகிவிட்டதால், தம்மை ஓய்வுபெற அனுமதிக்கும்படி கெஞ்சுகிறார். உயர் நீதிமன்றத்திடம் கூட இதற்காக இறைஞ்சினார். ஆனால், அப்பதவிக்கு ஒருவரை நியமிப்பது அரசமைப்பின் 17ஆவது திருத்தப்படி சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவின் பணி. அதனிடம் தான் கேட்கவேண்டும் என்று உயர்நீதிமன்றம் கைகாட்டிவிட்டு நிற்கிறது.

ஆனால், ஜனாதிபதிக்கு அரசமைப்பின் கீழ் விசேட சட்ட விலக்கு அளிக்கப்பட்டிருப்பதால், சம்பந்தப்பட்ட ஆணைக்குழுவைத் தாமதமின்றி நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு அவருக்கு உத்தரவிடவும் நீதிமன்றத்தினால் முடியாத நிலைமை.

அதனால் நோய் வாய்ப்பட்டும் - வயதாகியும் - ஓய்வு பெறமுடியாது தடுமாறுகிறார் தேர்தல் ஆணையாளர்.

அவருக்கு ஏதேனும் நிகழ்ந்தால் இந்தத் தேர்தலுக்கு அதோகதிதான்

தேர்தல் ஆணையாளரின் பணி, சட்டப்படி வேறு எவருக்கும் பாரதீனப்படுத்த முடியாதது. அவருக்கு ஏதேனும் நடந்தால் புதிய தேர்தல் ஆணையாளர் நியமிக்கப்பட்டு அவரே பணியைத் தொடரமுடியும். பதில் நியமனங்கள் சரிவரா.

17ஆவது அரசமைப்பின் கீழ் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுதான் தேர்தல் ஆணையாளரை நியமிக்க முடியும். ஆனால், ஜனாதிபதியின் மெத்தனத்தால் அந்த ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படமுடியாமல் இழுபடுகின்றது.

இவ்வளவு கூத்துக்களுக்கும் ஜனாதிபதியும், அவருக்கு அளிக்கப்பட்ட கட்டுமீறிய நிறைவேற்று அதிகாரங்களும், அவரைத் தட்டிக்கேட்கமுடியாத சட்ட விலக்களிப்பும்தான் காரணம்.

# தமிழக மீனவர் தாக்குதலைக் கண்டித்து இன்று பகிஷ்கரிப்பு

## கண்டனக்கூட்டம் நடத்தவும் வடமராட்சி வடக்கு மீனவர் தீர்மானம்

வடமராட்சி,பெப்.25

வடமராட்சி வடக்கு மீனவர்கள் மீது தமிழக மீனவர்கள் மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதலைக் கண்டித்து வடமராட்சி சக்கோட்டை புனித சவேரியார் தேவாலயத்தில் இன்று புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு கண்டனக்கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இச்சம்பவத்தைக் கண்டித்து வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்கள் இன்று புதன்கிழமை கடற்றொழிலுக்குச் செல்லாது பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதற்குத் தீர்மானித்துள்ளனர்.

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தினால் நடத்தப்படும் இக்கண்டனக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி, இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ்.மாவட்டப் பிரதிநிதி, இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். மாவட்ட அதிகாரி ஆகியோருக்கு அழைப்பு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்கச் சம்மேளனப் பிரதிநிதிகளும் கலந்துகொள்வர்.

இக்கூட்டத்தில் வைத்து இந்திய மீனவர்களின் ஊடுருவல்களுக்கு முடிவுகட்டுமாறுகோரி மகஜர் ஒன்றை யாழ்.அரச அதிபரிடம் கையளிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து காணாமற்போன மீனவரை 12 படகுகளில் சென்று ஏனைய மீனவர்கள் தேடினர். நேற்று அதிகாலை ஆரம்பித்த இத்தேடுதல் நடவடிக்கைகள் பிற்பகல்வரை தொடர்ந்தது. எனினும் காணாமற்போனவரை கண்டுபிடிக்கவில்லை.

(ம-173)

### காணாமற்போனோர் தொடர்பாக

# மேலும் 40 ஆட்கொணர்வு மனுக்கள் யாழ். மேல்நீதிமன்றத்தில் தாக்கல்

யாழ்ப்பாணம்,பெப்.25

1996, 1997ஆம் ஆண்டுகாலப் பகுதிகளில் யாழ் குடாநாட்டில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனவர்களில் மேலும் 40பேர் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்கள் யாழ். மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஏற்கனவே 23 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மனித உரிமைகளும் அபிவிருத்திக்குமான அமைப்பின் சட்டத்தரணி எம்.றெமீடியஸ் இந்த மனுக்களைத் தாக்கல் செய்துள்ளார்.

காணாமற்போன 15 பேருடைய ஆட்கொணர்வு மனுக்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமையும் 17 பேருடைய மனுக்கள் நேற்றுக் காலையும் மேலும் 8 பேருடையவை நேற்றுப் பிற்பகலும் தாக்கல் செய்யப்பட்டன.

யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராசா முன்னிலையில் 32 பேருடைய ஆட்கொணர்வு மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

அரச தரப்பில் சட்டத்தரணி செல்வி சுகந்தி கந்தசாமியும் படையினர் தரப்பில் சட்டத்தரணி கப்டன் குறுப்பும் ஆஜராகியிருந்தனர்.

அரச தரப்பினர் தமது இறுதி ஆட்சேபனை மனுக்களை தாக்கல் செய்வதற்கு கால அவகாசம் கோரினர்.

இதனை ஏற்றுக்கொண்ட மேல் நீதிமன்ற நீதிபதி வழக்கு விசாரணைகளை மார்ச் மாதம் 22ஆம், 23ஆம் திகதிகளுக்கு ஒத்திவைத்தார்.

மிகுதி எட்டுப் பேருடைய ஆட்கொணர்வு மனுக்கள் தொடர்பான விசாரணைகள் இன்று நடைபெறவுள்ளன. (ம-7)

# கண்காணிப்புக் குழுவிடம் மக்கள் அதிகம் எதிர்பார்க்கின்றார்கள்

## ஓய்வுபெறும் அதன் யாழ். மாவட்டத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.25

பொதுமக்கள், கண்காணிப்புக் குழுவிடம் அதிகம் எதிர்பார்க்கிறார்கள். இது எமக்குப் புரிகிறது. ஆனால், எமக்கு இருக்கும் அதிகாரத்துக்கு உட்பட்டே நாம் செயலாற்ற முடியும்.

- இவ்வாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்டத் தலைவராகக் கடமையாற்றிச் சேவைக்காலம் முடிந்து நாடு திரும்பும் உல்வ் பேஜோன்போர்ஸ் 'உதயனுக்கு'த் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 6மாத காலம் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்டத் தலைவராகவும் அதற்கு முன்னர் 6 மாதகாலம் மட்டக்களப்பிலும் கடமையாற்றியுள்ளேன். குறிப்பாக யாழ். குடா நாட்டில் கண்காணிப்புப் பணியில் நாம் திருப்தியாக ஈடுபட விடுதலைப் புலிகள் உதவினார்கள். அத்துடன் படையினரும் ஒத்துழைப்பு வழங்கினார்கள். கண்காணிப்புக்குழு ஒழுங்கு செய்யும் கூட்டங்களில் இருதரப்பினரும் தவறாது கலந்துகொண்டனர்.

மாவீரர் தினக் கொண்டாட்டங்களின்போது புலிகளும் படையினரும் புரிந்துணர்வுடன் செயற்பட்டதால் மோதல்கள் தவிர்க்கப்பட்டன.

மோதல்கள் ஏற்படும் இடங்களில் விடுதலைப் புலிகளும் பிரசன்னமாகி கண்காணிப்புக் குழுவுடன் இணைந்து தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கிறார்கள்.

பொதுமக்கள், கண்காணிப்புக் குழுவினிடம் இருந்து அதிகமாக எதிர்பார்க்கின்றார்கள். பொலீஸார் போல கண்காணிப்புக் குழுவும் செயற்படவேண்டுமென நினைக்கின்றார்கள். இது எமக்கு நன்கு விளங்குகின்றது. ஆயினும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் எமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மட்டுமே நாம் பயன்படுத்தமுடியும். அதற்குமேல் நாம் எதுவும் செய்ய இயலாது.

இரண்டு வருடமாக அமுலில் உள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை புலிகளுக்கும், படையினருக்கும் பொறுப்புக்களை அளித்துள்ளன. அதனை அவர்கள் ஏற்றுநடக்கின்றார்கள். புரிந்துணர்வு உடன்பாட்டின் மூலம் மக்களும் பல நன்மைகளைப் பெற்றுள்ளார்கள். அமைதிக்கான அழுத்தமும் இப்போது அவர்களிடம் தோன்றியுள்ளது - என்றார்.



முன்னதாக கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்டத் தலைவர் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியை அரசியல்துறை அலுவலகத்தில் சந்தித்துப் பேசினார். கண்காணிப்புக்குழு நடவடிக்கையில் திறமையாக ஈடுபட்டதற்காக சி.இளம்பரிதி அவருக்கு வாழ்த்துத் தெரிவித்து வழியனுப்பி வைத்தார். (ம-8)

# கிழக்குப் பல்கலை மாணவர்கள் குடாநாட்டுக்கு விவசாயச் சுற்றுலா

வலி.தெற்கு,பெப்.25

கிழக்கு மாகாண பல்கலைக்கழக மாணவர்கள் விவசாய சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு நேற்று செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்டத்துக்கு வருகைதந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நான்கு தினங்கள் தங்கி நின்று, வலிகாமம் பிரதேசத்து செம்மண் பயிர்ச்செய்கை நிலங்கள் மற்றும் வடமராட்சியில் வெங்காயம், புகையிலை செய்கை மேற்கொள்ளப்படும் விளை நிலங்களையும் பார்வையிடுவதோடு விவசாய செயல்முறைகள் பற்றியும் கலந்துரையாடி அறிந்துகொள்வர்.

அத்துடன் பிரசித்தி பெற்ற தெய்வீக ஸ்தலங்கள் மற்றும் சுற்றுலா இடங்களுக்கும் இவர்கள் விஜயம் செய்யவுள்ளனர்.

(ம-152)

### நாளை

மாசி 14
வியாழக்கிழமை
(26.02.2004)
திதி : ஷஷ்டி
மரண யோகம்
மாலை 6.40 வரை.
நட்சத்திரம்: பரணி
இரவு 9.13 வரை
சுபநேரம்: 7.59-8.29
ராகுகாலம்: 1.59-3.29
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

பணத்தைச் சேர்க்கும் போதும் மனிதன் தூங்குவதில்லை. அதனைச் சேர்த்து வைத்த பின்பும் தூங்குவதில்லை.

# ஆனந்தசங்கரி தலைமையிலான சுயேசைக் குழுவுக்குச் சின்னம்: பூட்டு

யாழ்ப்பாணம்,பெப்.25

வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான சுயேச்சைக் குழுவிற்கு பூட்டுச் சின்னம் வழங்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு 8 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும், 2 சுயேசைக்குழுக்களும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல்செய்துள்ளன. வேட்பாளர்களுக்கான கூட்டம் ஒன்று நேற்று யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் செ.பத்மநாதன் தலைமையில் யாழ். செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது சிலர் வேட்பு மனுக்கள் தொடர்பாக ஆட்சேபனைகளைத் தெரிவித்தனர்.

எனினும் அனைத்து வேட்புமனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டதென யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் அறிவித்தார்.

இது தொடர்பாக தெரிவத்தாட்சி அலுவலர் பத்திரிகையாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

அனைத்து வேட்புமனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இவை விரைவில் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்படும். எந்த அடிப்படையில் போட்டியிடும் குழுக்களை வாக்குச்சீட்டில் அச்சிடுவது என்பது பின்னர் தெரியவரும் என்றார்.

முகமது நபி தலைமையிலான மற்றொரு சுயேச்சைக் குழுவிற்கு 'கூசா' தேர்தல் சின்னமாக வழங்கப்பட்டது. (ம-3)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

40அடி சோடினைப் பந்தல், மண வறை என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: S.தயா, இணுவில் சந்தி, இணுவில். (28844)

புலோலி தெற்கு, உபயகதிர்காமத் திற்கு அண்மையில் இருபெரிய தேக்கு மரங்கள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.சி.சிவசுப்பிரமணியம், ஆங்கில ஆசிரியர், இல.51, முதலா வது ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப பாணம். (சி-33426)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சு கள் 40/-, Prima பேட்டுக் குஞ்சுகள் 60/- 01-03-2004 பிற்பகல் விநியோ கிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும். பருத்தித்துறைக் கிளை யிலும் பெற்றுக்கொள்ளலாம். (நல் லூர் வீடியோ சென்ரர் வளவு) இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (28640)

## புறொயிலர் குஞ்சு விற்பனைக்கு

வடமாகாணத்தின் காலநிலைக்கு நன்கு நிறைதரக் கூடிய புதிய இன புறொயிலர் குஞ்சுகளை அறிமுகப் படுத்துகிறோம். நாளை (26.02.2004) வியாழக்கிழமை மாலை பெற்றுக் கொள்ளலாம். முன்பதிவு ஏற்றுக் கொள்ளப்படும். தொடர்பு: பாலா, 18, றக்கா வீதி, சுண்டிக்குளி, யாழ்ப் பாணம். T.P.: 222 6875. (28848)

## கார் விற்பனைக்கு

11ஸ்ரீ தொடர் இலக்கமுடைய Corella 50 கார் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: 711, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். தொ.பேசி இலக்கம்: 021-22-6188.

(28856)

## தேடப்படுகிறது

கறுப்பு நிறமான (கலப்பு - பெண்) அல்ஷேசன் நாயை 14.01.2004 முத லாகக் காணவில்லை. பாதங்களிலும் தலையிலும் மண்ணிறமும் கட்டை வாலும் உருண்டையானதும் ஒரு காது மடிந்துமுள்ளது. அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டதால் குட்டி போடாது. இதனைக் கண்டவர்கள் திருமதி இ.லோகநாதன், (APCஇற்கு அருகில்) ஆலடி, உடுவில் எனும் முக வரிக்கு அறியத்தரவும். தகுந்த சன் மானம் வழங்கப்படும். (28840)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத் தைச் சேர்ந்த 1957இல் பிறந்த பூரா டம் நட்சத்திரம் செவ்வாய் தோஷ மற்ற அரசாங்க உத்தியோகத்த ருக்கு, 40வயதுக்குட்பட்ட தொழில் பார்க்கும் மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல.2176, C/o உதயன். (28848)

## சைக்கிள்கள் விற்பனைக்கு

மகளிருக்கான லுமாலா RIDER (JAPAN - CUP BRAKE) சைக்கிள் கள் (ஆறு மாதங்கள் பாவித்த நிலையில்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: விசாகப்பெருமாள், நாகேஸ் வரி பாடசாலை ஒழுங்கை, சுன்னா கம் மேற்கு. T.P.: 0777 243740. (28857)

## தவறிவிட்டது

மோட்டார் சைக்கிளின் பின்பக்க முள்ள இலக்கத்தகடு (NPGI 7761) சாவகச்சேரிக்கும் சங்கானைக்கும் இடையில் 22.02.2004 ஞாயிற்றுக் கிழமையன்று தவறிவிட்டது. கண்டெ டுத்தவர்கள் தயவுசெய்து N.சிவராஜா 021 222 5416 தொலைபேசி இலக்கத துடன் தொடர்பு கொள்ளவும். (28848)

# இணுவிலில் மக்கள் வங்கி கருமபீடம்

யாழ்ப்பாணம்,பெப்.25

மக்கள் வங்கி கன்னாதிட்டி கிளை யின் நீடித்த கருமபீடம் ஒன்று எதிர் வரும் மார்ச் முதலாம் திகதி தொடக் கம் இணுவிலில் இயங்கவுள்ளது.

இணுவில் மக்கிலியொட் ஆஸ்பத் திரிக்கு முன்பாக உள்ள ஒரு கட்ட டத்தில் இந்தக் கருமபீடம் இயங்கும்.

வாடிக்கையாளர்கள் வங்கியின் சகல சேவைகளையும் அங்கு பெற் றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் என்று வங்கி முகாமையாளர் தெரி வித்தார். (ஐ)

# அமெரிக்க அதிகாரி இந்தவாரம் இலங்கைக்கு விஜயம்

அமெரிக்க ராஜாங்கத் திணைக் கள அதிகாரி, இந்த வாரம் இலங் கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அமெரிக்க ராஜாங்கத் திணைக் களத்திலுள்ள தெற்காசிய விவகாரங் களுக்குப் பொறுப்பான பிரிவின் பணிப் பாளரான ஜோன் கிளஸ்ஸர் இந்த வாரம் இலங்கைக்கு வருகை தரு வார் என அமெரிக்கத் தூதரகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் அரச அதிகாரிகள், அரசியல் தலைவர்கள், அரச சார் பற்ற அமைப்புகள் மற்றும் தனியார் பிரமுகர்களை அவர் சந்திப்பார் என் றும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## விற்பனைக்கு

யப்பானிலிருந்து இறக்குமதி செய்யப் பட்ட குளிரூட்டிகள் (FRIDGE - புதிய மொடல் குறைந்த மின்சாரச் செலவு) விற்பனைக்கு உண்டு.

பாவித்த MD 90, நியூஸ்மேற் மோட்டா சைக்கிள்களும் விற்பனைக்குண்டு.

**சித்திவிநாயகர் யப்பான் பசார், கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.**

(பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில் அருகில்)

(26-13-18) (28839)

## வேலையாள்கள் தேவை

எமது நிறுவனத்துக்கு வேலைக்கு ஆள்கள் தேவைப்படுகின்றனர்.

1) ஒலிப்பதிவாளர்கள்
2) கணக்காளர்
3) புகைப்படப் பிடிப்பாளர்
4) உதவியாளர்கள்

விண்ணப்பிப்போர் க.பொ.த. (உயர்தரம்) சித்தியுடன் கணனி சார் அறிவும் முனனனுபவமும உள்ளவராயிருப்பது விரும்பத் தக்கது.

மூர்த்தி வீடியோ அன் எலக்ரோனிக்ஸ்
யாழ். வீதி – மானிப்பாய்.
021-222-2884

# இடமாற்றங்கள் பிற்போடப்பட்டன

தென்மராட்சி,பெப்.25

வடக்கு - கிழக்கு மாகாண இணைந்த சேவை உத்தியோகத்தர் களுக்கான வருடாந்த இடமாற்றக் கட் டளைகளும் அதனோடு தொடர்பு பட்டு மேற்கொள்ளப்பட்ட மேன்முறை யீட்டுத் தீர்மானங்களும் மறு அறிவித் தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் கடமை களை மேற்கொள்வதற்கு உத்தி யோகத்தர்களின் சேவை அவசிய மாக உள்ளதையிட்டு இடமாற்றங் கள் பிற்போடப்படவுள்ளன என மாகாண பொது நிர்வாக உள்ளூ ராட்சி, கூட்டுறவு, கிராமிய அபி விருத்தி, வீதி அபிவிருத்தி, கைத் தொழில் அமைச்சின் செயலாளர் திருமதி க.சிவசிதம்பரம் சகல திணைக்கள தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார். (ம-117)

**சுன்னாகம் வர்த்தகர் சங்கத்தால் நடத்தப்பட்டுவரும் இரவுப் பாதுகாப்புச் சேவைக்கு ஆள்கள் தேவை**

மேற்படி வர்த்தக சங்கத்தால் நடத்தப்பட்டுவரும் இரவுப் பாதுகாப்புச் சேவைக்கு ஆள்கள் தேவை. விரும்புபவர்கள் எதிர்வரும் (28.02.2004) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு (ப.நேரம்) சுன்னாகம் வர்த்தக சங்க அலுவலகத்திற்கு நேரில் சமுகமளிக்கவும்.

அடிப்படை மாதச் சம்பளம் - ரூபா 4000/- இலிருந்து

*நவீனசந்தை மேல்மாடி, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.* (28778) (24-13-18-26) சுன்னாகம் வர்த்தகர் சங்கம்.

## வெளிவந்துவிட்டன

### விஞ்ஞானமும் தொழிநுட்பவியலும்

ஆசிரியர்: **இ.நிர்மலன்**

★ 2004 புதிய நூலைத் தழுவி எழுதப்பட்ட தரம் 9இற்குரிய
(1) இறுதி வினாக்களும் - விடைகளும் - 35/=
(2) விரிவான பாடக் குறிப்பும் வினா விடையும் - 180/=
★ தரம் 10,11 மிக விரிவான பாடக்குறிப்பும் வினாவிடையும் 200/=
★ தரம் 9,10,11 விஞ்ஞான விளக்கங்கள்
★ => சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும்
=> Tutes, கொழும்பு Test Papers இனை இலவசமாகப் பெற்றுக்கொள்ள

**"STAR" *Institute 596, Aluthmawatha Road, Colombo -15***

முகவரியுடன் தபாலில் தொடர்பு கொள்க.

T.P.: 114613078, 0777-413078.

(28859)(39-26-12-18)




# கண்ணீர் அஞ்சலி



நல்லூர் கமநலசேவைக் குழுவின் உறுப்பினரும், கோண்டாவில் மேற்கு விவசாய சம்மேளனத்தின் தலைவரும், முன்னாள் பயிர்செய்கை உத்தியோகத்தரும் இளைப்பாறிய கிராம சேவையாளரும் சமாதான நீதிவானுமாகிய

## சங்கரப்பிள்ளை யோகராசா

அவர்கள் காலமானதால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகிறோம்.

உதவி ஆணையாளரும் உத்தியோகத்தரும்.
கமநல அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்.
பெரும்பாக உத்தியோகத்தர். கமநல சேவைக்குழு உறுப்பினர்கள். உத்தியோகத்தர்கள்
கமநலசேவை நிலையம், நல்லூர்.
பணிப்பாளரும் பணியாளர்களும்.
(சி-33429) கமத்தொழில் காப்புறுதிச்சபை, யாழ்ப்பாணம். (26-13-18)

# நெஞ்சைவிட்டகலாத நினைவஞ்சலி

**2 ஆம் ஆண்டு** **45 ஆம் நாள்**



தோற்றம் 08 08 1926 — மறைவு 23 02 2002

அமரர் **கந்தையா குகதாசன்**



தோற்றம் 20 11 1934 — மறைவு 12 01 2004

திருமதி **லோகநாயகி குகதாசன்**

**அன்போடும் பண்போடும் அகிலத்தில் வாழ்ந்திருந்தீர்
ஆதரவு மொழி பேசி பாசமும் நேசமும் காட்டினீர்
உங்கள் பிரிவு எம் இதயங்களை வாட்டுகின்றதே!
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.**

537, சிவன்கோயில் வீதி.
திருநெல்வேலி தெற்கு.
யாழ்ப்பாணம். (28772) (41)

உங்கள் பிரிவால் துயருறும்:
**அன்பு மகள், மருமகன், சகோதரர்கள்.**

# நெஞ்சை விட்டகலாத இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

அன்னையின் அணைப்பில் 1915 01 07



அரன் அடி நிழலில் 2002 02 17

## திருமதி சபாபதி வள்ளிப்பிள்ளை

திதி: 25.02.2004

ஆண்டுகள் இரண்டு சென்றாலும் - உங்கள்
நினைவுகள் என்றும் நிலைத்து நிற்கும்
ஓம் சாந்தி!

*மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.* (28853)(32-12-18-26)

*அன்புடன் நினைவு கூரும்:*
**- குடும்பத்தினர்.**

# நன்றி நவிலல்

*கடந்த 13.02.2004*

*வெள்ளிக்கிழமை எம்மைவிட்டுப் பிரிந்த*

## காசிநாதன் சிவலிங்கம்

அவர்கள் திடீர் மறைவையிட்டு உடனடியாகவே தேவையறிந்து எமக்கு உதவிசெய்தவர்களுக்கும் நேரிலும், தொலைபேசி, தந்தி, கடிதம் மூலமும் தமது அனுதாபத்தைத் தெரிவித்து, எமது துயரில் பங்கெடுத்துக் கொண்டவர்களுக்கும், பத்திரிகைகள், துண்டுப் பரசுரங்கள் மூலமாகத் தமது அஞ்சலியைச் செலுத்தியவர்களுக்கும 16.02.2004 திங்கட்கிழமை நடைபெற்ற அவரது இறுதி ஊர் வலத்துக்கான ஒழுங்குகளையும் உதவிகளையும் செய்தவர் களுக்கும் அவரது இறுதிப் பிரார்த்தனையிலும், இறுதி ஊர்வலத் திலும், நல்லடக்கத்திலும் கலந்துகொண்ட அன்பு நிறைந்த உறவினர், அயலவர், நண்பர்கள், அனுதாபிகள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள் கின்றோம்.

*'ஆவே மரியா'
சின்னாலடி,
அல்வாய்.
T.P.: 2263834.*

மனைவி: திருமதி செல்வராணி சிவலிங்கம்,
பிள்ளைகள்: திருமதி பிரியா செந்தில்நாதன்,
செல்வி மரியா சிவலிங்கம். (28855)

யாழ்ப்பாணம்

# குடாநாட்டில் சமுர்த்தித் திட்டம் ஓரளவு வெற்றியைப் பெற்றுள்ளது

## வங்கிக் கட்டடத் திறப்பில் மேலதிக அரச அதிபர்

வலி.தென்மேற்கு,பெப்.25

குடாநாட்டில் சமுர்த்தித் திட்டம் காலம் தாழ்த்தி ஆரம்பிக்கப்பட்ட போதிலும் ஓரளவு வெற்றி பெற்றுள்ளது.

- இவ்வாறு கூறினார் யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்.

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் பண்டத்தரிப்பில் நிறுவப்பட்ட சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா கடந்த ஞாயிறன்று பிரதேச செயலாளர் ஆ.சுப்பிரமணிய சர்மா தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே, மேலதிக அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

வறிய நிலையிலுள்ள மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி அவர்களை வலுவுள்ளவர்களாக உருவாக்கும் திட்டம் 86 சமுர்த்தித் திட்டமாகும். எமது யாழ். மாவட்டத்தில் காலம் தாழ்த்தி இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் இதனை செயற்படுத்துவதில் ஓரளவு வெற்றி காணப்பட்டுள்ளது.

எமது பிரதேசத்தில் 3 கோடி 30 லட்சம் ரூபா சமுர்த்தி வங்கிச் சங்கங்களால் சேகரிக்கப்பட்டு வைப்பிலிடப்பட்டுள்ளது. இந்த நிதி சமுர்த்திச் சங்க உறுப்பினர்களின் வாழ்வை வளம் படுத்துவதற்கும், செழிப்பான சமுதாயத்தை உருவாக்குவதற்கும் பயன்படுத்தப்படும். இந்தக் கட்டடத்தை நிறுவுவதற்கான காணியை இப்பகுதி மக்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஊடாக அன்பளிப்பாக வழங்கியுள்ளதால் கட்டடத்தை இங்கு நிர்மாணிக்கக் கூடியதாக இருந்தது. இதனை அன்பளிப்புச் செய்தவர்களுக்கு நன்றி கூறுகின்றேன். சமுர்த்தி வங்கியை இப்பகுதி மக்கள் நன்கு பயன்படுத்தி அதன் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் - என்றார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் தி.மகேஸ்வரகுமார் உரையாற்றுகையில்:-

கடந்த ஆண்டில் எமது மாவட்டத்தில் ஏழு சமுர்த்திச் சங்கங்களுக்கு நிரந்தரக் கட்டடம் நிறுவுவதற்குச் சமுர்த்தி அதிகார சபையினால் நிதி ஒதுக்கப்பட்டது. அதில் இந்தச் சங்கக் கட்டடம் முதலில் பூர்த்தியடைந்து இன்று திறந்து வைக்கப்படுகின்றது. ஏனைய சங்கங்களின் கட்டடவேலைகள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. சமுர்த்திச் சங்கங்கள் மூலம் சேகரிக்கப்பட்ட நிதியானது யாழ். மாவட்டத்திலுள்ள வங்கிகளில் வைப்பிலிடப்பட்டுள்ளது. சமுர்த்திச் சங்க உறுப்பினர்களுக்குக் கடன் வழங்குவதற்கான பயிற்சிப் பட்டறையொன்று விரைவில் நடத்தப்படவுள்ளது. இப்பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்ட பின்னர் கடன் வழங்கும் பணி ஆரம்பிக்கப்படும் - என்றார்.

வலி.தென்மேற்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.பவநீதன் உரையாற்றுகையில்:-

நாடாளுமன்றம் சென்று எவற்றையும் சாதிக்க முடியாத நிலை இருந்து வருகின்றபோதிலும் எதிர் வரும் நாடாளுமன்றத் தேர்தலை தமிழ் மக்களின் கருத்துக்கணிப்பாகக் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த கால பொதுத் தேர்தல்களின் போது பொருத்த மற்றவர்கள் சிலர் நாடாளுமன்றம் சென்றதால் தமிழ் மக்களுக்கு சேவை எதுவும் கிடைக்கவில்லை.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் குழப்பி விடுதலைப் புலிகளை வலிந்து போருக்கு இழுப்பதற்கான முயற்சிகளில் ஜனாதிபதி சந்திரிகா ஈடுபட்டு வருகின்றார். தேர்தல் முடிந்தவுடன் தலைவர் பிரபாகரன் கைது செய்யப்படுவார் என்றும் தென்னிலங்கையில் சிலர் கூக்குரலிட்டு வருகின்றனர். உலகின் இரண்டாவது பெரிய இராணுவமான இந்திய படையினராலேயே அவரைப் பிடிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு தோல்வியில் முடிந்தது தெரிந்ததே - என்றார்.

வலி.தென்மேற்கு உதவி பிரதேச செயலர் செல்வி எழிலரசி அன்ரன் யோகநாயகம், வலி.தென் மேற்கு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ச.செல்வராசா, சமுர்த்தி முகாமையாளர் எஸ். சுசீந்திரராசா ஆகியோர் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர். (எ-135)




மூவிமொன்டா நிறுவனத்தின் ஏற்பாட்டில் சுகாதாரத் தொண்டர்களுக்கான பயிற்சி நெறி ஒன்று அண்மையில் நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட மூவிமொன்டா நிறுவனத்தின் இலங்கை, இந்திய நாடுகளுக்கான வதிவிடப் பிரதிநிதி டனியவா பிரண்டி பயிற்சியாளர் ஒருவருக்குச் சான்றிதழ் வழங்குவதைப் [illegible]த்தில் காணலாம். (எ)

# முறைசாராக் கற்கைநெறிக்கு வலிகாமத்தில் பாடசாலைகள் தெரிவு

வலி.தெற்கு,பெப்.25

வலிகாமம் கல்வி வலயத்தில் முறைசாராக் கல்வி தொழிற்பயிற்சி நெறிகளுக்காக ஒன்பது பாடசாலைகள் இவ்வருடத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன. மானிப்பாய் சென்.ஆன்ஸ் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் தையல, கைத்தொழில் மற்றும் உடையமைத்தல் ஆகிய பயிற்சிநெறிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மிகவிரைவில் பின்வரும் பாடசாலைகளில் குறிக்கப்பட்ட பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

★ சுழிபுரம் விக்டோரியா கல்லூரியில் - வானொலி திருத்துதல் பயிற்சிநெறி.

★ வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் - கணனிப்பயிற்சிநெறி.

★ இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயத்தில் - உடையமைத்தல் பயிற்சிநெறி.

★ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் - வீட்டு மின்னிணைப்புப் பயிற்சிநெறி.

★ மல்லாகம் மகா வித்தியாலயத்தில் - தமிழ்த் தட்டெழுத்து, சுருக்கெழுத்து பயிற்சிநெறி.

★ மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் - உடையமைத்தல் பயிற்சிநெறி.

★ அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் - மனைமுகாமைத்துவப் பயிற்சிநெறி.

★ மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் - தமிழ்த் தட்டெழுத்து, சுருக்கெழுத்துப் பயிற்சிநெறி.

இவற்றைவிட மேலும் பாடசாலைகளில் பல்வேறு பய்ற்சிநெறிகளை ஆரம்பித்து நடத்த முறைசாராக் கல்விப் பிரிவினரால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (எ-152)

# உள்ளூர் உ.கிழங்கு சந்தையில்; மரக்கறிகளின் விலையும் வீழ்ச்சி

வலி.தெற்கு,பெப்.25

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு அறுவடை செய்யப்பட்டு சந்தைகளுக்குக் கொண்டுவரப்படுவதனால் உள்ளூர்ச் சந்தைகளில் உருளைக்கிழங்கின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

மருதனார்மடம், சுன்னாகம் போன்ற பொதுச்சந்தைகளில் ஒரு கிலோ உருளைக்கிழங்கு 30 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

உள்ளூர் உருளைக்கிழங்கின் வருகையால் வெளிமாவட்டங்களில் இருந்து கொண்டுவரப்படும் உருளைக்கிழங்கின் விலையும் வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த மாதம் வரை வெளிமாவட்டங்களில் இருந்து கொண்டு வரப்பட்டு ஒரு கிலோ 80 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்ட கிழங்கு தற்போது 55 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றன.

உருளைக்கிழங்கைத்தவிர ஏனைய மரக்கறிகளின் விலையும் தற்போது குறைவடைந்துள்ளன.

ஒரு கிலோ தக்காளிப்பழம் 10 ரூபாவாகவும், வெண்டிக்காய் 20 ரூபாவாகவும்,சிறகவரை 10 ரூபாவாகவும் போஞ்சி (வெள்ளை, பச்சை) 50 ரூபாவாகவும், கரட் 40 ரூபாவாகவும் லீக்ஸ் 60 ரூபாவாகவும் விலைப்படுவதுடன் ஏனைய மரக்கறிகளும் மலிந்த விலையில் கிடைக்கின்றன.(ம-152)

# தவக்காலச் சிந்தனை

**முதலாம் நாள்**

ஓ இந்தத் 'திருநீறு' எத்துணை அர்த்தமுள்ளது!

கிறிஸ்தவர்கள் விபூதிப் புதனன்று நெற்றியில் திருநீறு இட்டுக் கொள்கிறார்கள். இடும் சாம்பலுக்கு ஏராளமான பொருளுண்டு. சாம்பல் அணிந்த நெற்றியைப் பார்க்கும்போது தெய்வத்தை நினைக்க வைக்கிறது. இப்படி ஒரு அர்த்தம். சாவிலிருந்து வாழ்விற்கு கடந்து செல்லும் விடுதலை வேண்டும், இப்படி ஒரு அர்த்தம். திருநீறு பக்தனுக்கு மனமாற்றத்திற்கான அறைகூவலின் ஓர் அறிகுறியாகும். 40 நாள் மேற்கொள்ளும் தவக்காலப் பயணத்தின் ஆரம்ப நாள் இன்று. தவக்காலத்தில் கிறிஸ்தவர்கள் நோன்பு இருந்து இறைவேண்டல் செய்து தர்மம் புரியும் அறச்செயல்களில் ஈடுபடுவர்.

நெற்றியில் பூசிக்கொள்ளும் திருநீறு உள்ளத்தில் கருக்கொள்ளும் புதுவாழ்வுக்கான அடையாளம்.

விதையொன்றின் சிதைவிலிருந்து புதிய உயிர் பரிணமிப்பதும், அழிவிலிருந்து ஆக்கமும், மடிவிலிருந்து வாழ்வும், அஸ்தமனத்தின் மறுபக்கம் சூரிய உதயமும் போன்று பாவங்கள் சாம்பலாகும் போது அன்பும் நம்பிக்கையும் உயிர்ப்பின் பூக்களாக இத்தவக்காலத்தில் மலரட்டும்.

*சுவாமி ஜீவா போல் அ.ம.தி.*

# உணவு, சூழலில் அவதானம் பேணினால் கர்ப்பகால உயிரிழப்பைத் தவிர்க்கலாம்!

ஆணின் விந்து பெண்ணின் முட்டையைக் கருத்தரிக்க வைப்பதுடன் கர்ப்பம் ஆரம்பிக்கின்றது. இந்தக் கருத்தரித்தல் முறையானது பலோப்பியன் குழாயில் நிகழ்வதைத் தொடர்ந்து, கருத்தரித்த முட்டை கருப்பையை வந்தடைந்து, கருப்பைச் சுவரில் தரித்து வளர்ச்சியடைகின்றது. கருத்தரித்தலுடன் மாதவிடாய் நின்றுபோக, இரண்டு அல்லது மூன்று வாரங்களில் தாய் உடற் சுகம் குறைந்துபோன உணர்வைப் பெறுகிறாள். ஆறாம் வாரத்தில், குமட்டலும், வாந்தியும் சில வேளைகளில் விசேடமாக காலை நேரங்களில் அதிகமாக உமிழ்நீர் சுரத்தலும் ஏற்படும்.

எட்டாம் வாரமளவில் கருக்கட்டிய முளையம், மனித உருவத்தைப் பெறுகின்றது. 12ஆம் வாரத்தில் சூல் வித்தகம் உருவாகின்றது. அமினியோன் பையினுள் இருக்கும் முளையம் தொப்புள்க் கொடியின் மூலம் சூல் வித்தகத்துடன் தொடர்பு கொள்கின்றது. வளரும் முளையத்திற்குத் தேவையான போசணையும், ஒட்சிசனும் தாயின் குருதியிலிருந்து செல்கின்றது. எனவே, தாய்மார் இக்காலங்களில் உணவு, உடை, சூழல் தன்மைகளில மிக அவதானமாக இருத்தல் வேண்டும்.

ஏனெனில், இக்காலத்தில் முளையம் (குழந்தை) நல்லபடியாக வளர்ச்சியடைவதற்குக் கல்சியம், இரும்பு, புரதம், விற்றமின்கள் நிறைந்த உணவை உட்கொள்ளல் வேண்டும். இக்காலங்களில் தாய்மார்கள் சேயின் வளர்சிக்கு உறுதுணையாக இருந்தால் நல்ல ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றுக்கொள்ள முடியும். இன்றைய அறிவியல் வளர்ச்சியின்படி கர்ப்ப காலத்திலேயே குழந்தை பல வெளியுணர்வுகளை உள்வாங்கிக் கிரகிப்பது யாவரும் அறிந்த உண்மை.

இந்தவகையில் பிரசவ காலத்தை எடுத்துக் கொண்டால் உலகிலே வேதனைகளில் கூடிய வேதனை இந்தப் பிரசவ காலங்களில் பெண்கள் படும் வேதனையாகக் கருதலாம். எனவே, இக்காலத்தில் பெண்களுக்கு பல அபாயங்களும் ஏற்படுவதைக் காணலாம். இந்தவகையில் எந்தவொரு பெண்ணுக்கும் கர்ப்பக் காலத்திலோ, அல்லது பிரசவத்தின் போதோ, பிரசவத்தின் பின்போ சிக்கலான நிலைமை ஏற்படலாம்.




சிக்கல்களைத் தடுக்கும் பொருட்டு அதிசிரத்தையுடன் மதிப்பிடப்பட்டு, அவதானிக்கப்படவேண்டிய சில அபாய காரணிகள் வருமாறு:-

★ சிக்கல் நிறைந்த கடந்த கால பிரசவ வரலாறு:-

பிண்டச் சிதைவு, உடன் புனிற்றுப பேற்று மரணம், திரும்பத்திரும்ப ஏற்படும் கருச்சிதைவுகள்.

★ முன்னைய பிரசவச் சிக்கல்கள்:- உதாரணம்:- அதிக இரத்தப் பெருக்கு, பிரசவ கால நஞ்சேறுதல்.

★ சத்திரசிகிச்சைப் பிரசவம்.

★ முன்னைய பிரசவங்களில் இரட்டைப் பிள்ளைகள்.

★ உயரம் குறைந்த நிலைமை:- 145 செ.மீ.இற்கும் குறைந்த உயரமுள்ள தாய்மார்.

★ மிகவும் இளமையான (18 வயதுக்குக் குறைந்த) தாய்மார்.

★ 38 கிலோ கிராமிற்குக் குறைந்த அல்லது 88 கி.கிராமிற்குக் கூடிய உடல் நிறை.

★ 35 வயதிற்குக் கூடிய முதற் பிரசவம்.

★ அதிக எண்ணிக்கையான பிரசவம்:- 5 அல்லது அதற்கு மேற்பட்ட பிள்ளைகள்.

★ அதிக குருதிச் சோகை:- மிகவும் வெளிறிய தாய்மார்.

★ நோய் நிலைமைகள்:- நீரிழிவு, இருதய நோய், சிறுநீரக நோய, மலேரியா, பாலியல் தொற்றுநோய், எச்.ஐ.வி. தொற்றுநோய், கயரோகம்.

★ அசாதாரண கிடை, அமைவு:- கருப்பையில் குழந்தை அசாதாரணமான முறையில் அமைந்திருத்தல்.

★ ஏதாவது சிக்கல்கள்:- பிரசவ கால நஞ்சேறுதல், பிரசவத்திற்கு முந்திய இரத்தப் பெருக்கு.

★ பருமன் திகதி முரண்பாடு.

இவ்வாறன சந்தர்ப்பங்கள் பெணகளின் பிரசவ காலங்களில் ஏற்படக் கூடியனவாகக் காணப்படுகின்றன.

இதனால், தாய், சேய் உயிரிழப்புக்களும் ஏற்படுகின்றன. இவற்றை நிவர்த்தி செய்யத் தாய்மார்கள் வைத்திய நிலையங்களிற்கு வைத்தியரின் ஆலோசனைப்படி சென்று வரவேண்டும். இப்படி நடப்பதால் மேற்கூறப்பட்ட ஆபத்தான விளைவுகளில் இருந்து பாதுகாப்பான குழந்தையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

கர்ப்பகாலத்தின் போது பெண்களிற்கு மேலதிக போசணைத் தேவைகள் ஏற்படுகின்றன. கர்ப்பகாலத்திற்கும், பாலூட்டுங்காலத்திற்கும் தேவையான மேலதிக போசணைத் தேவைகள் கர்ப்பகாலத்தின்போது சந்திக்கப்பட வேண்டும். அதாவது, தாயினதும், வளர்ந்துவரும் சேயினதும் போசணைத் தேவைகள் நிவர்த்தி செய்யப்படல் வேண்டும். ஆகவே, தாய்மார் கர்ப்பமாவதற்கு முன்னர் உட்கொண்ட உணவை விட அதிக போசணைகள் தரும் உணவு வகைகளை உட்கொள்ளல் சாலச் சிறந்தது.

நல்ல சுகநிலைமையிலுள்ள சாதாரண ஒரு பெண் சுகமான குழந்தையைப் பெற்றுக்கொள்வதற்குக் கர்ப்பக்காலத்தின் போது 10தொடக்கம் 12Kg நிறை அதிகரிப்பை பெற்றுக் கொள்ள வேண்டும். எவ்வாறாயினும், இலங்கையைப் பொறுத்த வரை அநேகமான பெண்கள் 7 தொடக்கம் 8Kg நிறை அதிகரிப்பையே காட்டுகின்றனர். கர்ப்ப காலத்தில் போதுமான நிறை அதிகரிப்பு குழந்தையின் சுக வாழ்விற்கு அவசியம்.

போசணை நிலைமையை முன்னேற்றுவதற்கு கர்ப்பிணித்தாய்மார் நிறை அதிகரிப்பை அவதானித்தல் வேண்டும். கர்ப்பகால நிறை அதிகரிப்புச் சம்பந்தமான தொடர் கவனிப்பு தாயினதும், சேயினதும் போசணை நிலைமையை அறிந்து கொள்ள உதவுகின்றது.

அதிக நிலைமைகளில் மந்த போசணை ஒரு முக்கியமான சுகாதாரப் பிரச்சினையாகும். அகதிகளாக உள்ள தாய்மாரில் மந்தபோசணை நிலைமைகளைப் பாதுகாக்க, போசணை சம்பந்தமான அறிவுரைகள் மிக முக்கியம். கர்ப்பகால மந்த போசணை, நிறை குறைந்த குழந்தை பிறக்க வழிவகுப்பதுடன், (2ஆயிரத்து 500 கிராமிற்கு குறைநத பிறப்பு நிறை) இவ்வாறான குழந்தைகள் உயிர் தப்புவதற்குரிய சாத்தியக்கூறு சாதாரண பிறப்பு நிறை உள்ள (சராசரிப் பிறப்பு நிறை 3 ஆயிரம் கிராம்) குழந்தையினதை விட மிகவும் குறைவானது.

எனவே கர்ப்பகாலத்தில் பெண்கள் உணவு, சூழல் போன்றவற்றில் அவதானமாக இருந்தால் வீணான உயிரிழப்புக்கள், அங்கவீனக் குழந்தை பிறப்புக்கள் போன்றவற்றை நிவர்த்தி செய்யலாம். ★

**ரி.ஜெயரூபன்**
(சுகாதாரத் தொண்டர்)

உ
சிவமயம்

# பூப்புப் புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் சுபானு வருடம் மாசித் திங்கள் 13ஆம் நாள் (25.02. 2004) புதன்கிழமை முற்பகல் 9 மணிமுதல் 12.30 மணிவரையுள்ள சுப முகூர்த்தத்தில்

நவரட்ணம் ரஜனி தம்பதிகளின்
புத்திரி திருவளர் செல்வி



## பிரியா

அவர்களுக்கு

பூப்புனித நீராட்டுவிழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதனால் அத் தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் பணிவன்புடன் அழைக்கின்றோம்.

(28732) (41-14)

ஓடைக்கரை.
பருத்தித்துறை

தங்கள் நல்வரவை விரும்பும் :-
திருமதி ந.ரஜனி குடும்பத்தினர்.


# கேள்வி அறிவித்தல்

## வீடமைப்பு, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு

## கட்டடங்கள் திணைக்களம்

01. யாழ்ப்பாணம் பல்கலைக்கழக, கலைப்பிரிவு கட்டட கட்டம் Vஇல் மெல்லிய உருக்குக் கூரைவளைகள் அமைத்து உயர்த்தி இணைத்தல் மற்றும் Chanel Ironroof Frame Work இற்கான சீலிடப்பட்ட கேள்விகள், யாழ்ப்பாணம் கட்டடத்திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலக கேள்விச்சபைத் தலைவரால் 2004.03.03 மு.ப. 10.00 வரை கோரப்படுகின்றன.

02. கேள்விப் பத்திரங்கள் 2004.02.27ஆம் திகதி பி.ப. 3.30 மணி வரை மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமான ரூபா ஆயிரம் மட்டும் (ரூபா 1000.00) செலுத்தி யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்கள, பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

03. கேள்விகள் மூடப்பட்டவுடன் யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்கள, பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அலுவலகத்தில் உடன் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

04. கடந்த ஐந்து வருடங்களில் இதே மாதிரியான வேலைகள் செய்த முன்னைய அனுபவமுள்ளவர்களுக்கு மட்டுமே கேள்விப்படிவங்கள் வழங்கப்படும். கேள்வி ஆவணங்களைப் பெறுமுன் இதற்கான ஆவணச்சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

05. பொறியிடப்பட்ட கேள்விகள் நேரில் அல்லது பதிவுத் தபால் மூலம் யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்களம், மே/பா, பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) கேள்விச் சபைத் தலைவருக்கு முடிவு நேரத்திற்கு முன்னர் அனுப்பப்படவேண்டும்.

06. தாமதப் பிணைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என கேள்விதாரர் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

07. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடலாம். அத்துடன், மேலதிக விவரங்கள் யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ.டீ. விக்கிரமசிங்ஹ,
கட்டடங்கள் பணிப்பாளர்.
கட்டடங்கள் திணைக்களம்.
'செத்சிரிபாய'.
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே. பத்தரமுல்ல.

(சி-33431)(31-17-12-32)


இயேசு அழைக்கிறார்

இறையாசி பெற ஓர் அரிய வாய்ப்பு!

# யாழ்ப்பாணம் பிரார்த்தனைத் திருவிழா

பெப்ரவரி 2004
25 முதல் - 29 வரை
புதன் முதல் ஞாயிறு வரை

தினமும் மாலை 4.30 மணிக்கு
இடம் :
செல்லமுத்து மைதானம்,
மானிப்பாய்

அருளுரை, பிரார்த்தனை வழங்குபவர்கள்
Dr. டி.ஜி.எஸ். தினகரன்
Dr. பால் தினகரன்
Dr. ஸ்டெல்லா தினகரன்
சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன்

அனுமதி இலவசம்!



பயிற்சி கூட்டங்கள்
(ஆழமான ஆவிக்குரிய ஜீவியம் ஜீவிக்க)
பெப்ரவரி 26 முதல் 28 வரை
காலை 8.30 மணிக்கு
இடம் : வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
(மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபம், மானிப்பாய்)

இறைபக்தியில், நம்பிக்கையில்,
ஆன்மீக வாழ்வில் எழுச்சிப் பெற,
அன்றாட வாழ்வில் பிரச்சினைகள், துக்கங்கள்,
சரீர நோய்கள் இவற்றிலிருந்து
இறையருளால் விடுதலை பெற
சிறப்புப் பிரார்த்தனைகள்
ஏறெடுக்கப்படும்.



தலைமை ஒருங்கிணைப்பாளர் : பாஸ்டர் சாம் ராஜசூரியர்
மேலும் விவரங்கள் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
யாழ்ப்பாணம் பிரார்த்தனை திருவிழா அலுவலகம்,
சங்கரபிள்ளை ரோடு, மானிப்பாய், யாழ்ப்பாணம்.
☎ : 021-222-3204, 021-222-2659 மொபைல் : 0777174500

மும்பை (இந்தியா) நகரில் பிரார்த்தனை விழாவில் திரண்டிருந்த மக்கள் திரளின் ஒரு பகுதி!



# தமிழ்க் கூட்டமைப்பின் பெரு வெற்றியே புதிய அரசு அமைவதைத் தீர்மானிக்கும்

**த**ற்போதைய நிலைவரங்களின்படி எத்தரப்பிற்கும் தெளிவான பெரும்பான்மை கிட்டாத வகையில் தேர்தல் முடிவுகள் அமையும். தேர்தலின் பின்னர் ஒன்றில் பிரதான கட்சிகள் இணைந்த அரசை அமைக்க வேண்டும். இல்லையேல், தமிழர் கூட்டமைப்பின் ஒத்துழைப்புடன் ஆட்சி அமைக்க வேண்டும். இத்தேர்தலில் தெளிவான வெற்றி தமிழர் கூட்டமைப்புக்கே எனக்கூறின் அதில் தவறேதுமில்லை என்கிறார் கட்டுரையாளர் சீ.ஜே.அமரதுங்க. லங்காதீப நாளிதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.

**பொ**துத் தேர்தல் என்பது ஒரு ஜனநாயக நாட்டின் செயற்பாடுகளுககுத் தேவையான ஒன்றாகும். இருப்பினும், பொதுத்தேர்தல் ஒரு குறிப்பிட்ட காலத்தில் அல்லது தேவையான வேளையில் நடத்தப்படுவது முக்கியமானதாகும். மூன்றரை ஆண்டுகள் என்ற ஒரு குறுகிய காலததிற்குள் மூன்று பொதுத் தேர்தல்களை நாடு எதிர்கொள்ளும் நிலையானது எவ்விதத்திலும் திருப்திதரும் நிலை அல்ல. ஸ்ரீலங்கா இன்று எதிர்கொள்ளும் நிலைமை இதுவே ஆகும்.

இவ்வேளையில் பொதுத் தேர்தலொன்றை நடத்துவதன் மூலம் ஜனாதிபதி பல்வேறு எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற நினைக்கின்றார் போல் தெரிகிறது. அவற்றுள், முதலாவது எதிர்பார்ப்பு ஜனாதிபதியால் மூன்று அமைச்சுக்கள் பொறுப்பேற்கப்பட்டதைத் தொடர்ந்து உருவான அரசியல குழப்பநிலைகளுக்கு முடிவுகாண்பதாகும்.

இரண்டாவது ஸ்ரீ.ல.சு.கட்சிக்கும் - ஜே.வி.பிக்கும் இடையில் உருவான கூட்டணிக்கு ஆட்சியிலமரும் வாய்ப்பு உள்ளதா என்பதை உரைத்துப் பார்த்தல் ஆகும். வடமேல் மாகாணசபைககான தேர்தலை எதிர்கொள்வதற்கு முன்பாகப் பொதுத் தேர்தலை எதிர்கொள்வது மற்றொரு எதிர்பார்ப்பாகும். இவ்வாறான திடீர் நோக்கங்கள நீண்டகால நோக்கங்களுடன் தொடர்புகளைக் கொண்டிருக்கவும் கூடும்.

### நாடாளுமன்றம் கலைப்பு

தான் நாடாளுமன்றத்தைக் கலைக்க மாட்டேன் என ஜனாதிபதி ஒருவருடத்திற்கு முன்னர் எழுத்து மூலமான வாக்குறுதியை வழங்கியிருந்தார். இந்த வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிட்டே ஜனாதிபதி, நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ளார். நாடாளுமன்றத்தில் ஒரு தரப்பினருக்குப் பெரும்பான்மை இருக்கும்வரை தான் நாடாளுமன்றதைக் கலைக்கவோ அல்லது பொதுத் தேர்தலை நடத்தவோ மாட்டேன் என அந்த வாக்குறுதியில் அவர் தெரிவிததிருந்தார்.

இருப்பினும், அவரது வாக்குதியை அவரால் காபபாற்ற முடியாமல போய்விட்டது. பல்வேறு அரசியல் காரணங்கள் காரணமாக வாக்குறுதி கைவிடப்பட்டது. அக்காரணங்கள் முக்கிய இடத்தைப் பிடித்தன.

அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கு அளப்பரிய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அமைச்சுக்களைப் பொறுப்பேற்பதும் அவற்றுள் ஒன்று. இருப்பினும் தனது எதிர்த்தரப்பினிடம் நாடாளுமன்றப் பெரும்பான்மை இருக்கும் வேளையில் அமைச்சுக்களைப் பொறுப்பேற்பது நடைமுறையில் பலன்தரத் தக்கதல்ல என்பது இந்தக் குறுகிய கால எல்லைக்குள் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே தான், ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து அரசியல் சிக்கல்கள் ஆரம்பமாயின. ஜனாதிபதியால் பொறுப்பேற்கப்பட்ட மூன்று அமைச்சுக்களுக்கான நிதியை ஐ.தே.கட்சி அரசு ஒதுக்கிய போதிலும், அரசியல் சிக்கல்கள் தீரவில்லை. தேசிய நல்லிணக்க அரசொன்றை உருவாக்கி அதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஜனாதிபதி முயற்சித்தார். அது தொடர்பான பேச்சுகள் நடைபெற்றன.

இரு தரப்பினருக்கும் தோல்வி ஏற்படாத வகையில் - இருதரப்பினரதும் கௌரவம் பாதிக்கப்படாத விதத்தில் - தீர்வுகாண முடியாத காரணத்தால் பேச்சுக்கள் தொடர்ந்து இழுபட்டுக்கொண்டு போயின. ஒரு தரப்பினர் மீது மறுதரப்பினர் கொண்டிருந்த கடும அவநம்பிக்கையே தீர்வு எட்டப்படாமைக்கான முக்கிய காரணம் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

நாடாளுமன்றத்தைக் கலைத்து, பொதுத் தேர்தலை நடத்துவது என ஜனாதிபதி தீர்மானித்ததால் நிலைமைகள் மேலும் மோசமாகின. இந்த நிலைமையானது எதிர்கால அரசியல நிலைமைகளிலும் பாதிப்பை ஏற்படுததும் அதாவது, ஜனாதிபதிப் பதவியை வகிக்கும் ஒருவருக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையோரின் ஆதரவு கிடைக்காத சந்தர்ப்பத்தில் அமைச்சுக்களைப் பொறுப்பேற்று நீண்ட காலத்திற்குச் செயற்பட முடியாது என்பதேயாகும். ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்ற வேளையிலேயே இது தெரிந்த விடயமாகும். இவ்வளவு விரைவாக நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலை ஜனாதிபதி நடத்தவேண்டிய சூழ்நிலையானது பிரச்சினைகள் மேலும் தீவிரமாகியுள்ளது.

### அரசியல் நெருக்கடி நீங்குவது கேள்விக்குறியே

எவ்வாறாயினும் மூன்று அமைச்சுக்களை ஜனாதிபதி பொறுப்பேற்றதால உருவாகியுள்ள அரசியல் சிக்கல்கள் பொதுத்தேர்தல் மூலம் முடிவுக்கு வரும் என்பது கேள்விக்குரியதே. இந்தத் தேர்தல் குறித்து வெளியாகும் எதிர்வு கூறல்களை நோக்கும்போது எந்தவொரு கட்சிக்கும் தெளிவான பெரும்பான்மை கிடைக்காது எனத் தெரிவிக்கப்படுகிறது. தான் தலைமை தாங்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை ஆட்சிக்குக் கொண்டுவரும் தேவை ஜனாதிபக்கு இருபபினும், அதற்கான வாய்ப்புக்கள் மிகச் சொற்பமே என்பதை வெளிப்படையாகவே அவதானிக்க முடிகிறது. இந்தக் கூட்டணி தென்பகுதியில் பல மாகாணங்களில் வெற்றிபெறும் என்பது பலரது கணிப்பாகும். இருப்பினும், அந்த வெற்றியின் மூலம் கிடைக்கும் ஆசனங்களின் எண்ணிக்கை மூலம் நாடாளுமன்றத்தில் தெளிவான பெரும்பான்மையைப் பெற்றுவிடமுடியாது.

இந்தக் கூட்டணியின் வெற்றிக்கு ஒரு முக்கிய விடயம் தடையாக உள்ளது. அதாவது இந்நாட்டின் இனப் பிரச்சினைக்குத் தெளிவான தீர்வு இக் கூட்டணியிடமில்லை. இனப்பிரச்சினை தொடர்பாக ஸ்ரீல.சு.கட்சியும் - ஜே.வி.பியும் இருவேறு கொள்கைகளைக் கொண்டுள்ளன என உடன்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்தக் கூட்டுக்கு அத்திபாரம் அமைத்த நாட்டுப்பற்றாளர்களின் தேசிய முன்னணி கடந்த காலங்களில் சமாதான முயற்சிகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டது. இந்த முன்னணியின் செயற்பாடுகள் இந்நாட்டு சிறுபான்மை இனத்தவர்களின் மனங்களில் பதிந்துள்ளன. எனவே, தமிழ் மக்களின் எவ்வாறான ஒத்துழைப்பையும் இந்தக் கூட்டணி பெறமுடியாது. அதேபோலவே, கிழக்கு மாகாணத்தில் சொற்ப ஆதரவு கிடைக்கக் கூடும். ஆனால், முஸ்லிம மக்களின் ஆதரவு இந்தக் கூட்டணிக்குக் கிடைக்கப்போவதில்லை.

நாட்டில அதிகரித்துவரும் மதங்களிடையேயான மோதல்கள் இந்தக கூட்டணிக்குப் பாதமாக அமைய வாய்ப்புக்கள் உள்ளன. சிங்கள பௌத்த இனவாதச் சக்திகள் வலுவடைந்து வருவது தங்களுக்கு அச்சுறுத்தலாக அமையும் என்ற எண்ணம் கிறிஸ்தவ மற்றும் கத்தோலிக்க மக்களிடையே உருவாகக்கூடும் பெரும் முயற்சிகள் மற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நிலைமைகளில் மாற்றங்களை ஏற்படுத்தாவிடின் கிறிஸ்தவ, கத்தோலிக்க மக்களின் ஆதரவும் இந்தக் கூட்டணிக்குக் கிடைக்காது.

தேர்தல் முடிவுகளைத் தீர்மானிக்கும் மற்றொரு சக்தி, வர்த்தக சமூகம மற்றும் உயர், நடுத்தர வர்க்கத்தினராவர். வர்த்தக சமூகத்தினரின் ஆதரவு கிடைக்காது விடினும் அவர்கள் எதிர்ப்பைத் தெரிவிக்காத நிலைபபாட்டைக் கொண்டிராவிடின் கூட்டணிக்கு ஆட்சியைக் கைப்பற்றும் வாய்ப்புக்கள் இல்லை. பொதுத் தேர்தலை நடத்தவேண்டாமென வர்த்தக சமூகததினர் அண்மையில் ஜனாதிபதிக்குக் கோரிக்கை விடுத்திருந்தனர். அதேபோலவே ரணிலுடன் இணங்கிச் செயற்பட்டுச் சமாதான முயற்சிகளை முன்னெடுக்குமாறும் அவர்கள் ஜனாதிபதியைக் கோரியிருந்தனர். வர்த்தக சமூகத்தினரின் கோரிக்கைகளுக்கு ஜனாதிபதி செவிமடுக்கவில்லை.

கூட்டணி குறித்துத் தங்களுக்குப் பிரச்சினை ஏதுமில்லை என வர்த்தக சமூகத்தைச் சேர்ந்த ஒரு சில பிரமுகர்கள் கருத்து வெளியிட்டுள்ள போதிலும் அந்தக் கருத்து சம்பிரதாயபூர்வமாக வெளியிடப்பட்டதா அல்லது உளப்பூர்வமாக நேர்மையுடன் வெளியிடபபட்டதா என்பதே கேள்வி. நிலைமைகளை அவதானிக்கும் போது வர்த்தக சமூகத்தினரோ அல்லது உயர் மத்திய தரப்பினரோ இந்தக் கூட்டணி ஆட்சி அதிகாரத்திற்கு வருவதை விரும்பவில்லை. தங்களது பொருளாதார, அரசியல் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டிருந்த அரசுக்கு எதிரான கருத்துக்களைக் கொண்டவர்களுக்கு வர்த்தக சமூகம் ஆதரவளிக்கும் என நினைத்துப்பார்க்க முடியாது.



இதுவும் கூட்டணிக்கு சாதகமற்ற நிலைமைகளில் ஒன்றாகும்.

இந்நாட்டிலுள்ள சமாதானத்தை விரும்பும் சக்திகளின் ஆதரவு கிடைக்காத நிலைமை கூட்டணிக்குள் மற்றொரு சாதகமற்ற நிலையாகும். இடதுசாரிக்கட்சிகள் மற்றும குழுக்கள், தனிநபர்கள், அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தொழிற்சங்க அமைப்புக்கள் ஆகியன சமாதனத்தை விரும்பும் சக்திகளில் அடங்குகின்றன. இதில முக்கியமானது இச்சக்திகளில் பெருமபாலானவை பாரம்பரியமாக பொ.ஐ. முன்னணிக்கு அல்லது இடதுசாரிக்கு ஆதரவை வழங்கிவந்தன.

பொ.ஐ.முன்னணி ஆரம்பித்த சமாதான முயற்சிகளுக்கு நேரடியாக ஒத்துழைப்பை வழங்கிய இந்த அமைப்புக்கள் ஐ.தே.கட்சி மேற்கொண்ட சமாதான நடவடிக்கைகளுக்கு வெளியிலிருந்தவாறு ஒத்துழைப்பை வழங்க முன்வந்தன. இநத அமைப்புக்களைச் சேர்ந்த ஒரு பிரிவினர் தேர்தலின் போது தாம் சார்ந்த கட்சிகளுக்கு ஆதரவை வழங்கக் கூடும். ஆனால், இவர்களில் பெரும்பாலானோர் ஐ.தே.கட்சியை ஆதரிக்காவிடினும் கூட்டணிக்கு ஒத்துழைப்பை வழங்காது புதிய வழியில் செல்லவும் வாய்ப்புக்கள் உள்ளன. இனப் பிரச்சினை தொடர்பான விடயத்தில் கூட்டணியின் அரசியலுக்கும் இவர்களுககும் இடையில் எந்தவொரு உடன்பாடுமில்லை.

இதேநேரம் கூட்டணி ஆட்சியைக கைப்பற்றச் சில சாதகமான விடயங்களும் உள்ளன. இவற்றுள், முக்கியமானது ஐ.தே.முன்னணி அரசு தனது இரண்டு ஆண்டு ஆட்சியின் போது மககளின் எதிர்பார்புகளை நிறைவேற்றவில்லை. இதனால், மக்களுக்கு அரசு மீது அதிருப்தி ஏற்பட்டுள்ளது. இந்த அதிருப்தியானது ஸ்ரீல.சு.கட்சி - ஜே.வி.பி.கூட்டணிக்கு ஆதரவை வழங்குமளவிற்கு மாற்றமடையவும் கூடும். இது இந்தக் கூட்டணி ஆட்சியைப் பிடிக்க சாதகமான நிலைமைகளில் முக்கியமானதாகும்.

இது தென்பகுதியில் கூட்டணி பல மாவட்டங்களில் வெற்றியை எதிர்பார்ப்பதற்கு நியாயமான காரணமாக அமைகிறது.

ஆனால், தெளிவான பெரும்பான்மையை இதன் மூலம் பெறமுடியுமா என்பதே கேள்வி.

தற்போதைய தேர்தல் முறையின் கீழ் இடம்பெற்ற தேர்தல்களில் ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரமே ஒரு கட்சி தெளிவான பெரும்பான்மையைப் பெறறுள்ளது. அது 1989 பெப்ரவரி மாததத்தில் நடைபெற்ற தேர்தலிலாகும். 1988 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஆர்.பிரேமதாசா வெற்றிபெற்று பிரபலமாக விளங்கினார். எதிர்க் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்து குழம்பிய நிலையிலிருந்தது. வெற்றி பெறுவது குறித்த எந்த எதிர்பார்ப்பும் அவர்களிடம் காணப்படவில்லை. இந்நிலையில், 1989 பொதுத தேர்தலில் ஐ.தே.கட்சியின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டது. இருப்பினும், ஐ.தே.கட்சிக்கு 125 ஆசனங்களே கிடைத்தன.

1994 பொதுத் தேர்தலில் சந்திரிகா பண்டாரநாயக்கா ஆட்சிக்கு வநத வேளையில் அவர் ஜனப்பிரிய நாயகியாக விளங்கினார் என்பது ரகசியமல்ல. ஐ.தே.கட்சியின் உட்பூசல்கள் நிலவின. ஐ.தே.கட்சியின் தலைவர் யார் என்பது தொடர்பாகத் தீர்வு எதுவும் காணப்படாத நிலை - நிலைமை. இவ்வாறு இருந்த போதிலும் சந்திரிகா தலைமையிலான பொ.ஐ.முன்னணிககு நாடாளுமன்றத்தில் தெளிவான பெரும பான்மை கிடைக்கவில்லை. பொ.ஐ. முன்னணிக்கு 105 ஆசனங்கள் மட்டுமே கிடைத்தன. முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் இணைந்த படியால் மொத்தமாக 113 ஆசனங்கள் கிடைத்தன. தமிழ்க் கட்சிகளின் ஒத்துழைப்புடன் அந்த அரசு ஆறு ஆண்டுகள் ஆட்சியிலிருந்தது.

2000ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் பொ.ஐ.முன்னணிக்கு 107 ஆசனங்கள் மட்டுமே கிடைத்தன. முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த அறுவர் மற்றும் ஈ.பி.டி.பியைச் சேர்ந்த நால்வர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் பொ.ஐ.முன்னணி அரசை அமைத்தது. அந்த அரசை ஓராண்டு காலத்திற்குள் ஐ.தே.கட்சி தோற்கடித்தது.

2001ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில ஐ.தே.கட்சிக்குத் தெளிவான பெரும்பான்மை கிடைக்கவில்லை. இலங்கை தோட்ட தொழிலாளர் காங்கிரஸ், பொ.ஐ. முன்னணியிலிருந்து பிரிந்து வந்த குழுவினர், முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்தோர் ஆகியோரும் சேர்ந்து 109 ஆசனங்களே கிடைத்தன. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற பெயரில் போட்டியிட்டுத் தெரிவான 5 உறுப்பினர்களுடன் 114 பேரைக்கொண்ட அரசை ஐ.தே. முன்னணி அமைத்தது. சமாதான நடவடிக்கைகளுக்கு தமிழர் கூட்டமைப்பும் ஒத்துழைத்ததால் நாடாளுமன்றத்தில் 129 உறுப்பினர்களின் ஆதரவு ரணிலுக்குக் கிடைத்தது.

இருப்பினும் இவ்வாறான நிலைமையில் இரண்டு ஆண்டுகள் முடிவடையும் வேளையில் நாடாளுமன்றத்தைக் கலைக்க எடுத்த தீமானமானது யதார்ததத்தை மறந்து எடுக்கப்பட்ட தீர்மானம் என்பதால் கவலையளிக்கிறது.

இதன் பயனாக அதிகாரப்போட்டி தீவிரமடையும்; மோதல்கள் அதிகரிககும். அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைசர்களை நீக்கி வாகனங்களைக் கையேற்கும் நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளன. ஐ.தே.கட்சி இவற்றை எல்லாம் சகித்துக்கொண்டு அமைதிபேணுமா? எனக் கூற முடியாது. தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது மோதல்கள் இடம்பெறுவதைத் தடுக்க முடியாது. கொலைகள் உட்பட வன்முறைகள் தலை தூக்கலாம். தேர்தல் அமைதியாகவோ நியாயமாகவோ நடைபெறாது.

பொலீஸ், இராணுவம் மற்றும் அரச செய்தி ஊடகங்களைத் தம்வசம் வைத்துக்கொண்டு தேர்தலைச் சந்திப்பதே ஜனாதிபதியின் நோக்கங்களில் ஒன்றாக இருக்கக்கூடும் ஆனால், இரு தரப்பினருக்கும் ஓரளவு அதிகாரங்களைத் தம்வசம் வைத்திருக்கும் நிலையிலேயே பொதுத் தேர்தலைச் சந்திக்கின்றனர். இந்த அதிகாரங்களைத் தவறான வழிகளில் பயன்படுத்தவும் வாய்ப்புக்கள் உள்ளன. எனவே, எதிர்வரும் தேர்தல் இந்நாட்டின் தேர்தல் வரலாற்றில் வன்முறைகள் மற்றும் ஊழல்கள் நிறைந்த தேர்தலாகவும் அமையக்கூடும். அதிகாரத்தைக் கைப்பற்றப் போட்டியில் இறங்கியுள்ள இரு தரப்பினரிடையே நிலவும் வைராக்கிய நிலைமை மேலும் மோசமடையக் காரணமாக அமையலாம்.

### தமிழ்க் கூட்டமைப்பின் இன்றியமையாமை

இவ்வாறான அனைத்துப் போட்டிகளின் பின்னர் அதாவது எதிர்வரும் ஏப்ரல் 2ஆம் திகதிக்குப் பின்னர் அரசமைப்பதற்குத் தெளிவான பெரும்பான்மை இல்லாத ஒரு தேர்தல் முடிவே எமக்குக் கிடைக்க அதிகவாய்ப்புக்கள் உள்ளன. அதன்பின்னர் ஒன்றில் பிரதான கட்சிகள் இரண்டும் இணைந்து ஆட்சி அமைக்கவேண்டும். இல்லையேல் தமிழர் கூட்டமைப்பின் ஒத்துழைப்புடன் அரசமைக்கும் நிலைமை உருவாகக்கூடும். தேர்தலில் தெளிவான வெற்றியைப் பெறும் கட்சி தமிழர் கூட்டமைப்பே எனக் கூறில் அதில தவறேதும் இருக்கமுடியாது.

**கஜனி**

மறுபுறத்தில் எத்தரப்பினர் ஆட்சியை அமைத்தாலும் ஐதே.முன்னணி அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லவேண்டிய நிலை ஏற்படும். சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். உதவிகளை வழங்கும் அமைப்புகள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து வழங்கப்படும் உதவிகளை அந்த நிபந்தனையின் கீழ் பெற்று அவற்றை நாட்டின் அபிவிருத்திக்குப பயன்படுத்த வேண்டும். இதில் மாற்று வழி எதையும் பின்பற்ற எந்த ஓர் அரசு முற்பட்டாலும் அது நாட்டிற்கு பெருமஅழிவாகவே அமையும்.

மக்கள் இவை யாவற்றையும் புரிந்து கொண்டுள்ளதாலேயே இவ்வேளையில் தேர்தல் நடத்தப்படுவதை (நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதை) விரும்பவில்லை. ஆனால், மக்களுக்குப புரியும் உண்மை இந்நாட்டு அரசியல் வாதிகளுக்குப் புரியவில்லை. அல்லது புரிந்தாலும் அதைப் பொருட்படுத்தவில்லை. அதிகார வெறியே அவர்களது கண்களை மூடி மறைக்கிறது. அவர்களது அதிகார வெறியால் மக்களும் நாடும் பாதிப்படைகிறது. ★

# பாதைச் சேவை மீள ஆரம்பம்

ஊர்காவற்றுறை,பெப்.25

இயந்திரப் பழுது காரணமாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் இடைநிறுத்தப்பட்டிருந்த ஊர்காவற்றுறைக்கும் காரைநகரிற்கும் இடையிலான பாதைச்சேவை கடந்த வெள்ளிக்கிழமை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரியில் கடற்படையினரிடம் இருந்து வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பொறுப்பேற்கப்பட்ட 'பாதை' ஒரு சில நாள்களில அதன் வெளிஇணைப்பு இயந்திரம் பழுதடைந்ததனால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.

தற்பொழுது புதிய வெளிஇணைப்பு இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டுப் பொருத்தப்பட்டதை அடுத்து பாதைச்சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாதைச் சேவை மீள ஆரம்பிக்கப்படும்வரை பொதுமக்கள் நலன் கருதி ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் மோட்டார்ப் படகு ஒன்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-16)

# முறைசாராக் கல்விப பயிற்சி நெறிகள்

யாழ்ப்பாணம்,பெப்.25

யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் முறைசாராக் கல்விப்பிரிவினால் கணனி, தலையலங்காரம் மற்றும் மனைப்பொருளியல் ஆகியவற்றுக்கான பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவற்றில் பயில விரும்புவோர் எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கல்லூரியின் அதிபர் திருமதி எஸ்.ஜெயராஜா கேட்டுள்ளார். (ம-10)

## வலிகாமம் தெற்குப் பிரதேசத்தில்

# சுகாதாரத்துக்குத் கேடுவிளைவிக்கும் கழிவுகளை அகற்றுமாறு கோரிக்கை

வலி.தெற்கு,பெப்25

வலிகாமம் தெற்கு பிரதேசசபை எல்லைக்குள் பல்வேறு இடங்களில் சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் வகையில் கொட்டப்படும் கழிவுகளை அகற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் வலிகாமம் தெற்குப் பிரதேசசபைச் செயலாளரைக் கேட்டுள்ளனர்.

உடுவில் மல்வம் இந்துமயானம், தாவடி இந்து மயானம், இணுவில் மத்தியகல்லூரி விளையாட்டு மைதான வீதி, சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானம் போன்ற இடங்களில் பல்வேறு கழிவுப் பொருள்கள் தினமும் கொட்டப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகளின் கழிவுகள், ஏனைய கழிவுகள் என்பன இவ்விடங்களில் வீசப்படுவதனாலும், இவ்வாறு வீசப்படும் கழிவுகள் உரிய முறையில் உடனுக்குடன் அகற்றப்படாமையினாலும் சுற்றுப்புறச் சூழல் பாதிப்படைகிறது.

மேற்படி இடங்களைச் சுற்றிவர உள்ள விவசாயச் செய்கைக்கான நிலங்களும், சூழலும் மாசடைவதாகவும் -

உடுவில் கமநல சேவை நிலயத்தில் நடைபெற்ற விவசாய சம்மேளனங்களின் கூட்டத்தில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பிரதிநிதிகளிடம் விவசாயிகள் பலர் முறைப்பாடு செய்திருந்தனர்.

விவசாய சம்மேளன உறுப்பினர்களின் இந்த முறைப்பாட்டை அடுத்து தொடர்ந்து இது தொடர்பாக கூடிய கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் வலிகாமம் தெற்கு பிரதேசசபைச் செயலாளருக்கு கடிதமூலம் அறிவித்துள்ளார். (எ-152)


Direct Start

பெப்ரவரி மாதத்திற்கான புதிய கொம்ப்யூட்டர் டிப்ளோமா பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்

Registered with Ministry of Tertiary & Vocational Education

COMPUTER TRAINING COURSES

Diploma in MS Office (DMO)

Diploma in Desktop Publishing (DTP)

Diploma in Computer Studies (DCS)

Diploma in Web Design (DWD)

Diploma in Computer Programming (DCP)




- இலவச பாடநூல்கள்
- தவணைமுறை கட்டணங்கள்
- 100% செயல்முறை பயிற்சி
- ICM, UK ஆல் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்
- அனைத்து பாடநெறிகளுக்கும் காலம் 3 1/2 மாதங்கள்

மேலதிக விபரங்களுக்கு

ASIAN COMPUTER SYSTEMS

| | | |
|---|---|---|
| 2 G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ✆021-222 5677 | PRASHANNAA COMPUTER STUDY CENTRE 108, K.K.S. வீதி, சுன்னாகம். ✆ 071-2501589 | கொடிகாமம் வீதி, நெல்லியடி. (கரவெட்டி தபாலகத்துக்கு முன்பாக) ✆ 0777-878160 |


ஸிவமயம்

## யா/மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம்

## வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி - 2004

## அழைப்பு

காலம்: இன்று (2004.02.25) புதன்கிழமை பி.ப. 1.30மணி
இடம்: வித்தியாலய மைதானம்.
தலைவர்: திரு.ந.ஜெயகுமாரன் (வித்தியாலய முதல்வர்)
பிரதம விருந்தினர்: திரு.அப்பாத்துரை விநாயகமூர்த்தி (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)
சிறப்பு விருந்தினர்: திரு.மு.வ.செல்வராசா (வலயக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி)
கௌரவ விருந்தினர்: திரு.க.ஆர்வலன் (பொறுப்பாளர் - கல்விக்கழகம், தென்மராட்சி)

தங்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

அதிபர். ஆசிரியர்கள். மாணவர்கள்.
பாடசாலை அபிவிருத்திச் சங்கம். பழைய மாணவர் சங்கம்.

(28836) (26-14-16

# நான்காவது ஆண்டு நினைவு நாள்



## செல்வன் தர்மசேகரம் முகுந்தன்

(உடுப்பிட்டி அமெரிக்கன்மிசன் கல்லூரி மாணவன்)

ஆண்டுகள் நான்கு ஆயிடினும் ஆறவில்லை எம் இதயம்
ஈண்டு உம்மை நினைந்தே நாம் அனுதினமும் வாடுகின்றோம்.

தர்மகுலசிங்கம் சனசமூக நிலையம்,
வல்வெட்டி, வல்வெட்டித்துறை.
(28832) (26-14-16)

பிரிவால் வருந்தி நிற்கும்:
அப்பா, அம்மா, அண்ணா,
தம்பி, குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
09
11
1938



மறைவு
08
03
2003

## அமரர் வேலுப்பிள்ளை சின்னத்துரை

திதி: பஞ்சமி

ஒளிவிளக்கு அணைந்ததுவே!
ஓராண்டு சென்றதுவே!
மறையவில்லை உங்கள் முகம்
ஓயவில்லை உங்கள் நேசம்
நீங்கவில்லை எங்கள் துயரம்
ஆறிடுமா எங்கள் இதயம் - இக்
குறுகிய கால வேளையிலே
ஆறாது ஆறாது என்றென்றும் நீங்காது
பாசமான உங்கள் தோற்றம்
நேசமான உங்கள் நெஞ்சம்.

"கமலை",
உரும்பிராய் கிழக்கு.
021-2226082.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரக்குழந்தைகள்.

(28820) (26-14-16)


PRINCE

பிரின்ஸ்

துருபிடிக்காத உலோக கிச்சன் சின்க்

நீடித்த உழைப்பிற்கு கூடிய நிக்கள்

பூசப்பட்டுள்ளதால் சந்தையிலுள்ள ஏனைய கிச்சன் சின்குகளைவிட விசேஷமானது.




ஏக விநியோகஸ்தர்கள்:
சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
காட்சியறை: 516. ஸ்ரீசங்கராஜ மாவத்தை. கொழும்பு 10. தொலைபேசி: 324261-5. 337283-5. 436779 பெக்ஸ்: 446554
295. காலி வீதி. கொழும்பு 3. தொலைபேசி: 575666

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# புலிகளால் சிறுவர்கள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.25

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைவதற்குச் சென்ற சிறுவன் ஒருவன் நேற்றுமுன்தினம் அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டான்.

புலோலி தெற்கு, கம்பாவத்தையைச் சேர்ந்த நடராசா தனேஸ் என்ற சிறுவனே நேற்றுப்பகல் 11.45 மணியளவில் ஒப்படைக்கப்பட்டவனாவான்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு மற்றும் 'யுனிசெவ்' பிரதிநிதிகள் முன்னிலையில் யாழ். மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் வைத்து இவர் ஒப்படைக்கப்பட்டார்.

இதேவேளை, பெற்றோருக்குத் தெரியாமல் வீட்டைவிட்டு வெளியேறிச் சென்று கொழும்பிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் வேலை பார்த்து வந்த சிறுவர்கள் மூவரும் நேற்றுப் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சிறுவர்களது உறவினரால் கண்டு பிடிக்கப்பட்டு மூவரும் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர். இதனையடுத்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு மற்றும் 'யுனிசெவ்' பிரதிநிதிகள் முன்னிலையில் மூவரும் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

உரும்பிராய் தெற்கு, அன்னங்கையைச் சேர்ந்த தேவராசா பிரதீபன் (வயது 15), சின்னராசா விநோதன் (வயது 14), யோகேஸ்வரன் யோண்சன் (வயது 14) ஆகிய சிறுவர்களே ஒப்படைக்கப்பட்டவர்களாவர்.

(ம-10)

# மைதானத்தை விஸ்தரிக்க நடவடிக்கை

அரியாலை,பெப்.25

யாழ். ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் விளையாட்டு மைதானத்தை விரிவுபடுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விளையாட்டு மைதானத்தை விரிவுபடுத்துவதற்கான [illegible] காணியைக் கொள்வனவு செய்வதற்கு பிரான்ஸ் நாட்டில் வசிப்பவரான [illegible] தவபாலன் என்பவர் 50ஆயிரம் ரூபா நிதியை வழங்கியுள்ளார்.

அத்துடன், பொதுமக்களின் நிதி அன்பளிப்பு உதவியுடன் விளையாட்டு மைதான விஸ்தரிப்புக்கான காணி விரைவில் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

(ம-17)

# பனை மரத்தில் ஏறியவரை வட்டிலிருந்த பாம்பு தீண்டியது!

தென்மராட்சி,பெப்.25

பனைமரத்தில் ஏறியவர் வட்டுக்குள் இருந்த பாம்பினால் கடியுண்ட சம்பவம் கடந்த 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தாவளை, இயற்றாலையில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கந்தையா கனகரத்தினம் (வயது 49) என்பவரே இவ்வாறு பாம்பினால் கடியுண்டார். சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக இவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இதேதினத்தில் தோட்ட வேலை முடித்துவிட்டு வீடு திரும்பிய நபரும் பாம்பினால் கடியுண்ட சம்பவம் வரணி இயற்றாலையில் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை இரத்தினம் (வயது 42) என்பவர் பாம்புக்கடிக்கு இலக்காகி சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஓ-9-117)

## ஜனாதிபதி யாழ். மக்களுடன் உரையாடுவார்

யாழ்ப்பாணம்,பெப்.25

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தேசிய சேவையில் ஒலிபரப்பாகும் 'விடியும் வேளை' நிகழ்ச்சியில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க யாழ். மக்களுடன் உரையாடவுள்ளார்.

நிகழ்ச்சி ஊடாக கேள்வி கேட்க விரும்புவோர் தமது கேள்விகளை 0112695488 என்ற தொலைநகல் இலக்கத்துக்கு அனுப்பி வைக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## கால எல்லை நீடிப்பு

தென்மராட்சி,பெப்.25

தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தில் இணையவுள்ள அரச பெண் அலுவலர்கள் விருப்பினைத் தெரிவிக்கும் கால எல்லை 2004 டிசெம்பர் 31ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக அரச நிர்வாக முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் மன்னம்பெரும சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்துக்கு விருப்பினைத் தெரிவிப்பதற்கான முடிவு திகதி 2004மார்ச் 31ஆம் திகதிஎன முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ம-117)

## சமூகப் பாதுகாப்பு விழிப்புணர்வுக் கூட்டம்

தென்மராட்சி,பெப்.25

சமூகப் பாதுகாப்பு விழிப்புணர்வுக் கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 9.00 மணிதொடக்கம் மாலை 4.30 மணிவரை சாவகச்சேரி நவீன சந்தை மேல்மாடி கேட்போர் கூடத்தில் நடைபெறுமென யாழ். மாவட்ட தகவல் அலுவலர் கி.பகீரதன் அறிவித்துள்ளார். (ம-117)

## நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,பெப்.25

வட்டுக்கோட்டை, அராலி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கு இன்றும் நாளையும் தடுப்பூசி போடப்படவுள்ளது.

வட்டுக்கோட்டைப் பகுதியில் இன்று காலை 9மணி தொடக்கம் 10.30 மணிவரை வட்டு. நவீனசந்தையிலும், 11மணி தொடக்கம் 12.30 மணிவரை வட்டு. தெற்கு காளிகோயிலடி சனசமூக நிலையத்திலும் ஒரு மணி தொடக்கம் 2 மணிவரை வட்டுகிழக்கு சித்தன்கேணி தாவளை சனசமூக நிலையத்திலும், 2.15 மணிமுதல் 3.15 மணிவரை வட்டு.மேற்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அலுவலகத்திலும் இந்தப் பணி இடம்பெறும்.

நாளை வியாழக்கிழமை அராலிப் பகுதியில் காலை 8.45மணி முதல் 10மணிவரை அராலி வடக்கு கிராம அலுவலர் அலுவலகத்திலும், 10.15மணிமுதல் 11.30மணிவரை அராலி நாகேந்திரமடம் சனசமூக நிலையத்திலும், 11.45மணிமுதல் 1.45மணிவரை அராலி பிரதேச சபை உப அலுவலகத்திலும், 1.45மணி முதல் 2.45மணிவரை அராலி மத்தி முருகமூர்த்தி சனசமூக நிலையத்திலும் வைத்துத் தடுப்பூசி ஏற்றப்படும்.

அனைவரும் தவறாது தமது வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளுமாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் கேட்கப்பட்டுள்ளது. (ம-15)

# காயமடைந்த இளைஞனை ஏற்றிச்சென்ற ஓட்டோச் சாரதியைத் தாக்கியது கும்பல்!

**இணுவிலில் சம்பவம்**

வலி.வடக்கு,பெப்.25

காயமடைந்த நிலையில் காணப்பட்ட இளைஞன் ஒருவனை ஏற்றிச் சென்றமைக்காக ஓட்டோ உரிமையாளர் ஒருவர், இளைஞர் கோஷ்டி ஒன்றினால் தாக்கப்பட்டார்; அவரது ஓட்டோவும் சேதமாக்கப்பட்டது.

சில நாள்களுக்கு முன்னர் சுதுமலை, ஈஞ்சடி வைரவர் ஆலயத்திற்கு அண்மையில் காயங்களுடன் காணப்பட்ட இளைஞர் ஒருவர் அந்த வழியே வந்த ஓட்டோவை மறித்து அதில் ஏறிக்கொண்டார். சாரதி அவரை வைத்தியசாலையில் சேர்ப்பித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை காலை குறிப்பிட்ட ஓட்டோவை இளைஞர்கள் சிலர் வாடகைக்கு அமர்த்தி இணுவிலுக்கு வந்துள்ளனர். அங்கு வைத்து குறிப்பிட்ட காயப்பட்ட இளைஞனை ஏற்றிக்கொண்டு சென்றதற்காக அந்த இளைஞர் கோஷ்டி தன்னைத் தாக்கியது என்று ஓட்டோச் சாரதி தெரிவித்தார்.

அவரது ஓட்டோவும் தாக்கிச் சேதப்படுத்தப்பட்டுள்ளது. (ம-86)

## வடலியடைப்புப் பகுதியில்

# இராணுவம் வசம் இருக்கும் வீட்டை ஒப்படைக்கக் கோருகிறார் உரிமையாளர்

வலி.தென்மேற்கு,பெப்.25

வடலியடைப்பிலுள்ள இராணுவ மினி முகாம் அமைந்துள்ள தனது வீட்டை மீண்டும் தம்மிடம் ஒப்படைக்கும்படி வீட்டின் உரிமையாளர் பண்டத்தரிப்பு இராணுவ முகாம் பொறுப்பதிகாரியிடம் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

தனது குடும்பம் வசிப்பதற்கு வீடு எதுவும் இல்லாதிருப்பதால் கடந்த பல வருடகாலமாக இராணுவத்தினரால் பயன்படுத்தப்படும் இந்த வீட்டினைத் தம்மிடம் ஒப்படைத்து உதவுமாறு வீட்டு உரிமையாளரான த.தேவராசா என்பவர் கேட்டுள்ளார். அத்துடன், கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்திலும் இதுகுறித்து அவா முறைப்பாடு செய்துள்ளார்.

பண்டத்தரிப்பு இராணுவ முகாமிலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்திற்குள் இந்த வடலியடைப்பு மினி முகாம் அமைந்துள்ளது.

இதேவேளை - மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலயத்திற்கு சமீபமாகவுள்ள இராணுவ முகாம் அமைந்துள்ள வீடுகளில் ஒன்றான தமது சொந்த வீட்டையும் வேறு வீடு வசதியில்லாத தமக்குத் தருமாறு வீட்டு உரிமையாளர், இராணுவத்தின் யாழ். மாவட்ட பொறுப்பதிகாரியிடம் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார் எனத் தெரிய வருகின்றது.

(ம-135)



பருத்தித்துறை பிரதேச சாகித்திய விழாவில் சு.வரதகுமாரின் நெறியாள்கையில் அரங்கேற்றப்பட்ட 'நல்லதோர் வீணை செய்' என்ற நாடகத்தில் இடம்பெற்ற காட்சி ஒன்றைப் படத்தில் காணலாம்.

(படம்: வடமராட்சி செய்தியாளர்)

[illegible stamp]

# வாசகர் திருமுகம்

## நயினாதீவில் பொது அமைப்புகள் புனரமைக்கப்பட வேண்டும்

நயினாதீவு சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர்கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகிய, நாட்டுக்குப் பணியாற்றும் சங்கங்கள் பலவருடங்களாகப் பொதுக்கூட்டங்கள் கூட்டப்படாமல் செயலிழந்து கிடக்கின்றன. ஆரம்பகால நிர்வாகிகள் ஏனோ தானோ என்று கைவிட்டுவிட்டார்கள். இவைகளை உரிய அதிகாரிகள் முன் அறிவித்தல் கொடுத்து பொதுமக்களுக்குப் பிரசித்தமூலம் அறிவித்து சீர்செய்து உதவுமாறு பணிவுடன்வேண்டுகிறேன்.

முக்கியமான சில விடயங்கள்:-

1. ஆரம்பகாலத்தில் நடப்பட்ட சில மின்கம்பங்கள் பாவிக்கமுடியாத நிலையில் உள்ளன.

2. 6ஆம் ,8 ஆம் வட்டாரங்களுக்குரிய மின்சார ஒளிகள் மிகவும் குறைவு. மேலதிகமாக மின்பெருக்கிக் கம்பிகளைச் செய்துகொடுத்து அவர்களும் மின் ஒளிகளை பிரகாசமாகப் பெற ஆவனசெய்தல்.

3. பல வருடங்களாக பிரதான வீதியூடாகப் போடப்பட்ட தண்ணீர்க் குழாய்கள் சீர்செய்யப்பட்டும் இன்றுவரை மக்களின் பாவனைக்குத் திறந்து விடாமல் இருப்பது.

4. முக்கியமான மூன்று குறுக்கு வீதிகளும் பல வருடங்களாக செயலிழந்து கிடக்கின்றன. இவைகளைச் சீர்செய்து மக்களின் பாவனைக்குரிய விதத்தில் பஸ்ஸை ஓடவிடல். தற்பொழுது பிரதான வீதியூடாகவே பயணம் செய்திருக்கிறார்கள்.

5. கிராம ஒழுங்கைகளை சரியானவிதத்தில் புனரமைத்து செயற்படுத்தல் -

6. வங்களாவடி துறைமுகப் பாலத்தை பல வருடங்களாகத் திருத்தி அமைக்காத காரணத்தால் பாலம் கடலோடு போய்க்கொண்டிருக்கிறது. இதனை உரிய அதிகாரிகள் கவனமெடுத்து புதுப்பித்து பிரயாண ஒழுங்குகளைச் செய்து தரல் -

7. முன்னர் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட (CTB) இலங்கை போக்குவரத்துச் சபையின் (பஸ்) பேருந்து பல வருடங்களாகத் தேடுவாரற்ற நிலையில் முடங்கிக் கிடக்கின்றது. இதனை உரிய அதிகாரிகள் கவனமெடுத்து ஆவனசெய்தல்.

8. பொது மலசல கூடங்கள் இருந்த இடமின்றி மறைந்துவிட்டது.

9. தற்பொழுது பாவனையில் உள்ள மின்சாரம் அதிகாலை 6.30 மணிக்கு நிறுத்தப்படும் மின்சாரத்தைப் பொதுமக்களின் , வியாபாரிகளின் நன்மைகருதி 7.30 மணிக்கு பாவனைக்கு விட்டுத்தரல்.

ஆகவே, உரிய அதிகாரிகள் இதனை செவிமடுத்து வருங்கால, இளைய சமுதாயத்துடன் முன் அனுபவமுள்ள சமூகசேவையாளர்களையும் இணைத்துப் பொது ஸ்தாபனங்கள் செயற்பட உதவுமாறும் குறிப்பிடப்பட்ட விடயங்களைக் கவனத்தில் எடுத்துச் செயற்படுத்துமாறும் அன்புடன் வேண்டுகின்றேன்.

சி.நா.கணேசு

## வீதியில் ஒழுக்கம் பேணுவதை பொலீஸார் சொல்லித்தர முடியாது

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பிரதான வீதிகளில் அவதானமின்றி வாகனம் ஓட்டுபவர்களும், வேடிக்கை பார்த்துக்கொண்டு பயணம்செய்யும் பாதசாரிகள் உட்படப் பயணிப்போரும் அநேக [illegible] விபத்துச் சம்பவங்களுக்குக் காரணமாகி விடுகின்றனர். [illegible] அதைவிட விரும்பத்தகாத - தேவையற்ற பிரச்சினைகள், சண்டைகள் மூளுவதற்கும் வழிகோலுகின்றனர்.

வீதி விதிகளைச் சரிவர அறிந்திருப்பது, கடைப்பிடிப்பது போன்றவற்றில் அக்கறை செலுத்துவது மாத்திரமன்றி வாகனம் ஓட்டுவதில்கூட நேர்மையை, ஒழுங்கை இவர்கள் கடைப்பிடிப்பதில்லை.

இளைஞர்கள் துவிச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள்களில் போட்டி போட்டுச் சவாரிசெய்து தாமும் விபத்துக்குள்ளாகி அப்பாவிகளான ஏனைய வீதிப் பாவனையாளரையும் துன்பத்திற்கும் பல்வேறு சிரமங்களுக்கும் உள்ளாக்குகிறார்கள். இதுமட்டுமன்றி பேருந்துகளில் பயணிப்போரும்கூட யன்னல் ஊடாக வெளியே வீதியில் செல்லும் பிரயாணிகளைக் கவனியாது உமிழ்வது, கழிவுப்பொருள்களை (கச்சான்கோது, உணவுப் பொதி, கடதாசி போன்றன) வீதியால் செல்வோர்மீது வீசுவது (இது தற்செயலாகவும் நிகழ்வதுண்டு), உரத்துச் சத்தமிடுவது போன்ற மனிதத்தனமில்லாத - விலங்குகளுக்கு ஒப்பான - கீழ்த்தரமான செயல்களில் ஈடுபட்டு பிறர் மனதைத் துன்புறுத்தித் தாம் கணநேர இன்பம் அனுபவிப்பதில் வெற்றி காண்கின்றனர்.

துவிச்சக்கரவண்டி ஓட்டுநர்களும் அருகாக வீதியால் செல்லும் மனிதரைக் கவனியாது காறி உமிழ்வது, சளி எறிவது, கனவுலகில் மிதப்பது போன்று எண்ணி சைகைகள் எதுவுமின்றி வண்டியைத் திருப்புவது, வெட்டுவது, நிறுத்துவது இப்படிச் சகாசம் காட்டுவதும் நாம் அன்றாடம் காணும் நிகழ்ச்சிகளே.

மேலும் சந்திகள், வீதிஓரங்கள் தோறும் கூட்டம் கூட்டமாக நின்று கதைப்பது, பிறரைக் கேலிபண்ணுவது, உரத்துச் சத்தமிடுவது இப்படிப் பற்பல அநாகரிகமான செயல்கள் நடந்தேறிவருகின்றன. இன்னும் சிறு பிள்ளைகளைக் கூட்டிச் செல்வோர் அவர்களை அவர்கள் இஸ்ரப்படி வீதியில் விளையாடவும், ஓடியாடவும் அனுமதிப்பது விபத்துக்கு வழிவகுக்கிறது.

மேற்சொன்ன சின்னத்தனமான செயற்பாடுகளை நாம் வேறு பிரதேசங்களில் காண்பது மிகமிக அரிதேயாகும். இவற்றினால் இங்கு வீதிவிபத்துக்கள் மாத்திரமன்றி குழுச்சண்டைகள், வீண் பிரச்சினைகள் எனத் தொல்லைகள் நீண்டுகொண்டே செல்கின்றன. இவற்றைச் சட்டத்தாலோ, காவல்துறையாலோ கட்டுப்படுத்துவது என்பது இயலாத காரியமாகும். ஒவ்வொரு பொதுமகனும் தன்னைப்போல் பிறரையும் எண்ணி - மதித்து மனிதத்தன்மையோடு செயற்படுவதே இதற்கு ஒரே வழியாகும். மனிதனுக்கு ஒழுக்கம் மிகமிக இன்றியமையாதது. வாகனங்களாலும், மக்களாலும் வீதிகள் நிறைந்துள்ள இந்நேரத்தில் வீதிகளில் கடைப்பிடிக்க வேண்டிய வீதி ஒழுக்கம் முக்கியமானது.

கல்வியறிவுள்ள -சிந்தனையுள்ள - எமது சமூகம் நகரிலும் வீதிகளிலும் இவ்வாறு நடந்துகொள்வது சகிக்கமுடியாத துன்பகரமான நிகழ்வாகும். இது சமூக ஒழுக்கத்துக்கே அபகீர்த்தியை ஏற்படுத்தும் செயலுமாகும். நகரிலும், கிராமத்திலும் வீதியிலும் நாகரிகம் பேணிச் சீர்ப்படுத்துவது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

*அரியாலை,*

கலைநதி.

# முஸ்லிம்களுக்கு ஆபத்து ஏற்பட்டால் தடுக்கப் புலிகள்தான் வரவேண்டும்

## அரசியல்துறைப் பிரமுகர் பாலகுமாரன் தெரிவிப்பு

கிளிநொச்சி,பெப்.25

இன்று முஸ்லிம்களுக்கு ஓர் ஆபத்து ஏற்பட்டால் அதனைத் தடுக்க விடுதலைப் புலிகள் தான் வர வேண்டும்; வேறு எவரும் இல்லை.

- இப்படித் தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பிரமுகர் வே.பாலகுமாரன்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் இரண்டாவது ஆண்டு நிறைவுநாளில் சமகால அரசியல் நிலைகுறித்த கருத்தரங்கு நேற்று கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செங்கதிர் தலைமையில் நேற்றுப்பகல் 10.00 மணிக்கு நடைபெற்ற மேற்படி நிகழ்வில் மங்கள விளக்கினை கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரிய ரத்தினம், தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி, கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவைச் செயலர் ஏ.வி.கே. மாணிக்கம் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழத் தேசியக்கொடியினை கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முரளி ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து கருத்துரைகளை கரைச்சிப்பிரதேச செயலர் பொன் நிதியானந்தன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி, விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் வே. பாலகுமாரன் ஆகியோர் நிகழ்த்தினர். வே.பாலகுமாரன் அவர்கள் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

இனிவரப்போகின்ற காலம் நிச்சயமற்றது; திரும்பத்திரும்ப தேர்தல் வரலாம். இன்று சிங்கள கிறிஸ்தவர்களுக்கே சிங்கள தேசத்தில் பாதுகாப்புக் கேள்விக்குறியாக அமைந்துள்ளது. இதேவேளை, அங்கு சிங்கள சுதந்திரக் கட்சியினர் முஸ்லிம் மக்களை அணைத்துக் கொண்டுள்ளனர். தமிழ் மக் களை நசுக்குவதற்கு முஸ்லிம் மக்களைப் பகடைக்காய்களாகச் சிங்கள சுதந்திரக்கட்சி அரசு பாவித்துவருகின்றது. இதை யாவரும் அறிந்து கொள்ளவேண்டும். இன்று முஸ்லிம் மக்களுக்கு ஒன்று கூறி வைக்க விரும்புகின்றோம். அவர்களுக்கு ஓர் ஆபத்து ஏற்படின் தடுப்பதற்குப் புலிகள்தான் வேறு எவரும் இல்லை.

இந்த அரசியலைக் கையாளும் ஆற்றல் எமது தேசியத் தலைவரிடம் இருக்கின்றது. எமது விடுதலைப் போராட்டத்தின் விளைவாக, மாவீரர்களின் மாண்பின் பெறுமதியாக சிங்கள தேசத்தில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. எமது மக்கள் சிந்தித்து செயற்படவேண்டிய காலகட்டம் இது தான்.

இன்று சிங்கள தேசத்தில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. சிங்கள தேசம் குழம்பிப்போயுள்ளது. செய்வது அறியாது திணறி நிற்கிறது. எனவே, இக்காலகட்டத்தில் எமது மக்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டும். அந்தக்காலகட்டம் இதுவேதான என்றார். (ம)

# மின்சேமிப்பு மின்குமிழ்கள் கடனடிப்படையில் விநியோகம்

## நாளைமுதல் பெறலாம் என்கிறது மின்சாரசபை

யாழ்ப்பாணம்,பெப்.25

இலங்கை மின்சாரசபையினால் சி.எப்.எல். ரக மின்சேமிப்பு மின்குமிழகள் வட்டியில்லாத இலகு தவணை அடிப்படையில் மின் பாவனையாளர்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன.

சொந்த வீட்டில் வசிக்கும் மின் பாவனையாளர்களுக்கு மட்டுமே இவ்வாறு விநியோகிக்கப்படும் என்று மின்சாரசபை அறிவித்துள்ளது.

இலகு தவணை அடிப்படையில் இந்த மின்குமிழ்களைப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் இறுதி மாதத்துக்குரிய பணத்தை முழுமையாகச் செலுத்திய பின்னர் அந்தப் பற்றுச்சீட்டுடன் தேசிய அடையாள அட்டையையும் சமர்ப்பித்தால் நான்கு சி.எப்.எல். மின்குமிழ்களை எந்தவித முற்பணமும் செலுத்தாமல் பெற்றுக் கொள்ளலாம்.

இதற்குரிய பெறுமதி 12மாத தவணை முறையில் அறவிடப்படும். மின்குமிழ்களை கிழமை நாள்களில் காலை 8.30மணிதொடக்கம் மாலை 4.30மணிவரையும் இலங்கை மின்சாரசபையின் சுன்னாகம் அலுவலகத்தில் பெறலாம். நாளை வியாழக்கிழமை முதல் விநியோகம் ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு வருட உத்தரவாதத்திற் குள் பழுதடையும் மின்குமிழ்களை முகவர்கள் ஊடாக மாற்றிக்கொள்ள முடியும என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-10)

# கல்வி, கலாசார, விளையாட்டுத்துறைகளில் 175 வருடங்கள் பணியாற்றிய பாடசாலை

## பருத்தித்துறை மெதடிஸ்த மிஷன் பாடசாலை ஆண்டு விழாவில் உரை

வடமராட்சி,பெப்.25

கிறிஸ்தவ மதகுருமார்களினால் இப்பாடசாலை உருவாக்கப்பட்டதால் அதன்செல்வாக்கு மிகுந்து காணப்பட்டது. 175 வருடங்கள் சிறப்புடன் இப்பாடசாலை இயங்கியதென்றால், இதன் பங்களிப்பு கல்வி, கலாசார, விளையாட்டு என்பவற்றால் இப்பிரதேச மக்கள் பல நன்மைகளைப் பெற்றுள்ளார்கள் என்பதே வெளிப்பாடாகும்.

- இவ்வாறு யாழ். பல்கலைக் கழக வணிக, முகாமைத்துவ பீடாதிபதி மா.நடராஜசுந்தரம் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையின் 175 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டிய மலர் வெளியீட்டு விழாவில் சிறப்புரையாற்றுகையில் கூறினார்.

அதிபர் திருமதி செலவமலர் சுந்தரேசன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில், பீடாதிபதி மா.நடராஜசுந்தரம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

இப்பாடசாலை ஆரம்பத்தில் ஹாட்லிக் கல்லூரியுடன் இணைந்து இப்போதுள்ள இடத்திலேயே இயங்கி வந்துள்ளது. 1868 ஆம் ஆண்டளவில பிரிந்து ஒன்று பெண்கள் பாடசாலையாகவும் மற்றையது அதாவது ஹாட்லிக் கல்லூரி ஆண்கள் பாடசாலையாகவும் மாறின. கிறிஸ்தவ மதகுருமாரினால் இப்பாடசாலைகள் உருவாக்கப்பட்டதனால் செல்வாக்குடன் திகழ்ந்தன.

போர்அனர்த்தங்கள், இடப்பெயர்வு போன்ற அல்லல்களிலும் இப்பாடசாலையின் புகழ் தொடர்ந்தும் வளர்ந்து வருவது மிகச்சிறப்பானதாகும். பாடசாலையின் வரலாறு தொகுக்கப்பட்டமை பாடசாலையின் தோற்றத்தினை மேலும் மெருகூட்டுகின்றது. இன்னும் 50 வருடங்களுக்குப் பின்புதான் இம் மலரின் முக்கியத்துவம் உணரப்படும. இது போன்ற வரலாற்று மலர்கள், நூல்கள் மிகுந்த பாதுகாப்புடன் ஆவணப்படுத்தப்படவேண்டும் என்றார்.

பருத்தித்துறை பிரதேச சபை நூலகர் ஏ.என்.எஸ்.திருச்செல்வம் மலரை வெளியிட்டு வைத்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

ஆங்கிலேய ஆட்சியாளர்களின் தேவைகளையும், சமயரீதியிலான விருப்பங்களையும் நிறைவேற்ற ஆங்கிலேயர்களினால் இப்பாடசாலை உருவாக்கப்பட்டது. சமயரீதியான போதனைகள் இடம்பெற்ற, அதே வேளையில் இப்பாடசாலையில் நவீன பள்ளிக்கூட மரபு மெல்லமெல்ல வளர்ந்தது உண்மையாகும். பிரித்தானிய பாடசாலை மரபு சுதந்திரத்துக்குப் பின்னர் எமது தேசியப்பாடசாலை மரபாக மாற்றமடைந்தது. இலவசக் கல்வி, தாய்மொழிக் கல்விப் பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றமை, சனத்தொகையின் அதிக பரம்பல் காரணமாக ஏற்பட்ட கல்வித் தேவைகளை பூர்த்திசெய்தல் ஆகிய தேவைகளைப் பாடசாலைகள் நிறைவு செய்யமுடியாதுள்ளன.

இரு மொழிப்பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை பல்வேறு பெயர்மாற்றங்களுக்கு ஊடாக இன்று உன்னத நிலையடைந்துள்ளது. நீண்ட மரபைக்கொண்ட இப்பாடசாலையின் வரலாறு பூரணத்துவம் கொண்ட மலராக வெளியிடப்பட்டுள்ளது - என்றார்.

அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் தமது தலைமையுரையில் கூறியதாவது:-

175 ஆண்டுகளுக்கு முன்னர் வடமராட்சியில் பெண்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையின் பெருமையையும்,வளர்ச்சிப் போக்கையும் எமது சமூகத்துக்குத் தெளிவுபடுத்தும் நோக்கில் இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது. இம்மலர் எமது எதிர் காலச் சந்ததியினருக்கு அரிய பொக்கிஷமாகும் என்றார்.

மலரின் முதலாவது பிரதியை வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள இளைப்பாறிய மாகாணக் கல்விப் பணிப்பாளரும், பாடசாலையின் பழைய மாணவியுமான செல்வி திலகவதி பெரியதம்பி பெற்றுக்கொண்டார். பாடசாலையின் 175 ஆவது ஆண்டின் அதிபராகப் பணியாற்றிய. திருமதி எம்.ஜி.நவரட்ணத்துக்கு செல்வி திலகவதி பெரியதம்பி, பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

விழா ஆரம்பத்தில் உப அதிபர் திருமதி சீதாதேவி சண்முகநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார். பருத்தித்துறை கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம் உரையாற்றினார். பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொருளாளர் திருமதி இந்திராணி ஸ்ரீரங்கன் நன்றி தெரிவித்துப்பேசினார். (ம-173)

# புரிந்துணர்வு உடன்படிக்கையின் 2 ஆம் வருட பூர்த்திதின நிகழ்வுகள் கொழும்பில் நடந்தன

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் இரண்டாண்டு பூர்த்தியைக் கொண்டாடும் நிகழ்ச்சிகள் கொழும்பில் கடந்த 22ஆம் திகதி நடைபெற்றன.

சமாதானத்துக்கும், ஜனநாயகத்துக்குமான தேசிய இயக்கம் எனும் அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சி, கொழும்பு விகாரமாதேவி பூங்காவின் விசேட அரங்கில் நடைபெற்றது.

நிகழ்வில் அரசியல் தலைவர்கள், மதகுருமார் மற்றும் ஏராளமான பொதுமக்களும், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சி ஆரம்பித்த சிறிது வேளையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான ராஜீத சேனாரத்ன, ஜயலத் ஜயவர்த்தன, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோருடன் அரங்குக்கு வந்து சுமார் அரைமணி நேரம் பார்வையாளர் பகுதியில் இருந்து நிகழ்ச்சியைப் பார்வையிட்டார்.

சமாதானத்துக்கும், ஜனநாயகத்துக்குமான தேசிய இயக்கத்தின் செயலாளர் குழு சார்பாக சுசில் சிறிவர்தன, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார, மேல்மாகாண சபை உறுப்பினர் கலாநிதி விக்கிரமபாகு குமாரதுங்க, கிறிஸ்த மதகுருவான அனுர பெரேரா, பௌத்த மதகுருவான மடிகல் கடவல, புஞ்ஞசார தேரர், சகவாழ்வுக்கான அமைப்பின் தலைவர் குமார் ரூபசிங்க, யாழ். மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சுபரமநாதன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

இங்கு உரையாற்றிய கலாநிதி குமார் ரூபசிங்க கருத்துத் தெரிவிக்கையில், எதிர்வரும் தேர்தல் குறிதது விசனம் தெரிவித்துள்ளதுடன், இத் தேர்தல் நடத்தப்படும் நோக்கம் குறித்த பல்வேறு சந்தேகங்கள் தோன்றியிருப்பதாகவும் தெரிவித்தார்.

தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் குறித்தும், போர் நிறுத்த உடன்படிக்கை குறித்தும் தனதுரையில் குறிப்பிட்ட குமார் ரூபசிங்க, போர் நிறுத்த உடன்படிக்கையை எவ்வாறு தொடர்ந்தும் முன்னெடுக்கப் போகிறோம் என்பதுதான் இப்போது நாம் முகம்கொடுக்கும் சவால் என்று தெரிவித்தார்.

தமிழ் மக்கள் இன்னுமொரு 50 ஆண்டுகளுக்குக் காத்திருக்க முடியாது எனவும், அவர்கள் இயன்றளவு காலத்துக்குக் காத்திருந்து விட்டதாகவும் தனதுரையில் குறிப்பிட்ட அவர், இந்நாட்டின் ஆளும் வர்க்கமும், அதனுடைய பிரதிநிதிகளும் இப்பிரச்சினைக்கு ஓர் இணக்கப்பாட்டுத் தீர்வைக் காண்பதற்கான அரசியல் சூழ்நிலையை எற்படுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, தேசபக்தி கொண்டவர்கள் என்று தம்மைக் கூறிக் கொள்பவர்கள், சிங்கள பௌத்த இனத்தின் பேரால், இந்நாட்டில் ஒரு சர்வாதிகார ஆட்சியை நிறுவவே முயன்று கொண்டிருப்பதாக இந் நிகழ்ச்சியில் உரையாற்றிய புதிய இடதுசாரி முன்னணியைச் சேர்ந்த கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஏதிர்வரும் பொதுத் தேர்தலில் மக்கள் வாக்களிக்கும்போது சமாதானம், ஜனநாயகம் என்ற செய்தியை மனதில் நிறுத்திக்கொண்டு தமது வாக்குகளை இடவேண்டும் என்றும் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன கோரிக்கை விடுத்தார் (ம)

## இசை நிகழ்வில் இன்று

யாழ்ப்பாணம்,பெப்.25

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் வருடாந்த இசை விழாவின் ஐந்தாம் நாளான இன்று புதன்கிழமை நடைபெறும் நிகழ்வுகள் பற்றிய விவரம் வருமாறு:-

மாலை 4.30 மணிக்கு எஸ்.பாலமுருகன், கே.நாகதீபன் குழுவினரின் மங்கள இசை, 5.30 மணிக்கு கீத வாஹினி இசைக்கல்லூரி மாணவர்களின் குழுப்பாட்டு, 5.50 மணிக்கு தேதீஸ்வரன் தர்சினியின் பாட்டு, 6.30 மணிக்கு ந.கர்ஜினி, தி.தாரணி, கி.நாராயணி, யோ.கார்த்திகா, க.பிரார்த்தனா, தி.ரஜீவி ஆகியோரின் வயலின் இசையும் இடம்பெறும்.

தொடர்ந்து 7மணிக்கு ரி.பிரதீபனின பாட்டு, 7.30மணிக்கு ரி.றொபேட்டின் இசைக்கச்சேரி, 8.30மணிக்கு முல்லை மாவட்ட நுண்கலைக் கல்லூரி மாணவிகளின் நாட்டியாஞ்சலி என்பன நடைபெறும். (ம-ரி)


## பொதுமக்களுக்கான அறிவித்தல்

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகளைப் போட்டு இயந்திரம் மூலம் கூட்டெரு தயாரிப்பதற்குப் பொருத்தமான 10 பரப்புக்குக் குறையாத நிலத்தினை நீண்டகாலக் குத்தகைக்குப் பெற்றுக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாநகரசபை எல்லைக்குள் அல்லது அதனுடன் அண்டிய பகுதிகளில் இவ்வாறான காணிகளைக் குத்தகைக்கு விட விரும்புவோர், அதன் விஸ்தீரணம், அமைவிடம் என்பனவற்றைக் குறிப்பிட்டு சபையுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இ.இராமலிங்கம்,
ஆணையாளர்,
யாழ்.மாநகரசபை.

(சி-33438) (19-12-39)

## பாதுகாப்பு அலுவலர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றில் பணி புரிவதற்கு பாதுகாப்பு அலுவலர்கள், காவலாளிகள் தேவை.

விண்ணப்பதாரர்கள் இத்துறைகளில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவமும், தகுந்த கல்வித்தரமும் உடையவர்களாக இருப்பது அவசியம்.

வயதெல்லை: 28 முதல் 50 வரை.

பொலிஸில் பணியாற்றியவர்களுக்கு வயதெல்லை பொருட்படுத்தப்படமாட்டாது.

கல்வித்தகைமைகள் மற்றும் அனுபவச் சான்றிதழ்களுடன், அண்மையில் உறவினர்கள் அல்லாத இருவரிடம் பெற்ற நற்சான்றிதழ்களுடனும் 02.03.2004 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

இல: 2180
மே/பா உதயன்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/33437)(35-12-39)

## யாழ்ப்பாண மாநகரசபை
## பொதுமக்களுக்கான ஓர் அறிவித்தல்

மாநகரசபை எல்லைக்குள்ளிருக்கும் பல வீதிகளில் பல்வேறு வகையான கட்டடப்பொருள்கள், கழிவு இரும்புகள், வாகன உதிரிப்பாகங்கள் போன்றவை பொறுப்பற்ற விதத்தில் பொதுமக்களினால் போடப்படுவதனால் வாகனப் போக்குவரத்திற்கு இடையூறாகவும், வீதி விபத்துக்களை ஏற்படுத்தும் காரணிகளாகவும் அமைந்துள்ளதனால் அவ்வாறான பொருள்களை எக்காரணம் கொண்டும் வீதிகளில் போடுவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு யாழ். நகர மக்கள் அனைவரையும் தயவாகக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தவறுவோருக்கு எதிராக நீதிமன்ற மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி-33439) (26-12-39)

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

# ஆஸ்பத்திரி அருகே பட்டாசு கொளுத்தி விஷமிகள் சேஷ்டை!

வலி.தென்மேற்கு,பெப்.25

நள்ளிரவு நேரத்தில் அரச வைத்தியசாலை ஒன்றின் வேலியில் பட்டாசுக் கோர்வை ஒன்றைக் கட்டி அதனை விஷமிகள் சிலர் வெடிக்க வைத்ததால் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்கள், அங்கு பணியிலிருந்த ஊழியர்கள் மற்றும் அயலவர்கள் ஆகியோர் பெரும் பதற்றமும், அதிர்ச்சியும் அடைந்தனர்.

கடந்த சனிக்கிழமை நள்ளிரவு நேரத்தில் கோட்டைக்காட்டிலுள்ள வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வைத்தியசாலையின் வடக்குப் புறத்தின் வேலியில் இந்தப் பட்டாசு வெடிக் கோர்வையை விஷமிகள் சிலர் கட்டி அதனை வெடிக்க வைத்தனர் என்றும் -

இதனால் அப்பகுதியில் வசித்து வரும் மக்களும், வைத்தியசாலை நோயாளர்களும், இரவுக் கடமையிலிருந்த ஊழியர்களும் பலத்த அதிர்ச்சியும் பதற்றமும் அடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி வட்டுக்கோட்டை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ஐ-135)

# எஞ்சியுள்ள பனை வளத்தைப்பேண பொதுமக்கள் ஒத்துழைக்கவேண்டும்

## பொருண்மிய நிறுவனம் கோரிக்கை

வலிகாமம்தெற்கு,பெப்.25

எமது மண்ணில் எஞ்சியிருக்கும் பனைமரங்களைப் பாதுகாக்க சகல மக்களும் விழிப்புடன் செயற்படவேண்டும்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் இவ்வாறு பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

கடந்தகாலங்களில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாகவும் மற்றும் அத்தியாவசிய தேவை உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காகவும் பனை வளங்கள் அழித்தொழிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும 15 லட்சத்துக்கு மேற்பட்ட பனைமரங்கள் அழிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

பல்வேறு பனம் உற்பத்திப் பொருள்களுக்காகவும், உணவுத்தேவைகளுக்காகவும் பயன்பட்டுவரும் எஞ்சிய பனைமரங்களையாவது நாம் பேணிப்பாதுகாக்கவேண்டும்.

இது தொடர்பாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பலதிட்டமிட்ட செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. எமது திட்டங்களுக்குப் பொதுமக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

விற்பனை நோக்கத்தோடும், தொழில் செய்யும் நோக்கத்துடனும் பனை மரங்களைத் தறித்து அவற்றின் வளத்தைக் குறைக்கவேண்டாம்.

அவசியமான தேவைகளுக்கு மட்டும் உரிய காரணங்களை வெளிப்படுத்தித் தேவையான அனுமதியைப் பெற்றுக்கொண்டு பனைகளை தறிக்குமாறும், சுற்றுப்புறச்சூழல்களை பாதுகாக்குமாறும் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவுறுத்தி உள்ளது. (ஐ-152)

## சென்.பற்றிக்ஸ் வீதி திருத்தப்படவில்லை

குருநகர்,பெப்.25

குருநகர் சென்.பற்றிக்ஸ் வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. இதனால் இவ்வீதியூடாகப் பயணிப்போர் மிகுந்த சிரமத்தை அனுபவித்து வருகிறார்கள்.

குருநகர் கடற்கரை வீதிக்கும், குருநகர் பாங்ஷால் வீதிக்கும் இடையில் அமைந்துள்ள இவ்வீதி நீண்டகாலமாகக் கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகின்றது.

குருநகர் சேமக்காலை, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். புனித மரியன்னை பேராலயம் ஆகியவற்றுக்குச் செல்வோரும் ஏனைய இடங்களுக்குச் செல்வோரும் இவ்வீதியைப் பாவித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-51)

# பாரம்பரிய இசைக் கலைகளை அடுத்த சந்ததிக்குக் கையளிப்போம்!

## மிருதங்க அரங்கேற்ற விழாவில் உரை

வலி.தெற்கு,பெப்.25

இசை உலகில் இன்று ஓர் இளம் சந்ததி உருவாகிவருகிறது. அதனிடம் எமது பாரம்பரிய இசை சரியான முறையில் கையளிக்கப்படவேண்டும். புகழ்பெற்ற மிருதங்கக் கலைஞர்களான ஏ.எஸ்.இராமநாதன், க.ப. சின்னராசா மற்றும் மகேந்திரன், சிதம்பரநாதன் போன்றோரின் வரிசையில் செல்வன் குமாரசாமி ரவிசங்கரும் வளர்ச்சியும் புகழும் பெறவேண்டும்.

நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெற்ற செல்வன் குமாரசாமி ரவிசங்கரின் மிருதங்க அரங்கேற்றத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கிய யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். பல்கலைக்கழக நடனத்துறைத் தலைவர் பேராசிரியர் சபா. ஜெயராசா தலைமையில் அரங்கேற்றம் நடைபெற்றது.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் தனது உரையில் மேலும் கூறியதாவது:-

எமது பாரம்பரிய கலை வாத்தியக் கருவிகளுள் ஒன்றான தவில் இன்றும் முதன்மை பெற்றுவிளங்குகின்றது. அதேபோல் ஏனைய வாத்தியக் கருவிகளான மிருதங்கம், தபேலா, கடம், கெஞ்சிரா, டோரா போன்ற கருவிகளின் பாவனையையும் கலைஞர்கள் உயர்நிலையில் வைத்திருக்கச் செய்யவேண்டும். இளம் கலைஞர்கள் எமது இசையின் தரத்தையும், புகழையும் உயரவைத்து வளர்ச்சி பெற்ற கலைகளாக அவற்றை ஆக்க வேண்டும்.

அரங்கேற்றம் செய்யும் கலைஞர்கள் அரங்கேற்ற நிகழ்வுடன் தமது கலையை நிறுத்திக்கொள்ளாது பல மேடைகளில் அவற்றை முன்னெடுக்கவேண்டும்.

கலைஞர்கள் இறைவனால் படைக்கப்படுபவர்கள். செல்வன் ரவிசங்கர் பாடகர்களுக்குத் துணையாக அல்ல, இணையாக வாசித்துள்ளார். அவர் இசைத்துறையில் மேலும் வளர்ச்சிபெற வேண்டும் - என்று தெரிவித்தார்.

### ஆதீன முதல்வர்

நல்லை ஆதீன முதல்வர் தமது ஆசியுரையின்போது - இசையினூடாக நாம் இறைவனை அடைகிறோம். இசையின் பாரம்பரியத்தைப் பேணி வளர்ப்பது இளம் கலைஞர்களின் கடமை. குரு பக்தி, இறை பக்தி கலைஞர்களுக்கு இருக்கவேண்டுமெனக் கூறினார்.

இந்துகலாசார அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் தனது வாழ்த்துரையில்:-

எமது பாரம்பரிய கலைகள் சமயத்தை மெருகூட்டுவனவாக அமைந்துள்ளன. சைவ சமயத் தெய்வங்கள் வீணை, மிருதங்கம், புல்லாங்குழல் போன்ற இசைக் கருவிகளைத் தங்கள் கரங்களில் ஏந்தி நிற்கின்றன. தெய்வீகக் கலைகளை அழிந்துவிடாது பாதுகாக்க வேண்டும். சமய பாரம்பரியங்களை - விழுமியங்களை வளர்க்கக்கூடிய வாரிசுகளை உருவாக்கவேண்டும். குரு - சிஷ்ய பாரம்பரியம் இன்னமும் அழிந்துவிடவில்லை என்பதை செல்வன் ரவிசங்கரின் குரு வணக்கம் எடுத்துக் காட்டியுள்ளது - என்றார்.

### ஆறு.திருமுருகன்

செஞ்சொற்கொண்டல் ஆறு. திருமுருகன் தமது உரையில்:-

இசை, நடனம் போன்ற துறைகளில் பயிற்சிபெற்ற நூற்றுக்கணக்கான கலைஞர்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து வருடம் தோறும் வெளிவருகின்றனர். தமது சக கலைஞர்களின் அரங்கேற்ற நிகழ்வுகளில் இவர்கள் பங்குகொண்டு கலைநுட்பங்களை அறிந்துகொள்வதோடு, ஒரு குடும்ப உணர்வுடன் கலந்துகொள்ளவேண்டும் - என்றார்.

பேராசிரியர் சபா.ஜெயராசா தமது தலைமையுரையின்போது:-

இசை என்பது திடீரெனத் தோன்றுவது அல்ல. சிறுகச்சிறுக வளமூட்டி வளர்க்கப்படுபவை. எமது பாரம்பரிய கலைகள், இசைகள் நமது நாட்டில் மட்டுமல்ல, தமிழர் வாழும் இடங்களில் எல்லாம் பரவவேண்டும். இதற்காக எமது பல்கலைக்கழகங்களில் இசைத்துறைக்கு பெருமுக்கியத்துவம் கொடுத்துள்ளோம் - என்றார்.

வில்லிசைப் புலவர் நா.கணபதிப்பிள்ளை, கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் க.பொ.கமலநாதன் ஆகியோர் பாராட்டுரைகளை வழங்கினர்.

சங்கீத ரத்தினம் சி.மகேந்திரன் மதிப்பீட்டுரை நிகழ்த்தினார்.(ஐ-152)

## வட்டுக்கோட்டை கிராம ஆஸ்பத்திரியில்

# பற்சிகிச்சையை இருதினங்கள் வழங்குமாறு வேண்டுகோள்

வலி.தென்மேற்கு,பெப்.25

வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலையில் வாரத்தில் புதன்கிழமைகளில் மட்டும் நடைபெறும் பற்சிகிச்சைப் பிரிவை பல்நோயாளர்களின் நலன்கருதி வாரத்தில் இருதினங்களாக அதிகரிக்க வேண்டுமென்று இப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

புதன்கிழமைகளில் பொதுவிடுமுறை நாள் வரும் பட்சத்தில் பற்சிகிச்சைப்பிரிவு இயங்குவதில்லை என்றும் -

அடுத்துவரும் புதன்கிழமையிலேயே பல்வைத்திய அதிகாரி வந்து சிகிச்சையளிப்பதாகவும் -தெரிவிக்கப்படுகின்றது.

ஆகவே வாரத்தில் இரு தினங்களாவது இங்குள்ள பற்சிகிச்சைப் பிரிவை இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொது நலஅமைப்புக்கள் யாழ்.சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளரைக் கடிதம் மூலம் கேட்டுள்ளன. (ஐ.135)

# எரிபொருள்களுக்கு என்றுமே நிர்ணய விலை கிடையாதா?

எரிபொருள்களின் தற்போதைய விலை என்ன என்று கேட்டால் யாருமே தெளிவாக விடை கூறமாட்டார்கள். ஏனெனில் அவற்றின் விலைகள் அடிக்கடி அதிகரிக்கப்பட்டு வருவதுதான்.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அண்மைக்காலமாக ஒவ்வொருமாத இறுதியிலும் புதிய விலைகளை நிர்ணயித்து வருகின்றது. இதனால் பாவனையாளர்கள் பாதிக்கப்படுவது ஒருபுறம் இருக்க ஒரு வித விலைக் குழப்பத்துக்கும் வழியேற்படுகின்றது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம 5ஆம் திகதி முதல் காணப்படும் எரிபொருள் விலைத் தளம்பலில் இதுவரை மண்எண்ணெயின் விலை இரண்டு ரூபாவால் உயர்ந்திருக்கின்றது.

## செய்திக்கட்டுரை

குடாநாட்டு மக்கள் பல தேவைகளுக்காக மண்எண்ணெயை அதிகம் பயன்படுத்துகின்றனர்.

விவசாயம், கடற்றொழில், சமையல் ஆகிய மூன்று முக்கிய தேவைகளின் நிமித்தம் மாதாந்தம் பல லட்சம் லீற்றர் மண்எண்ணெய் குடாநாட்டில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

குடாநாட்டில் வரட்சிக்காலம் அதிகரித்து வருவதால் பயிர்களுக்கு கிணற்று நீரின் தேவை அதிகரித்துள்ளது. பயிர்களுக்கு நீர் இறைக்கும் விவசாயிகளுக்கு அத்தியாவசியமானது மண்எண்ணெய். எனவே விவசாயிகளால் நாளாந்தம் பெருமளவு மண்எண்ணெய் நுகரப்படுகிறது. மண்எண்ணெயின் விலை அதிகரிப்பினால் முதலில் பாதிக்கப்படுபவர்கள் குடாநாட்டு விவசாயிகள்தான்.

அடுத்ததாக கடற்றொழிலாளர்கள் அதிகளவில் மண்எண்ணெய்யை பயன்படுத்துகின்றனர். மீன்பிடி வள்ளங்களுக்காகவும் வேறு பல தேவைகளுக்காகவும் அவர்கள் மண்எண்ணெய்யை நம்பி இருக்கின்றனர்.

விறகு மூலம் சமையல் செய்யும் பழக்கம் இங்கு வெகுவாக அருகிவிட்டது. எந்த வீட்டைப் பார்த்தாலும் மண்எண்ணெய் அடுப்பு அல்லது மின் அடுப்புகள் மூலமே சமையல் செய்யப்படுகிறது. இப்போது 'காஸ்' போன்ற வசதிகள் கிடைத்துள்ள போதும் குடாநாட்டின் கணிசமான வீடுகளில் குசினி சமையல் தேவைக்கு மண்எண்ணெய்யே இன்னமும் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றது.




இப்படிப்பட்ட நிலையில் மாதாந்தம் எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்படுவதால் குடாநாட்டு மக்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

மண்எண்ணெய் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி நள்ளிரவு தொடக்கம் 28ரூபா 55 சதமாக அதிகரிக்கப்பட்டது.

இந்தத் திடீர் விலை அதிகரிப்பால் நாளாந்தம் உழைத்துக் குடும்ப வாழ்க்கையை மேற்கொள்ளும். சாதாரண மக்கள் பாதிப்பை எதிர்கொண்டனர்.

எரிபொருள்களுக்கு ஒரு நிலையான விலை நிர்ணயம் செய்யப்படாது. மாதாந்தம் அதற்கான விலைகளை அதிகரிப்பதும் பின்னர் குறைப்பதாலும் பாவனையாளர்கள் குழப்பமடைகின்றனர்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி இரண்டு ரூபாவால் அதிகரிப்புச் செய்யப்பட்ட மண்எண்ணெய்யின் விலை. இதுவரை குறைக்கப்படவில்லை. இதற்கான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை அதற்குப் பின்னர் இரண்டு தடவைகள் பெற்றோலின் விலை லீற்றர் இரண்டு ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விற்பனை நிலையங்களில் -

★ மண்எண்ணெய் லீற்றர் 28 ரூபா 55 சதமாகவும் -

★ டீசல் லீற்றர் 36 ரூபாவாகவும் -

★ பெற்றோல் லீற்றர் 67ரூபா 50 சதமாகவும் தற்போது விற்கப்படுகின்றன.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சாதாரண மக்களினதும் மற்றும் விவசாயிகள், கடற்றொழிலாளர்கள் போன்றோரின் நலன் கருதி எரிபொருள்களில் அதுவும் மண்எண்ணெயின் விலை அதிகரிப்பை மீளாய்வு செய்வது நல்லது என்று பாவனையாளர்கள் மத்தியில் கருத்து நிலவுகிறது.

**பா.நந்தகுமார்**
**அரியாலைச் செய்தியாளர்**

பெற்றோலின் விலை உச்சத்தில் உள்ளது. மாதாந்தம் ஏற்படும் விலை நிர்ணய தளம்பலால் அதன் விலை இரண்டு தடவைகள் திடீர் திடீரென அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 26ஆம் திகதி நள்ளிரவு பெற்றோல் லீற்றருக்கு 2ரூபாவால் அதிகரிப்புச் செய்யப்பட்டது. 18 நாள்களின் பின்னர் மீணடும் கடந்த 13ஆம் திகதி நள்ளிரவு முதல் லீற்றருக்கு 2ரூபாவால் அதிகரிக்கப்பட்டது.

மாறிமாறி எரிபொருள்களின் விலைகளில் தளம்பல் ஏற்படுவதால் பாவனையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குடாநாட்டில் மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை சடுதியாகப் பல மடங்கு அதிகரித்துள்ளது. இதனால் தினமும் பெருமளவு பெற்றோல் பயன்படுத்தப்படுகின்றது. பெற்றோலின் விலை அதிகரிப்பு, மோட்டார் சைக்கிள் ஓட்டிகளுக்கு அடிக்கடி எரிச்சலைக் கொடுப்பதை அவதானிக்க முடிகிறது. ★

## அல்லைப்பிட்டியில் சுகாதாரக் கருத்தரங்கு

அல்லைப்பிட்டி,பெப்.25

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தில் இன்று புதன்கிழமை பாடசாலை மாணவர்கள், பெற்றோருக்கான சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

வேலணை சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் இடம்பெறவுள்ள இக்கருத்தரங்கில் கண்பார்வை குறைந்த மாணவர்களுக்குக் கண்ணாடிகளும் வழங்கப்படவுள்ளன.(ஐ-ரி)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,பெப்.25

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ். மாவட்ட அலுவலகம் நடத்தும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் 'குருவருள்' என்ற பொருள்பற்றி சைவப் புலவர் கா.கமலநாதன் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (ஐ-4-ரி)

## கடலக எந்திரவியல் பயிற்சி

குருநகர்,பெப்.25

யாழ்ப்பாணம் கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரியில் எதிர்வரும் மே மாதம் தொடக்கம் கடலக எந்திரவியல் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்லூரி அதிபர் இ.செபஸ்தியாம்பிள்ளை தெரிவித்தார்.

இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் -

தமது சுயவிவரங்களை எதிர்வரும் ஏப்ரல் மாத முடிவிற்குள் கல்லூரி விலாசத்திற்கு அனுப்பி வைக்கலாம் எனவும் நேர்முகப் பரீட்சையின் பின்னர் தகுதியானவர்கள் இப்பயிற்சி நெறியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4-51)

# நெஞ்சம் நிறைந்த நன்றிகள்



முன்னர் நாட்டில் இடம்பெற்ற இடம்பெயர்வின்போது பல்வேறு இடங்களுக்கும் அலைந்து திரிந்து யாருமே கவனிப்பாரற்றுக் கிடந்த வசந்தபுரப் பகுதியில் குடிசைகள் அமைத்துப் பள்ளக்காணிகளில் வெள்ளத்தில் வாழ்ந்துவந்த 24 குடும்பங்களுக்கும் தானேநேரில் வந்துபார்த்து ஆறுதலும் தேறுதலும் கூறி எந்தவிதபிரதிபலனையும எதிர்பார்க்காது, இந்து-கிறிஸ்தவ வேறுபாடின்றி எல்லோரையும் ஒருங்கே சமமாகநோக்கி உயர்ந்த மனிதாபிமானப் பண்புடன், குடிசையில் வாழ்ந்த எங்களை கோபுரத்தில் உயர்த்தி வாழவைத்த மனிதருள்

மாணிக்கமான மாந்தருள் திலகமான
முன்னாள் அமைச்சர்,
இந்துசமய விவகார அமைச்சு
**மாண்புமிகு தியாகராஜா மகேஸ்வரன்**
அவர்களுக்கு

கரங்கூப்பிச் சிரந்தாழ்த்தி எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

அத்துடன் இரவு பகலென்று பாராமல் நேரகாலம் நோக்காமல் எங்களுடன் கூடவேயிருந்து பாடுபட்டவரான ஐயா தியாகராசா அவர்களுக்கும் நாம் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

*அராலி வீதி,*
*வசந்தபுரம்,*
*யாழ்ப்பாணம்.*
(28873)(37-11-18-32)

*உள்ளன்புடன் நன்றி கூறும்*
24 குடும்பத்தினர்.

## மாநகரசபை - யாழ்ப்பாணம்
## வெற்றுத் தார் பரல்கள் ஏல விற்பனை

யாழ்ப்பாணம் மாநகர சபையில் உள்ள வெற்றுத் தார் பரல்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன என்பதை அறியத்தருகிறேன்.

140 லீற்றர் வெற்றுத் தார் பரல் ஒன்று ரூபா 150/= வற் நீங்கலாக.

240 லீற்றர் வெற்றுத் தார் பரல் ஒன்று ரூபா 200/= வற் நீங்கலாக.

ஏலம் நடைபெறும் திகதி 02.03.2004 முற்பகல் 10 மணி.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
24.02.2004.
(சி-33440)(37-18-11-32)

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

## மெய்வன்மைப் போட்டிகள்

நவாலி,பெப்.25

நவாலி மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் பு. ஸ்ரீ விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம் கலந்துகொள்வார். (ஐ-ரி-100)

★ ★ ★

செம்பியன்பற்று,பெப்.25

மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் ம.நவநீதமணி தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வடமராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆர். இராசேந்திரம் கலந்துகொள்வார். (ஐ-ரி-36)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.25

பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்க வித்தியாலய வருடாநத இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிகது அதிபர் சு.பிலேந்திரராசா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வலிகாம வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் கலந்துகொள்வார். (ஐ-ரி-15)

★ ★ ★

செம்பியன்பற்று,பெப்.25

உடுத்துறை மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் எஸ்.அரியகுமார் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி கலந்துகொள்வார். (ஐ-ரி-36-10-173)


★ ★ ★

குருநகர், பெப்.25

நல்லூர் ஸ்தான சி.சி.த.க.பாடசாலையின் வருடாந்த இல்லமெயவன்மைப்போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் சி.ஞானேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ் கல்வி வலயத்தின் முகாமைத்துவ பிரதிக் கல்விப்பணிப்பாள யோ.இரவீந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். பாடசாலையின் முன்னாள் அதிபர் தநாகராஜா சிறப்பு விருநதினராகக் கலந்துகொள்வார்.(ஐ-4-51)

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் தியோகு இராயப்பு (சின்னப்பு)

பாசம் என்ற சொல்லுக்கும்
பதிவு என்ற சொல்லுக்கும்
அர்த்தம் தேடி அகராதிகளைப்
புரட்டினோம்! என்ன ஆச்சரியம்?
ஐயா அதில் எல்லாம் உங்கள் பெயர்!

*உங்கள் ஆத்மா சாந்திபெற கர்த்தரை வேண்டுதல் செய்கின்றோம்.*
*"என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"*
*-பைபிள்*

*சண்முகம் வீதி,*
*சங்கத்தானை, சாவகச்சேரி.*

*- உறவினர்கள்.*

(28880)(31-16-18)

## லொறி உதவியாளர் (கிளீனர்) தேவை

*தகுதியுடையோர்கள் உடன் நேரில் சமுகந்தரவும்.*
*தகுந்த வேதனம் வழங்கப்படும்.*

*யூரோவில்,*
*866, பருத்தித்துறை வீதி, நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*
(28879)(37-11-18-32)

## 31ஆம் நாள் நினைவலைகள்

*எமது கல்லூரி ஆசிரியர் திருமதி சகலகலாவாணி தேவகரன்*
*அவர்களின் அன்புத் தாய்*

**திருமதி தம்பித்துரை மங்கையர்க்கரசி**

அவர்களது மறைவு குறித்துத் துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்வதோடு, இன்று (25. 02. 2004) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் 31ஆம் நாள் நினைவஞ்சலியில் அவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமுகம்,
யா/இணுவில் இந்துக் கல்லூரி.

*இணுவில்.*
(28871)(37-18-11-32)

## கண்ணீர் அஞ்சலி



திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்தவரான எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய

**அரியகுட்டி நவரட்ணம்**

அவர்கள் 23.02.2004இல் இயற்கையெய்தியதையிட்டு நாம் மிகவும் மனவேதனை அடைகின்றோம். அன்னாரது மறைவால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அமரரின் ஆத்மா சாந்தி அடைய தலங்காவற பிள்ளையாரின் திருவடித்தாள்களை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

*திருநெல்வேலி கிழக்கு,*
*திருநெல்வேலி.*
(28878)(31-11-18-32)

- தலங்காவில் வாழ்
இளைஞர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## அரியகுட்டி நவரட்ணம்

திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த அரியகுட்டி நவரட்ணம் (முன்னாள் ஊழியர், ஸ்ரீலங்கா ரெலிக்கொம்) அவர்கள் 23-02-2004 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அரியகுட்டி - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற துரைராசா மற்றும் இராசலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் சித்திராதேவியின் அன்புக் கணவரும் சுஜிதாவின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற பரமேஸ்வரன், இராசேந்திரன் மற்றும் இராஜேஸ்வரி, மங்களேஸ்வரி, சறோயினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுபத்திராதேவி (ஆஸ்திரேலியா), கமலாதேவி (ஜேர்மனி), செல்லம்மா, புவனேஸ்வரி, காலஞ்சென்றவர்களான பூபாலசிங்கம், கதிரவேலு, விமலநாதன் மற்றும் பரமேஸ்வரன் (ஆஸ்திரேலியா), லோகேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் லோகேந்திரு, ஸ்ரீக்குமார் (VEEKAY CANDY LANDS, COLOMBO), சகதிக்குமார் (பிரான்ஸ), ஜெயந்திக்குமார் (கனடா), சுரேஸ்குமார் (லண்டன்), ஜெயந்தினி (லண்டன்), சுகிர்தினி (லண்டன்), கேதீசன் (பிரான்ஸ்), கோணேஸ்சன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சத்தியசீலன், சுதாமதி, சசிகலா (கனடா), அமிர்தகலா (இந்தியா), தயாளன், ஜெயாளன் (கனடா), சுகந்தன் (கனடா) ஆகியோரின் சிறிய தந்தையும் பாபுஷன், ராஜுஷன், அம்ருதா (ஆஸ்திரேலியா), வைஷ்னுசன், வினோஷன் (ஜேர்மனி) ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2004) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பதிவுக்காரர் லேன்,*
*திருநெல்வேலி கிழக்கு.*
(28877)(11-18-32)

தகவல்:-
திருமதி சி.நவரட்ணம்.
(மனைவி).

## செல்லப்பா கார்த்திகேசு (அம்மான்)

மாவிட்டபுரம், கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா கார்த்திகேசு அவர்கள் 23.02.2004 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லப்பா - சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மகனும் சிவகாமிப்பிள்ளை அவர்களின் அன்புக் கணவரும் கனகரட்ணம், காலஞ்சென்றவர்களான சின்னக்கண்டு, வள்ளிப்பிள்ளை, இளையபிள்ளை, அன்னம்மா, சின்னத்தங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (இளைப்பாறிய தபாலதிபர், சுன்னாகம்) மற்றும் சோதிலிங்கம் (சாரதி இலங்கை மின்சாரசபை, யாழ்.அலுவலகம்), சீதாதேவி, சற்குணலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலகிருஷ்ணனின் பெரியதந்தையும் கமலாதேவி, பரமேஸ்வரி, அருளானந்த குமாரசாமி (பாலு-லொறி உரிமையாளர்), மாதினி ஆகியோரின் அன்பு மாமனாரும் கோமதி, கோகிலன், மயூரன், ருத்திரகுமரன், சுதாகரன், காந்தரூபன், சஜிதா, நிஷாந்தினி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2004) புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கட்டுப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொந்தனை வீதி,*
*மல்லாகம்.*
(28874)(37-11-18-32)

தகவல்:
சோதிலிங்கம் (மகன்),
பாலு (மருமகன்).

## ஈர விழிகளினால் இதய அஞ்சலி



### செல்வன் தர்மகுலராஜா சஜீவன்

பிரான்ஸைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வன் தர்மகுலராஜா சஜீவன் அவர்களது மறைவு மிகுந்த மனவேதனையையும் ஆழ்ந்த அதிர்ச் சியையும் தருகிறது. இத்துயரத்தைத் தாங்கமுடியாமல் இக்கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாகச் சமர்ப்பித்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவை வேண்டுகின்றோம். பிரிவால் துயருற் றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 13.04.2003 | 23.02.2004 |

பிரிவால் துயருறும்:
மகாலிங்கம் சித்தப்பா குடும்பம்(யாழ்ப்பாணம்)
ஓங்காரலிங்கம் சித்தப்பா குடும்பம்(நயினாதீவு)

(சி-33444)(36-11-16)

## ஈர விழிகளினால் இதய அஞ்சலி



### செல்வன் தர்மகுலராஜா சஜீவன்

பிரான்ஸைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வன் தர்மகுலராஜா சஜீவன் அவர்களது மறைவு மிகுந்த மனவேதனையையும் ஆழ்ந்த அதிர்ச் சியையும் தருகிறது. இத்துயரத்தைத் தாங்கமுடியாமல இக்கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவை வேண்டுகின்றோம். பிரிவால் துயருற் றிருக்கும குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 13.04.2003 | 23.02.2004 |

பிரிவால் துயருறும்:
பகீரதன் மாமாகுடும்பம்(ஜேர்மனி),
மாமா முருகபத்மராஜா குடும்பம்(லண்டன்),
மாமா மனோகரன் குடும்பம் (பிரான்ஸ்),
சித்தப்பா சுமந்திரன்(லண்டன்).

(சி-33445)(36-11-16)

## முதலாமாண்டு நினைவலைகள்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 14 | 08 |
| 12 | 03 |
| 1937 | 2003 |



### அமரர் சின்னையா துரைசிங்கம்

ஆண்டொன்று சென்றாலென்ன
எங்கள் ஆருயிர் அப்பாவே!
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
எம் நெஞ்சம் மறக்காது

இருபாலை. (28885)(40-11-16) - குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### செல்வன தர்மகுலராஜா சஜீவன்

பிரான்ஸைப் பிறப்பிடமாகவும் வதி விடமாகவும கொண்ட செல்வன் தர் மகுலராஜா சஜீவன் 23.02.2004 அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார் தர்மகுலராஜா - செல்வகு மாரி தம்பதிகளின் பாசமிகு மகனும் சஜந்தினியின் அன்புச் சகோதரரும் நயினா தீவைச் சேர்ந்த சண்முகராஜா - வரத லெட்சுமி தம்பதிகளின அன்புப் பேரனும் மட்டுவில் தெற்கு திருமதி சின்னத் துரை - செல்வராணியின் பேரனு மாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உற வினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே.மு.சண்முகராஜா
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை ஆரம்பகர்த்தாவும், பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா பஜனை நிலையத்தலைவரும்.
பிரான்ஸ் T.P. No- 0033623778361
0153260689
நயினாதீவு-7 T.P.-0172-524573

(சி-33443)(36)


நிறஞ்சனாஸ் சங்கானை

ஜெய் (ரீல்ஸ்)
பிரசாந், அன்சூர் நடித்த
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
DUNGEONS DRAGONS
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
(C33384)(14-31)

ராஜா யாழ்ப்பாணம்





விஜயகாந்த், வடிவேல், பிரபுதேவா, பாண்டியராஜன் நடித்த (C-33050) (14-31)
எங்கள் அண்ணா
காட்சிநேரம் : 10.30. 2.30.6.30.9.30(பு.நே.) (ரீல்ஸ்)
27 முதல் ஆரி

நாகம்ஸ் சுன்னாகம்
புதிய டொல்வி ஒளிநயத்துடன்





தனுஸ் அர்ணா. கருணாஸ் (2 வேடம்) நடிப்பில்
(ரீல்ஸ்) சிறிவிலியன்
காட்சிநேரம் : 11.00,3.00,7.00.(பு.நே.)
அடுத்த வெளியீடு சேனா

லிபேட்டி அச்சுவேலி
விஜயகாந்த், சாக்ஷி, பிரகாஸ்ராஜ், மனோரமா நடித்த
வாஞ்சிநாதன்
(ரீல்ஸ்)
காட்சிகள்: 3.00, 7.00 (பு.நே.)
(சி-33049)(14-31)


## மஹோற்சவம்

நெடுந்தவு மேற்குக் கரமத்தைக் கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்ற சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. அடுத்த மாதம் 5 ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும் (ஒ-ரி)




சிவமயம்
இந்தியப் பரம்பரை ஜோதிடர் P.T.R. அவர்கள்
யாழ். புண்ணியபூமிக்கு மூன்றாவது முறையாக வருகை
திரு. P.T.R.
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் பார்க்கப்படும்.
திருமணத் தடங்கலா, காதலில் தோல்வியா, தீராத வியாதியா, உயர்கல்வியில் தடங்கலா, கடன் தொல்லையா?, தொழில்முன்னேற்றத் தடங்கலா?, புதிய தொழில் தொடங்கவேண்டுமா?, குழந்தைப்பாக்கியம் இல்லையா?, வெளிநாடு செல்லத்தடையா?
ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.
இடம்: பாலாஜி இன் விடுதி
292, கஸ்தூரியார் வீதி (கன்னாதிட்டி சந்தி அருகில்),
யாழ்ப்பாணம். (28875)(14-31)


## மரண அறிவித்தல்கள்

### தியோகு இராயப்பு (சின்னப்பு)

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட தியோகு இராயப்பு அவர்கள் 23.02.2004 திங்கட்கிழமை இறை பதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தியோகு தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்ற யோசேப்பு தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற அந்தோனியாப் பிள்ளையின் ஆசைக் கணவரும் காலஞ்சென்றவர்களான பெலவேந்திரன், விக்டோரியா, யோசேப்பு, மேரி, சிஸ்டர் மேரி, அலோசியஸ், ஆசீர்வாதம், செபஸ்ரியாம்பிள்ளை, திருமதி இசபெல்லா போல் (வவுனியா) ஆகியோ ரின் சகோதரனும் மேரி அஜ்னஸ் (சாவகச்சேரி), அஞ்சலா (ஹற்றன்), சாந்தி (கனடா), பீலிக்ஸ் (இத்தாலி), தேவிகா (இத்தாலி), அம்புறோஸ் (சுவிஸ்), பிபியா (கொழும்பு), அன்ரன் (இத்தாலி), லொறேற்றா (இத்தாலி), காமலீற்றா (கனடா) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் காலஞ்சென்ற ஸ்ரீபன் ஜோஜ், மெய்யநாதன் (ஹற்றன்), கண்ணதாஸ் (கனடா), கெங்கா (இத்தாலி), ரபீந்திரன் (இத்தாலி), தயா (சுவிஸ்), துரைச்செல்வம் (கொழும்பு), சமிலா (இத்தாலி), கிருஸ்ணகாந்த் (இத்தாலி), பேரழகன் (கனடா) ஆகியோரின் மாமனாரும் திருமதி சுபோதினி ஜனகன் (கனடா), தர்ஷினி, யூட்சன், பார்த்தீபன், ஷைனுகா, அருண், டெல்சிகா, மிதுனா, மிதோஷன், ஸ்ரெனிலா, ஸ்ரெவின், ஸ்ரீகான், தனுஷிகா, சுஜீவன், சாருங்கா, டாரிகா, பிரீத்திகா, பிரியந்திகா, பிருந்தா ஆகியோரின் ஆசைப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கச் சடங்குகள் இன்று (25.02.2004) புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் புனித லிகோரியாள் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த துக்கத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

*சண்முகம் வீதி,*
*சங்கத்தானை,சாவகச்சேரி.*
தகவல்:
R.பீலிக்ஸ், R.அம்புறோஸ்,R.அன்ரன.
(C-33433)(31-14)

### குமாரசாமி நாகராசா

யாழ்ப்பாணம், 826/5, காங்கேசன்துறை வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி நாகராசா 22.02.2004 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் அமரர் குமாரசாமி - அமரர் தையல்நாயகி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் துரைச்சாமி (ஆஸ்திரேலியா), காலஞ்சென்றவர்க ளான நாகேஸ்வரி, தங்கரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான கனகரட்ணம், ஜெயசிங்கம், திருமதி துரைச்சாமி ஆகியோரின் மைத்துனரும் லண்டனில் வசிக்கும் ரசிமலர், உதயகுமார், கீர்த்திக்குமார் மற்றும் ரவிக்குமார் (கனடா) ஆகியோரின் தாய் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2004) புதன்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*826/5, கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(28860)(31-14)
தகவல்:
சு.புண்ணியசீலன்.

### சின்னப்பு முத்துத்தம்பி

(அசெம்பிளி ஒவ் கோட் மானிப்பாய் ஊழியக்காரர்)

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு முத்துத்தம்பி நேற்று (24.02.2004) செவ்வாய்க்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற உருத்திராதேவியின் அன்புக் கணவரும் மயில்வாகனம், காலஞ்சென்ற நல்லையா மற்றும் பரமேஸ்வரி, தவமணி ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் சங்கரன் செல்லத்துரை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2004)புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக கோண்டாவில் கொட்டைக்காடு மயானத்திற்கு எடுத்துச செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஸ்ரீ நாராயண சனசமூக நிலைய வீதி,*
*கோண்டாவில் கிழக்கு.*
*கோண்டாவில்.*
(28882)(31-14)
தகவல்:
ச.செல்லத்துரை
(மைத்துனர்).

### திருமதி பொன்னம்பலம் செல்வரத்தினம்

வட்டுக்கோட்டை, சங்கரத்தையைச் சேர்ந்த திருமதி பொன்னம்பலம் செல்வரத்தினம் அவர்கள் 23.02.2004 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந் தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்புசின்னப்பு - நாகம்மா தம்பதிகளின அருமை மகளும் காலஞ்சென்ற பொன்னம்பலம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிறீதரன் மற்றும் சிறீகாந்தா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அருமைத் தாயாரும் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், நடராஜா, தாமோதரம்பிள்ளை மற்றும் இராசாத்தி, வள்ளியம்மை மற்றும் காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.02.2004) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்கரத்தை,*
*வட்டுக்கோட்டை.*
(28883)(31-14)
தகவல்:
த.வீரசுதன்.


Jayoda ஜயோதா ජයෝදා

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல 6077243 முதல் 6092127 வரை
சீட்டிழுப்பு இல.09 திகதி 23-02-2004

வெற்றி எண்கள் 7 2 0 8 1 4 சுப்பர் எண் 11

சுப்பர் ஜக்பொட் பரிசு 13,249,025/- வெல்லப்படவில்லை


| வெற்றி எண்கள் பெற்றோர் | வெற்றி தொகை | பரிசுத் | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 13,249,025/- | - |
| இடது பக்கத்திலிருந்து முதல் 6 எண்கள் | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 5 எண்கள் | 13 | 50,000/- | 650,000/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 4 எண்கள் | 130 | 5,000/- | 650,000/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 3 எண்கள் | 1,310 | 500/- | 655,000/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 2 எண்கள் | 13,083 | 50/- | 654,150/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 1 எண் | 129,651 | 10/- | 1,296,510/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 5 எண்கள் | 17 | 5,000/- | 85,000/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 4 எண்கள் | 129 | 1,000/- | 129,000/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 3 எண்கள் | 1,310 | 100/- | 131,000/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 2 எண்கள் | 12,960 | 20/- | 259,200/- |
| மொத்தம் | 158,605 | | 6,509,860/- |


வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ.6,509,860/-

இந்த வியாழக்கிழமைக்கான
சுப்பர் ஜக்பொட் ரூ.13,612,800/-

தொடர் இல. 7055057க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 பெப்ரவரி 26ம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்
6077713-1-57
6079420-3-31
6089827-6-26
6083920-5-00
6085122-6-84

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொழும்பு 3.
யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர், 34, கந்தப்பசேகரம் வீதி, (பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

# தேர்தல் களத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்பில் நிறுத்தியிருக்கின்றன. ஐக்கிய தேசிய முன்னணி நிறுத்திய தமிழர்களில் ஒருவர் முன்னாள் அமைச்சர் தியாகராஜா மகேஸ்வரன் ஆவார்.

டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பியும் ஆர்.பி.ஸ்டீவன் தலைமையில் கொழும்பில் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது.

வடக்கு - கிழக்கிலும், மலையகத்திலும் போட்டிகள் கடுமையாய் உள்ளன. கடந்த பொதுத் தேர்தலின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகப் போட்டியிட்டவர்கள் இம்முறை இரண்டாகப் பிரிந்து போட்டியிடுகின்றனர். கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரி சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடுகின்றார். ஏனையோர் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடுகின்றனர். ஆனந்தசங்கரியின் சுயேச்சைக்குழுவுக்கு பூட்டுச் சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மலையகத்தில் ஐ.தே.முன்னணியுடன் இணைந்து போட்டியிட்ட மலையக மக்கள் முன்னணி இம்முறை நுவரேலியா மாவட்டத்தில் தனித்து 'மண்வெட்டி' சின்னத்தில் போட்டியிடுகிறது. கண்டியிலும், கொழும்பிலும் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்தே அது போட்டியிடுகின்றது.

வழமைபோல இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கொழும்பு, கண்டி, மாத்தளை, பதுளை, நுவரேலியா ஆகிய மாவட்டங்களில் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து போட்டியிடுகின்றது.

நுவரேலிய மாவட்டத்தில் ஐக்கியதேசிய முன்னணி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா தலைமையிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சி.பி.ரட்ணாயக்கா தலைமையிலும் மலையக மக்கள் முன்னணி அமைச்சர் சந்திரசேகரன் தலைமையிலும் களத்தில் குதித்துள்ளன.

கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தேசிய ஐக்கிய முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் கட்சி, ஐக்கிய முஸ்லிம் மக்கள் கூட்டமைப்பு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி. ஆகியவை உட்பட பல அரசியல் கட்சிகளும் மொத்தம் 41 சுயேச்சைக் குழுக்களும் களத்தில் இறங்கியுள்ளன.

இத்தேர்தலில் போட்டியிடும் முக்கிய அரசியல் கட்சிகளின் விவரம் வருமாறு:-

ஐக்கிய தேசிய முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி, ஐக்கிய சோஷலிசக் கட்சி, இலங்கை முற்போக்கு முன்னணி, மகா சம்பத பூமிபுத்திர கட்சி, தேசிய ஹெல உறுமய, ஐக்கிய மக்கள் முஸ்லிம் கட்சி, தேசிய அபிவிருத்தி முன்னணி, புதிய இடதுசாரி முன்னணி, ஐக்கிய இலங்கைச் சுதந்திரக் கூட்டமைப்பு, லிபரல் கட்சி, சுயராஜ்ய கட்சி, இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, ருஹுனு மக்கள் கட்சி, ஐக்கிய லலித் முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, மலையக மக்கள் முன்னணி, இலங்கை ஐக்கிய தொழிலாளர் முன்னணி.

எல்லா மாவட்டங்களிலும் சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடுகின்றன.

ஐக்கிய தேசிய முன்னணியின் கொழும்பு மாவட்டத்திற்கான வேட்பு மனுக்களை அமைச்சர்களான கலாநிதி கருணாசேன கொடிதுவக்கு, எம்.எச்.முஹமது காமினி லொக்குகே ஆகியோர் நேற்றுக் கையளித்தனர். இவர்களுடன் அமைச்சர் பந்துல குணவர்த்தன, முன்னாள் அமைச்சர் தி. மகேஸ்வரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.யோகராஜன் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

மட்டக்களப்பில் ஸ்ரீல.மு.காங்கிரஸின் நியமனப் பத்திரங்களை பஷீர் சேகுதாவுத் கையளித்தார்.

ஈ.பி.டி.பி. வடக்கு - கிழக்கு மற்றும் கொழும்பு உட்பட 6 மாவட்டங்களில் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது.

மட்டக்களப்பில் 14 கட்சிகளும் 8 சுயேச்சை அணிகளும் போட்டியிடுகின்றன. அங்கு ஈ.பி.டி.பியும் வேட்பு மனுவைத் தாக்கல் செய்துள்ளது.

அம்பாறையில் தேசிய ஐக்கிய முன்னணித் தலைவி பேரியல் அஷ்ரப், எம்.எல்.ஏ.எம்.அதாவுல்லா ஆகியோர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தனர். இங்கு 14 கட்சிகளும் 27 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

திருகோணமலையில் 10 கட்சிகளும் 6 சுயேச்சைக் குழுக்களும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

பதுளை மாவட்டத்தில் மலையக மக்கள் முன்னணியின் வேட்பு மனுவை அரவிந்தகுமார் தாக்கல் செய்தார். மக்கள் ஐக்கிய சுதந்திரமுன்னணியில் இரண்டு தமிழர்களும் ஐக் கிய தேசியக் கட்சியில் மூன்று தமிழர்களும் இதில் இடம்பெற்றிருந்தனர். எனினும், இந்த வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுவிட்டன.

## கைதடி மினிபஸ் விபத்து: கைதானவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு!

கைதடி நுணாவிலில் கடந்த 12ஆம் திகதி இடம்பெற்ற மினிபஸ் விபத்துத் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மினிபஸ்ஸின உரிமையாளர் மற்றும் சாரதி ஆகியோரை தொடர்ந்து எதிர்வரும் மார்ச மாதம் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த இருவரையும் பிணையில் விடுமாறு இவர்களின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மனு சமர்ப்பித்திருந்தார். ஆயினும், பொலீஸார் இவர்களைப் பிணையில் விடுவிப்பதற்கு ஆட்சேபம் தெரிவித்தையடுத்து அவர்கள் இருவரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-117)

## புரிந்துணர்வு....

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)
சமாதானத்தையுமே பாதித்துவிடும் எனவும் பிரிட்டிஷ் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியிலான அமைதித்தீவு ஒன்று காணப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும் எனவும் -

அதற்காக சகல அரசியல் கட்சிகளும் உளப்பூர்வமாகப் பங்களிக்க வேண்டும் எனவும் - அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

அத்துடன், இந்தச் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வரும் நோர்வே அரசு மற்றும் கண்காணிப்புக்குழு ஆகிய தரப்புகளுக்கு தமது நாட்டின் சார்பாகப் பாராட்டுத் தெரிவிப்பதாகவும் அவர் கூறினார். (ஒ-4)

## யாழ். மாவட்டத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யும் -

முகமது ராபி தலைமையில் சுயேச்சைக்குழு இரண்டும் -

வண. விதரந்தியோ மேதாநந்த தேரர் தலைமையில் தேசிய ஹெல உறுமயவும் - போட்டியிடுகின்றன.

இராணுவக் கட்டுப்பாடற்ற பல்லவராயன் கட்டைச் சேர்ந்த ஏழு பேர் சுயேச்சைக் குழு இரண்டில் போட்டியிடுகிறார்கள்.

முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்கள் வருமாறு:-

சு.சுபியான், அ.இக்பால், எஸ்.எம். மனாட்டீன், எம்.எஸ்.மொஹமட் [illegible], எ.எஸ்.நவாஸ், எம்.ஏ.நௌபர், பி.லெபல், எம்.எஜ்.ஜன்சி, கே.அமீர் அலி, எஸ்.எம்.சுபீட், எம்.எஸ்.தாஜுடின், கே.ஹபீட்.

ஈ.பி.டி.பி. வேட்பாளர்கள் வருமாறு:-

டக்ளஸ் தேவானந்தா, வி.கே. குகேந்திரன், ந.மதனராஜா, க.மணி பல்லவராஜன், சி.தவராசா, க.பால நடராஜா ஐயர், தி.ஸ்ரீதரன், ச.சிவதாசன், து.பாஸ்கரன், மகேஸ்வரி வேலாயுதம், த.சிவகுமாரன், வி.சீவரத்தினம்.


### நடனமுருகன் வைத்திய நிலையம்

222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

பார்வையிடும் நேரம்:
காலை 9.00 மணி -2.00 மணிவரை
மாலை 3.30 மணி - 8.00 மணிவரை
டாக்டர் க.நவரத்தினம் D.A.M & R.I.M.P.(cye).
டாக்டர் S.பேரின்பநாயகம் R.M.O(cey) T.P. 222.3635

(28852)(36-14)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னத்தங்கம் பொன்னம்பலம்

கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தங்கம் பொன்னம்பலம் அவர்கள் நேற்று (24.02.2004) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புத் தங்கையும் சறோஸ்மலர், சரஸ்வதி, சிவராசா (உழவு இயந்திர உரிமையாளர்), சிவகுமார் (கனடா), தங்கமணி, ஜெயக்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் கந்தசாமி (ஓய்வுபெற்ற C.T.B காசாளர்), சுப்பிரமணியம், சந்தானலட்சுமி, சுகந்தி (கனடா), கணேசானந்தன் (நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனியா), ராகினி ஆகியோரின் அன்பு மாமியாரும் சுதர்சினி, சுதர்சன், தர்சினி, சுரேந்திரன், சுதாகர், சாந்தமலர், சுதந்தன், சுமதி, சுகந்தி, சுரேந்திரன், சித்திராதேவி, சுரேன், சிவனுயா, சிவாநந்தினி, சியானி, சுயன், மயூரதி, அஜந்தினி, ஜெய்சன், ஜனனி, ஆரணி, சித்திரா, ஜீவகன், மதன், சிந்துஜா, கோபிகா, சிரோமி, யஸ்மீரன், மித்திரா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2004) புதன்கிழமை பி.ப 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*கல்வயல்,*
*சாவகச்சேரி.*
(28886)(40-14-36)

தகவல்:
மகன் பொ.சிவராசா(சிவா),
மகன் பொ.ஜெயக்குமார் (ராசா).

### செல்லப்பர் குமாரசாமி

(இளைப்பாறிய ஆய்வு கூட உத்தியோகத்தர்)

இளவாலை வடக்கை சேர்ந்தவரும் காலஞ்சென்றவர்களான நாகநாதர் செல்லப்பா (இளைப்பாறிய தபாலதிபர்) - வள்ளியம்மை தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற இரத்தினம்மா மற்றும் செல்வராணி ஆகியோரின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம் (இளைப்பாறிய ஓவசியர்), கனகநாயகம் (இளைப்பாறிய தபாலதிபர்), காலஞ்சென்ற ஞானேஸ்வரி ஆகியோரின் அருமைச் சகோதரரும் கமலாம்பிகை காலஞ்சென்றவர்களான சிவானந்தவல்லி, சுப்பிரமணியம் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் பா.தர்மபாலா (பொறியியல் அதிகாரி வட பிராந்திய போ.சபை காரைநகர்), ஜனநாயகம் (U.K) ஆகியோரின் சிறிய தகப்பனாரும் இராஜேஸ்வரி, மகேஸ்வரி, புவனேஸ்வரி, ஜெகதீசன் (கனடா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பி.ப.1.30 மணியளவில் இளவாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, முள்ளானை மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இளவாலை வடக்கு,*
*இளவாலை.* (28889)(17-11-31)

தகவல்:
பா.தர்மபாலா (பெறாமகன்).

### சின்னையா பொன்னுத்துரை

(முன்னாள் வர்த்தகர், வெளியத்தை)

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா பொன்னுத்துரை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நவரத்தினம், சிவஞானம், செல்லம்மா, அருளம்மா, தர்மலிங்கம் மற்றும் இரத்தினம்மா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (25.02.2004) புதன்கிழமை பி.ப.2.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஸ்ரேசன் வீதி,*
*காளிகோவிலடி.*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.* (28890)(40-11-17-31)

தகவல்:
V.S.ரத்தினம் (மச்சான்)
காலி வர்த்தகர்.


# TOSHIBA



TOSHIBA போட்டோ கொப்பியர்கள், ரோனர்கள், உதிரிப்பாகங்களையும் மற்றும் அனைத்துவிதமான கணணிகள், கணணி உதிரிப்பாகங்களையும் யாழ்நகரிலேயே மிகக்குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே ஒரு நிறுவனம்.



TOSHIBA FROM JOHN KEELLS

யப்பானிய தொழில்நுட்பத்துடன் கூடிய உலகத்தரம் வாய்ந்த TOSHIBA உற்பத்திகளுக்கான வட இலங்கையின் ஏகமுகவர்

## IIS Office Automation

No. 360/3, Main Street, Jaffna. TP No.: 222 7676 / 4 590 190

## யாழ் மண்ணிலேயே முதன்முறையாக....

இந்தியாவின் **praba's Institute of health care management** நிறுவனங்களின் இயக்குநரும் தியாகராஜர் **Poly Tecnic** மற்றும் காமராஜர் பல்கலைக் கழகத்தினதும் (மதுரை) விரிவுரையாளருமான



### திருமதி பிரபாரெட்டி(M.A., M.S.)

அவர்களாலும் அவரது குழுவினராலும் இரண்டு நாள் அழகுக்கலை பயிற்சி வகுப்புக்களையும் அதனைத் தொடர்ந்து ஐந்து நாள்களுக்கு செய்முறைப் பயிற்சிகளையும் வழங்கவுள்ளார்கள்.

இப்பயிற்சி வகுப்பினை முன்னிட்டு 29.02.2004 ஞாயிறு காலை 9.30 மணிக்கு *நாவலர் கலாசார மண்டபத்தில* இலவச கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு பயன்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

தொடர்புகளுக்கு: 071 2 346781
024 589743

*முக்கிய குறிப்பு:* மேற்படி பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றும் அனைவருக்கும் திருமதி பிரபாரெட்டி அவர்களினால் சான்றிதழ் உடன் வழங்கப்படும்.

(28881)(36-1 4)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.02.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.